அருணாசல புராணம்



ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன், சென்னை-1.

...பிரைட்] [விலை ரூ. 2-1.50

திருவண்ணாமலை ஸ்தல புராணம்

என்னும்

அருணாசல புராண வசனம்

சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தர முதலியாரால்
இயற்றப்பட்டது.

இதில் படங்களும் புதிய விஷயங்களும்
சேர்க்கப்பட்டுள்ளது

K. A. மதுரை முதலியார்

ஷண்முகானந்த புத்தகசாலை,

48, நைனியப்ப நாய்க்கன் தெரு,

பார்க்டவுன். சென்னை-3

காபிரைட்] [விலை ரூ. 2

பொருளடக்கம்

1 திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள்
2 அநாசாரம்
3 சிவாலய தரிசனவிதி
4 கிரிபிரதக்ஷண விதி
5 தீபவிதி
6 தீபதத்துவம்
7 கார்த்திகை தீபச்சிறப்பு
8 சைவசமயி
9 சைவ சமயம்
10 திருநகரச்சருக்கம்
11 திருமலைச் சருக்கம்
12 திருவவதாரச் சருக்கம்
13 திருக்கண் புதைந்த சருக்கம்
14 இடப்பாகம் பெற்ற சருக்கம்
15 வச்சிராங்கத பாண்டியன் சருக்கம்
16 வல்லாள மகாராஜன் சருக்கம்
17 தீர்த்தச் சருக்கம்
18 திருமலை வலம்புரிச் சருக்கம்
19 ஆதித்த சருக்கம்
20 பிரதத்தராஜன் சருக்கம்
21 பாவந் தீர்த்த சருக்கம்
22 புளகாதிபன் சருக்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவண்ணுமலை ஸ்தல புராணமென்னும்

அருணசல புராண

வசனம்

திருக்கோயிலிலும் திருவீதியிலும்

செய்யத்தகாத குற்றங்கள்

(1) ஸ்நானஞ் செய்யாது போதல், (2) தோய்த்துலராத வேட்டி தரித்துக்கொண்டு போதல், (3) கால் கழுவாது போதல், (4) ஆசௌசத்துடனே போதல், (5) தலையில் வஸ்திரந்தரித்துக் கொள்ளுதல், 6) சட்டையிட்டுக் கொள்ளுதல். (7 போர்த்துக் கொள்ளுதல், 8) மேல்வேட்டி போட்டுக்கொள்ளுதல். (9) பாதரக்ஷை இட்டுக் கொள்ளுதல் (10) வாகன மேறிப்போதல், [11] குடைபிடித்தல், (12) வெற்றிலை பாக்கு அருந்துதல், (13) துப்புதல், (14) மலசலங்கழித்தல், (15) மூக்குநீர் சிந்துதல், [16] மயிர்கோதி முடித்தல், [17] சூதாடுதல், [18] சிரித்தல், [19] சண்டையிடுதல் [20] வீண்வார்த்தை பேசுதல், [21] காமப்பற்றுறத்தல், (22 காலைநீட்டிக் கொள்ளுதல், 23) சயனித்தல், 24) ஆசனத்திருத்தல், (25) சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போகுதல், [26] சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல், [27] சுவாமிக்கு நேராகக் காலை

நீட்டி அங்கப்பிரதக்ஷிணம் பண்ணுதல், 28 நிருமாலியத்தை கடத்தல், 29 நிருமாலியத்தை மிதித்தல். 30 தூபி துஜஸ்தம்பம், பலிபீடம், விக்கிரகம். இவைகளின் நிழலை மிதித்தல், 31 விக்கிரகத்தைத் தொடுதல்.

இவைகளை அருணகிரி புராணம் வலம்புரிச்சருக்கத்தில் 90-வது செய்யுள் முதலியவற்றில் பார்க்கக் காணலாம்,

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள், நரகத்தில் தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களுஞ் சொல்லுகின்றன. குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப்போய் பாவத்தைத் தேடிக் கொள்வது புத்தியன்று: எல்லாரும் இந்தக் குற்றங்களை நீக்கி விதிப்படி தரிசனஞ்செய்து, திருவருள் கடாக்ஷம் பெற்று உய்யக்கடவர்.

இந்தியாவிலே உத்தியோகஸ்தர் அனேகர் சுவாமி சந்நிதானத்திலே விதிக்கு விரோதமாக சட்டை இட்டுக்கொண்டும். போர்த்துக்கொண்டும்,மேல்வேட்டி போட்டுக்கொண்டும், தலையில் வஸ்திரந் தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள் தங்கள் சமயத்தில் விசுவாசம் உடையவர்களானால் இப்படிச் செய்வார்களா? கிருஸ்தவர்களுக்குள்ளே கவர்னர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களுந் தங்கள் கோயில்களுக்குத் தங்கள் சமயக் கிரமப்படி போவதை அவர்கள் காணவில்லையா; தங்களிற்றாழ்ந்த மனிதர்கள் தங்களெதிரே பாதரக்ஷை இட்டுக்கொண்டாயினுங் குடை பிடித்துக் கொண்டாயினும் நின்றால் அவர் கோபிக்கிறார்களோ? இது குற்றம் என்று கொண்டவர்கள் இந்தக் குற்றத்தைத் தாங்கள் சுவாமி சந்நிதானத்திலே செய்யத் துணிவது என்ன அறிவு?

திருக்கோயிறன்னின் மலஞ்சலம்விடுதல் உமிழ்தல் திருவிளக்குச்சாயை யிலிங்கச்சாயை கடத்தல் ஒருகாலாய்வலம் வருதல், ஓடிவலம் வருதல், ஒன்றோடி வேசியாய்ப் புணர்தலுற்றவரை நினைத்தல் மருக்கமழ் நிர்மாலியத்தைச் சிவன்றனைக் கோமுகையை கடத்தல், ஆடையின்றி மருவுதல், கான்றுமிழ்தல். மெருக்கஞ்றணியாமை! பெலிப்புற்று மிதித்தல், பெலிபீடங் குறுக்கிடுதல். பெருமான் சந்நிதியில்,

ஏறுடனே தூபிசதண்டு பலிபீடப் இலிங்கமிவைசாயை மிதித்தேகுதல் பொய்மொழிதல், பேரிழவேயு சுசி பிறர்தாரத்தை விரும்பல், பெரும்பனலாலிருபாதங் கழுவாமை, சயனம், தேறுபாகிலை தின்றம்பலமூமிழ்தறிருட்டல் திருக்கோயினியமத்தைச் தெய்வத்தோர் தங்கட் காறணியுஞ் சடைமுடியா ராகமத்திற் சொலுமிவ்வாவறந் தோடிரண்டு குற்றபாகா வன்றே.

இக்குற்றங்கள் அபுத்திபூர்வமாக நேரின் வேதத்திலுள்ள உருத்திர மந்திரத்தை ஆயிரமுருச் செபிக்கின் குற்றமகலும். அவ்வேதவாக்கிய மந்திரங்களை உச்சரித்தற்கு அருகரல்லாதவர் அகோர மந்திரத்தை ஆயிரமுரு செபிக்கக் கடவர். இக்குற்றங்களைப்புத்தி பூர்வமாகவே யியற்றின் தப்பாது எரிவாய் நிரயத்தில் அழுந்துவது திண்ணம். இதற்கு பரிகாரமுமில்லை என்பது வேதாகம புராணுதிகளின் துணிபாகலின் ஆலயத்திலே புண்ணியத்தை நாடிப்போய் இந்நகைய செயல்களால் பாவத்தைத் தேடிக்கோடல் முறையன்று ஆகையால் இவற்றுள் ஒன்றினையுமியற்ருது தமக்கு விதித்தவாறே அவ்வவ் வெல்லையினின்று சுவாமி தரிசனஞ் செய்து திருவருளைப் பெற்று மீள்வதே கடமையாம்.

சுபம்! சுபம்! சுபம்!!!

திருக்கோயிற் குற்றங்கள்

முற்றிற்று.

சிவமயம்

அநாசாரம்

(1) மற்சம் மாமிசம் புசித்தல். (2) கள்ளு சாராயங் குடித்தல். (3) மற்சம் மாமிசம் புசிப்பவர், கள்ளுஞ் சாராயம் குடிப்பவர், தாழ்ந்த சாதியார், அன்னியசமயிகள் என்கிற இவர்களிடத்தாவது, இவர்களுடன் இருந்தாவது, இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல் (4) சனன மரண சௌசம் உடையவரிடத்தே போசனம் பண்ணுதல் (5) போசனஞ் செய்தவுடனே எச்சில் தெளியாது விடுத்தல். (6) எந்தப் பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல். (7) பலகாரம் பழம் முதலியவைகளை எச்சில் பண்ணிப் புசித்தல் (8) புகையிலையைச் சுருட்டுப் பிடித்தல். (9) வெற்றிலை பாக்கு வாயிலிருக்கச் சயனித்தல் (10) காலையிலே தந்த சுத்தி பண்ணு முன்னே வெற்றிலைப் பாக்கு போடுதல் (11) வாயோடு கையுங் கையோடு பாத்திரத்தையும் அணைத்து எச்சில் பண்ணித் தண்ணீர் குடித்தல். (12) வீட்டு முற்றத்திலும் கிணற்றங்கரையிலும் குளக்கரையிலும் ஆற்றங்கரையிலும், பூந்தோட்டத்திலும், மலசலங்கழித்தல் (13) ஸ்நானத்துக்குஞ்சமையலுக்கும் உபயோகபடுகிறசலத்திலே சௌசம் பண்ணுதல். (14) கிணற்றங்கரையிலே சௌசம் பண்ணுதல். (15) சௌசத்தின் பொருட்டுப் பாத்திரத்திலே சலம் கொண்டு வைத்துக் கொள்ளாது மலசலங்கழித்தல் (16) சௌசம் செய்தவுடனே தந்தசுத்தி செய்தவுடனும் போசனஞ் செய்தவுடனும் வாய் கொப்பளித்துக் கால் கழுவாது விடுதல். (17) க்ஷௌரம் பண்ணுவித்துக் கொண்டாலும் துக்கவீட்டுக்குப் போனாலும் உடுத்த வஸ்திரத்துடனே முழுகாது விடுதல். [18] முகக்ஷௌர மாத்திரம்

பண்ணுவித்துக் கொள்ளுதல். 19 மத்தியானத்துக்குப் பின் க்ஷௌரம் பண்ணுவித்தல் 20 தைச்சங்கிராந்தியினும் ஆசௌசமுடிவிலும் பழைய மட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல். 21 மட்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியில் வைத்தல், 22 பாண்டங்களை காகம் நாய் முதலியவைகளெல்லாம் தீண்டவிடுதல், 23 எச்சில் முதலியவைகளை ஓரத்திலே துப்பாது வழியிலே துப்புதல், கஞ்சா அபினி உண்ணல், இந்த அநாசாரங்களை எல்லாரும் விலக்கித்திருத்த முற நடக்கக்கடவார்கள்.

அநாசாரம் முற்றிற்று.

ஓம்

சிவாலய தரிசன விதி

1: சைவசமயிகள் நாள்தோறும் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி சிவதரிசனஞ் செய்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பல் வேண்டும்.

2. சிவதரிசனஞ் செய்ய விரும்புவோர் சிவாலயத்துக்குச் சமீபத்தில் உள்ள சிவ தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்து, கரையிலேறி சரீரத்திலுள்ள உலர்ந்த வஸ்திரத்தினாலே துவட்டி, நெற்றியில் விபூதிதரித்து, குடுமியை முடித்து ஈர கௌபீனத்தைக் களைந்து. உலர்ந்த கௌபீனந் தரித்து, கைகளிரண்டையும் சுத்தி செய்து, தோய்ந்துலர்ந்தனவாய் வெள்ளியனவாயுள்ள சுத்த வஸ்திரம் இரண்டு அரையிலே தரித்து, அனுட்டானமும் செபமும் முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர் ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக்கோயிலுக்குப் போவோர் சிவத்துரோகரை ஒப்பர்

3. திருக்கோயிலுக்குப் போம்பொழுது, ஒருபாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்குவெற்றிலை முதலியவைவைத்து அரைக்குக்கீழ்ப் படாதுமேலே வுயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர், சிவபெருமானையும் சிவாக்கினியையும் ஆசாரியரையும் சேவிக்கபோமிடத்து, வெறுங்கையுடனே போகாது. தம்மாலே கொடுத்தற்கியன்ற பதார்த்தத்தை அவர்சந்நிதியிலேவைத்து வணங்குதலே தகுதி, பொருளில்லாதவன் பத்திர புட்பங்கள் கொடுத்து வணங்கல் வேண்டும் அதுவுங் கூடாதவன் சந்நிதியில் செத்தை முதலியவைகளைப் போக்கி வணங்கல் வேண்டும்.

4. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால்நமஸ்காரம் பண்ணக்கடவர்

5. ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்கமாக நமஸ்காரமும் பண்ணல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

6. அட்டாங்க நமஸ்காரமாவது: தலை கையிரண்டு செவியிரண்டு மோவாய்,புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும் படி வணங்குதல், பஞ்சாங்க நமஸ்காரமாவது. தலை கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். திரயாங்க நமஸ்காரமாவது: சிரசிலே இரண்டு கைகுவித்தல்.

7. நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும் ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாமாயினும் பண்ணல்வேண்டும் இருதரம் பண்ணுதல் குற்றம்

8. நமஸ்காரம் பண்ணுமிடத்து, மேற்கேயினும் தெற்கேயினும் கால் நீட்டல்வேண்டும். கிழக்கேயினும் வடக்கேயினும் கால் நீட்டலாகாது.

9, கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு அக்கினி மூலையினும். தெற்கு நோக்கிய சந்நிதியிலும், மேற்கு நோக்கிய சந்நிதியிலும். பலிபீடத்துக்கு நிருதி மூலையினும் வடக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு வாயுமூலையினும், சிரசை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும், மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச்செய்து நமஸ்காரம் பண்ணக்கடவர்.

10. பின்பகலிலே சூரிய கிரஹணமாயினும் சங்கிராந்தியாயினும் வரின், அப்பொழுது தரிசனஞ் செய்யப் போனவர், மேற்கே கால் நீட்டலாகாமை நோக்கிய சந்நிதியிலும் அட்டாங்க பஞ்சாங்கநமஸ்காரம் பண்ணாது திரயாங்க நமஸ்காரமாத்திரம் பண்ணல் வேண்டும்,

11. மேற்சொல்லியபடி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு சிவபெருமானைச் சிறிதும் மறவாத சிந்தையோடு ஜபங்கொண்டாயினும், இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக் கொண்டாயினும் பூர்ண கர்ப்பிணியானவள் காலிலே விலங்கு பூட்டப் பட்டவளாய் எண்ணெய் நிறைந்த குடத்தை சிரசின்மேல் வைத்துக்கொண்டு நடத்தல் போல ஜந்துக்கள் வருந்துமேயென்று மனம் உருகி பூமியைப் பார்த்துக்கொண்டு கால்களை மெல்லவைத்துப் பிரதக்ஷிணம் பண்ணக் கடவர்.

12, சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும் பதினைந்து தரமாயினும், இருபத்தொருதரமாயினும், பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

13. விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டுதரமும் பார்வதி தேவியாரையும், விஷ்ணுவையும் நான்கு தரமும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

14. பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபிநிழலேனும், துசத்தம்ப நிழலேனும் இருப்பின் அந்நிழலில்மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூறினுள்ளே செல்லக்கடவர். கடவுள் உற்சவங் கொண்டருளுங் காலத்திலே உடன் சொல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காதுசெல்லலாம்

15. அபிஷேக காலத்தில் உட்பிராகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.

16. பிரமசாரிகள் வலம் வரக்கடவர், கிருகத்தரும் வானப்பிரத்தரும் வலமும், இடமுமாக வரக்கடவர். சந்நியாசிகள் இடம் வரக்கடவர். வலஞ்செய்தலினாலே போகமும். இடஞ்செய்தலினாலே மோக்ஷமும் வலமுமிடமுஞ் செய்தலினாலே போக மோக்ஷமும் உண்டாகும்,

17. வலமு மிடமுஞ் செய்தல் :கர்ப்பக்கிருகத்தில் என்று சுவாயம் புவத்திலே சொல்லப்பட்டது. கர்ப்பக்கிருகத்துப் பிரதக்ஷணம் பூசகராகிய சிவப்பிராமணருக்கு மாத்திரம் விதிக்கப்பட்டது, கர்ப்பக் கிருகத்திலே சிவலிங்கச் சாயையும், நிருமாலியத்தையும், சோம சூத்திரத்தையும் கடவாது வலமிடஞ் செய்தல் வேண்டும். கர்ப்பக் கிருகத்தில் வலமிடமும் வெளிப்பிரகாரங்களில் வலமும் செய்தல் வேண்டுமென்று காலோத்தரத்தில் விதிக்கப்பட்டது:

18. பிரதக்ஷணம் பண்ணும் ஆவரணத்தில் உள்ள பலி பீடத்தையும். இடபத்தையுஞ் சேர்த்துப் பிரதக்ஷணம் பண்ணக்கடவர். தாம் பிரதக்ஷணம் பண்ணும் ஆவரணத்திலே பலிபீடமும், இடபமும் இல்லையாயின் அதற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள பலி பீடத்தையும், இடபத்தையுஞ் சேர்த்துப் பிரதக்ஷணம் பண்ணக்கடவர். சிவலிங்கத்துக்கும் அந்தந்த ஆவரணத்தில் உள்ள பலிபீட இடபங்களுக்கும் இடையே போகலாகாது. இப்படி காலோத்தராகமத்திலே சொல்லப்பட்டது.

19. மேற்சொல்லியபடி பிரதக்ஷிணம் பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரஞ்செய்து எழுந்து கும்பிட்டு துவார பாலகரைவணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்தி தேவரை வணங்கித் துதித்து "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்த அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போகக் கடவர்,

20. முன்னே விக்கினேஸ்வரருடைய சந்நிதியை அடைந்து இரு கைகளையுங் குவித்து அவரை தரிசித்து மனதிலே தியானித்து. மூட்டியாகப் பிடித்த இரண்டுகைகளினாலும் நெற்றியிலே மும்முறை குட்டி வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து தோத்திரம் பண்ணக் கடவர்.

21. பின்பு இரு கைகளையுஞ் சிரசிலே குவித்துக் கொண்டு சிவபெருமானுடைய சந்நிதியை அடைந்து, அவரைத் தரிசித்து மனதிலே தியானித்து சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து மனங்கசிந்துருக, உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்த அருவி சொரிய மூப்பத்திரண்டறங்களுள் அவ்

வக்காலத்துக்கு ஏற்ற இராகத்துடன் தோத்திரங்களைச் சொல்லக் கடவர்.

22. உத்தமோத்தமமாகிய தோத்திரங்கள் தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருவருட்பா என்னும் அருட்பாக்களாறுமாம்.

23. சிவபெருமானைப் பூசகரைக்கொண்டு வில்வத்தினாலே அர்ச்சனை செய்வித்து, விதிப்படி சுத்திசெய்யப்பட்ட பழமுதலியவற்றை நிவேதிப்பித்து,கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணி பூசகருக்கு இயன்ற தக்ஷிணை கொடுக்கக் கடவர்.

24. சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும் பிராமணர்கள். அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகாமண்டபத்திலும். புகுந்து, சிவமூல மந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்யக்கடவர். வைஸியர் இடபத்துக்கு முன்னும், சூத்திரர் இடபத்துக்கு பின்னும் கோமயத்தினாலே சதுராச்சிரமாக இடம் பண்ணி சிவமூலமந்திரத்தினால் அர்ச்சிக்கக் கடவர் இப்படி அஞ்சுமான் என்னும் ஆகமத்திலே சொல்லப் பட்டது.

25. பின்பு சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ் கந்தர் சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயசாரியர்கள் நால்வரையும் வணங்கி துதிக்கக் கடவர்.

26. அதன்பின் பார்வதி தேவியாருடைய சந்நிதியை அடைந்து சிரசிலும், இருதயத்திலும் அஞ்சலி செய்து, அவரைத் தரிசித்து மனதிலே தியானித்து அர்ச்சனை முதலியன செய்வித்து: தோத்திரங்களைச் சொல்லக் கடவர்.

27. இறுதியில் விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு பிரதக்ஷணஞ்செய்து, சண்டேசுரர் சந்நிதியை அடைந்து

வணங்கித் தோத்திரஞ் செய்து தாளத்திரம் பண்ணிச் சிவ தரிசன பலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்திக்கக்கடவர்.

28. அதன்பின் நந்திதேவரை அடைந்து வணங்கித் துதித்து பலிபீடத்துக்கு இப்பால் வந்து மும்முறை நமஸ்க ரித்து எழுந்து வடக்கு நோக்கி இருந்து சிவபெருமானை தியானித்துக்கொண்டு பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச் செபித்து எழுந்து வீட்டுக்கு போகக்கடவர்.

29, தரிசனஞ்செய்து திரும்பும்பொழுது சிவபெருமா னுக்கும், இடபதேவருக்கும் புறங்காட்டாது திரும்பல் வேண்டும்.

30: சிவதரிசனம், பிராதக் காலத்திலே செய்தால் இர விலே செய்த பாவம் போம் மத்தியானத்திலே செய்தால் பிறந்த நாட்டொடங்கிச் செய்த பாவம்போம், சாயங்காலத் திலே செய்தால் ஏழுபிறவிகளிற் செய்தபாவம் போம். ஆத லால் சைவசமயிகள் யாவரும் எந்நாளும் காலந்தோறும் தவறுமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யக் கடவர்.

31. சோமவாரம். அட்டமி, பிரதோஷம். பௌர் ணிமை. அமாவாசை திருவாதிரை, உத்தராயணம், தக்ஷி யணம். சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாதப்பிறப்பு சூரிய கிரகணம். சந்திரகிரகணம் சிவராத்திரி முதலியபுண்ய காலங் களிலே சிவதரிசனஞ்செய்தல் மிகமேலாகிய சிவபுண்ணியம்

32. சிவபெருமானைமனதினுலே தியானித்துக் கொண் டும், பஞ்சாக்ஷரத்தை வாக்கினுலே உச்சரித்துக்கொண்டும் சூரியோதயந் தொடங்கி அச்சமய பரியந்தமாயினும் ஒரு யாமமாயினும் அங்கப் பிரதக்ஷணஞ் செய்தவ தீவினைக ளெல்லாவற்றினின்றும் நீங்கி முக்தியடைவர்.

33. இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச்சென்று சண்டேசுரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச்சென்று வடதசையைச் சேர்ந்து கோமுகையைக் கடவாது முன்சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து அங்குநின்றும் திரும்பி இடபதேவரை தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றும் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, பின்பு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து, வணங்குதல் சோமசூத்திரப் பிரதக்ஷணம் எனப்பெயர் பெறும். பிரிந்துவரும் பொழுது ஆன்மப் பிரதக்ஷணம் பண்ணல்வேண்டும், இப்படி ஒரு பிரதக்ஷணம் செய்யின், அநந்த மடங்கு பயனுண்டு. இந்தப் பிரதக்ஷணம் பிரதோஷ காலத்திலே செய்யின் மிக விஷேடமாம்,

34. சுக்கிலபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்துக்கும் வருகின்ற திரியோதசி திதியிலே சூரியாஸ்தமயனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும், விஷ்ணு முதலிய தேவர்கள் தாங்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது ஆலகாலவிஷம் தோன்றக்கண்டு அஞ்சி ஓட்டமெடுப்ப அது அவர்களை வலமும், இடமுமாக கறுத்துத் தொடர்ந்தது, அவர்கள் திருக்கைலாயத்திற் சென்று, இடதேவருடைய அண்டத்தில் ஒளித்தார்கள், அவர்களை ஆலகாலவிஷம் பின் தொடர்ந்து வரும்போது சிவபெருமான்இடபதேவருடைய இரண்டு கொம்பினடுவே இருந்து அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்று உட்கொண்டு

அவர்களைக் காத்து, அக்கொம்பினடுவே நின்று நிருத்தஞ் செய்தருளினார்: இது சனிவாரத்திலே திரியோதசி திதியிலே சாயங்காலத்திலே அர்த்தமண்டல சமயத்திலே நிகழ்ந்தது. ஆதலால் சனிப்பிரதோஷம் மிகச் சிறந்தது. இப்பிரதோஷ வரலாறு வேறொரு பிரகாரமாகவுஞ் சொல்லப்படும் ஏகாதஸியின் மாலைக்காலத்திலே சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டு தேவர்களைக் காத்தருளினார். துவாதசிநாலே அமிர்தந்தோன்ற தேவர்கள் அதை உண்டு, திரியோதசியின் மாலைக்காலத்திலே சிவபெருமானைப் பூசித்து வணங்கினார்கள். அப்போது சிவபெருமான் இடபத்தின் மேல் நின்று அருள் செய்தார். இப்பிரதோஷத்திலே இடபதேவருடைய அண்டத்தைப் பரிசித்து. அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தல் வேண்டும்.

35. பிரதோஷ காலத்திலே மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யின் கடன், வறுமை, நோய், பயம், கிலேசம் அவமிருந்து. மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும், முத்தி சித்திக்கும்.

சிவாலய தரிசனம் முற்றிற்று.

ஓம்

கிரிப் பிரதக்ஷணவிதி

திருஅருணாசலம் என்னும்திருமலையை வலம்வருவோர் மார்கழிமாதம் தொடங்கிச் செய்தல்வேண்டும். செய்கையில் புண்ய தீர்த்தங்களிலே முழுகிச் சுத்த வஸ்திரந் தரித்துச் சந்தியா வந்தன முதலிய நித்தியகர்மங்களை முடித்துபோசனஞ் செய்யாமற் செய்க. சிவபெருமானது திருவடிகளையிடையறாது தமது மனத்தினிறுத்தித் திருவைந்தெழுத் தெனப்படும், ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து கொண்டு, விபூதி உத்திராக்கம் என்னும் சிவ சின்னங்களைத் தரித்துத் தமது கைகளைக் கூப்பிக்கொண்டாவது அல்லது மார்பினிடத்தில் வைத்தாவது ஜபமாலை தரித்தாவது, பூமியிலுள்ள உயிர்கள் நோவாவண்ணம் எண்ணெய்க் குடத்தைச் சிரசிலிட்டுக் காலிற்றளை பூட்டிய பூரண கர்ப்பவதிப்போல் மெல்லெனப் பிரதக்ஷணஞ் செய்க: இம்மார்கழியில் ஒருநாள் ஒருமுறை வலம் வந்தால் ஒருவருடம் இடையறாது செய்த பலனை யடைவார்கள். இப்பூமியில் என்னவேண்டுமோ அவற்றை யனுபவித்து இறுதியிற் சிவலோகத்தையும் அடைவார் என்க. ஒரு அடிக்கு ஆயிரம் அசுவமேத யாக பலன் உண்டாம், வாசபேயயாக பலனைவிட நூறுபங்கு அதிகமுண்டாம். இம்மலை முழுவதையும் பிரதக்ஷணஞ் செய்யும் பெரியோர் சிவனிடச் சென்று விளங்குவார்.

தைமாதத்திலே தேவரும். முனிவரும் மனங்குழைந்து அருணாசல மலையைத்தியானித்து, அரிட்டங்கெடவும் இடபம் பொருந்தவும் பிரதக்ஷணஞ் செய்பவர்கள் பண்டிதராயினும் பாதகனுயிருந்தாலும் குலத்திலுயர்ந்தோனுயினும் தாழ்

ந்தோனுயினும், தேவர்களும் வணங்காநின்ற அருணாசலத்தைப்பிரதக்ஷணம் செய்வானுயின் அளவில்லாதகோடி பாவங்களெல்லாம் அகன்றுசாயுச்சிய மடைவார்களென்பது சத்தியம். பிரதக்ஷணஞ் செய்யும்போது மிதியடி, செருப்பு இவை தரித்தும், குதிரை,யானை, ஒட்டை,வண்டி, பல்லக்கு இவைகளிலேறிச் சென்றும்.குடைபிடித்தும் செய்தல் பாவமாம். மாகிதன் என்னும் அரசன் அவ்வாறேகுதிரையிலேறிப் பிரதக்ஷணஞ் செய்தமையால் நரகத்தில் விழுந்தான் குதிரை சிவலோகஞ் சார்ந்தது அங்கே கணங்களுக்கெல்லாம் அதிபதியாக விளங்கிற்று. ஆதலால் அன்பர்கள் மிதியடி முதலானவற்றை விடுத்துச் சிவபெருமானது திருவடிகளைத் தியானித்துச் செய்யின், புத்தி, சித்தி, முத்திகள் எளிதில் கைகூடும்,

பிரதக்ஷணஞ் செய்யும்போது ஓரடி வைத்தால் மனத்தினுற் செய்த பாவங்களெல்லா மகலும் இரண்டடி வைத்தாற் சொற்களாலேனர்ந்த பாவங்களெல்லாந் தீரும் மூன்றுடடி வைத்தால்,உடலினுற்செய்த தீமைகள் யாவுமோடும்; பிராதக்காலத்திலே விடியற்காலம்) வலஞ்செய்யின் குற்றங்கள் நீங்கும். உச்சிக் காலத்திற் செய்யின் அட்ட சித்திகள் விளையும். மாலைக்காலம் வலம் வரின் மிகுதியாகத் தழைத்து வளரும் தனத்தானிய முதலாயின் பெற்று வாழ்வர் ஞாயிற்றுக்கிழமையில் வலம் வந்தோர் மெய்யிலும் நோய்கள் நீங்கிப் பூமியில் வாழ்ந்து சூரியலோகத்தை யடைந்து மகர சங்கார காலத்திற் சிவபெருமான் திருவடியிற் கலப்பார். திங்கட்கிழமை சுற்றினேர் பாபங்களெல்லாம் நீங்கிச் சந்திரலோக மடைந்து போக மனுபவித்து இறுதியின் முத்தியடைவார். மற்றைய வாரங்களிற் செய்தோரும் அவ்வாறே நினைந்தன பெற்று வாழ்ந்து அவ்வக்கோள்களினுலகங்களையடைந்து போக முற்றுப்பின்னர் அரசனடியே சேர்வர். சித்திரை மாதத்திலே அமரபக்ஷத்திலே சதுர்த்த சி

திதியிலே உதய காலத்தில் ஸ்நானஞ்செய்து, வெண்ணீறு சாத்தி சிவலிங்கப் பெருமானைத் துதித்துப் பணிந்து, இவ்வுலக போகத்தை விரும்பாமலும் சுவர்க்க முதலிய பதவிகளிலுமநுப விக்கும் பலனை விரும்பாமலும், அநாதிமல முத்தராகிய சிவபெருமானாகிய அருணாசலத்தை வலஞ்செய்தோர், அசுத்த தத்துவமாகிய வித்தியாதத்திவங்களிலும் தங்காது சுத்த தத்துவமாகிய சிவதத்துவத்தி றெஞ்ஞான்றும் சிவரூபமுற்று வாழ்வார்.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை யுச்சரித்துச் சிவபிரான் றிருவடிகளை யுளத்திற் பதித்துச் சூரிய உதயமுதல் அத்தமயனம் வரையும் செய்தோர் சுத்த சிவதத்துவத்திற் கலந்து வாழ்வார். சாமம் வலம் புரிந்தால் அட்டமாசித்திகளடைவர்.

மலைவலஞ்செய்து ஒருமுறை செய்வதிலும் மும்முறை செய்வது விஷேடம் நூறு ஆயிரம், பதினாயிரம், இலக்ஷம்; கோடி என்னுங்கணக்காக ஆலயங்களை வலஞ்செய்தபலனை யளிக்கும் சரீரப்பிரதக்ஷணஞ் செய்தவர்: தம் உடலிற்படிந்த மணலொவ்வொன்றிற்கும் தேவவருடம் ஆயிரம் வரையும் புட்பத்தேரிலிருந்து போகங்களை யனுபவித்து மகா சங்கார காலத்திற் சிவன்றிருவடிப் பேறாகிய அத்துவித முத்தியை யடைவார் என்க.

மலைசிவரூபமா யிருத்தலால் அதன்கண் ஏறுதல் மகா பாவம் ஆகும், அதற்குப் பிராயச்சித்தமில்லை ஆதலால் ஒருவரும் ஏற்றக.மலை அக்கினி வடிவென்பதற்குத் திருஷ்டாந்தம் இப்போதுங் காணவாம், என்னெனில் எவ்வளவுமழை பெய்யினும் அருணாசலம் வடியாமையே யாம்.

பணிந்தே ரவய வத்திற் பற்றியமணலொவ் வொன்றற்
கெணந்திக ழிமையோ ராண்டா யிரமல் ரிரதந் தன்னி
லணைந்தமர்ந் திருப்பரின் புற்ற மலனறன் சிவலோகத்திற்
றணந்திடு மவர்மு னின்ற றநுவுனிற் சார்ந்த பாவம்

கிரிப்பிரதக்ஷண விதி முற்றிற்று.

ஓம்

திருச்சிற்றம்பலம்

தீ ப வி தி

ஆலயம் முதலிய சிவசந்நிதானங்களிலும் பூசையிலும் யாகாதிகளினும் விளக்கிடுதல் சிறந்த புண்யமாகும். பதி னாறுவகை உபசாரங்களுள் விளக்கிடுதலும் ஒன்று. சரி யைத் தொழில்களுள் அது விசேடித்ததாகக் கூறப்பட்டுள் ளது, விளக்கில்லாத எக்காரியங்களும் பயன்படா, விளக் கில்லா இடம் உயிரில்லாத உடம்பை நிகர்க்கு மென்று சிவாசமங்கள் கூறுகின்றன. சிவபெருமானுக்கு முப்பத்தி ரண்டு உபசாரங்களுடன் பூசைசெய்க. அவையியலாதாயின் பதினாறுவகை உபசாரங்களிற் பூசிக்க அவையுமில்லாதவர் சந்தனம் புட்பம் நைவேத்தியம் தூபம் தீபம் என்னும் ஐந்துவித உபசாரங்களினாலாவது செய்க அவையிற்றானுஞ் செய்ய வியலாதவர் முடிவிற் செய்யப்படும் தீபமாத்திரம் ஏற்றித்தலையாரக கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கராசம் போற்றி யென்னக்கடவர் என்று காமிக ஆகமம், இயிளித ஆகமம், தமிழ்வேதம் என்பன முழங்கா நிற்கும், இதனாற் தீபத்தின் பெருமை இத்தணைத்து என்பது தெற்றெனப் புலப்படும். புவனங்கள் யாவற்றையும் பொது வறப்புரந்த மாவலிச்சக்கிரவர்த்தி என்பான் யாவன்? வன் முற்பிறப்பில் எலியாகப் பிறந்து சிவாலயத்தினுள்ள விளக்கிலிட்டு வைத்த நெய்யை யுண்ணுதற்குச் சென்றான். அக்காலத்து மங்கியிருந்த தீபச்சுடர் தன்முகத்திற் சுட உதறியதால் அது ஓங்கியெறிந்தது. அதனால் தத்துவாதீத தனிப்பரஞ்சுடராகிய தற்பரசிவனார் அவனுக்கு மூவுலகும் ஏவல்கேட்ப ஆளும்

பேற்றினையும் அட்ட ஐசுவரியம். அட்டபோக்கிய சம்பன்னம். சுத்த சந்தானம், சதுர்விதோபாயம். சட்குண சமேதம் பஞ்ச தந்தர பிரவீனம், வர்க்கத் திரவிய விசிட்டம், சதுரங்க புலம முதலிய சகலவிநோத சகிதமாக வாழும் வாழ்க்கையினையும் அருளினர் என்று புராணங்கள் உரைத்தன, சிவதிரவியமாகிய நெய்யைத் தன் பசிக்காக வுண்டமை யினுலும் மங்கியதீபத்தைத் தூண்ட வேண்டுமென்று நினைத்துச் செய்யாமையினுலும் சிறிது குற்றமுற்றவனுள படியால் திருமாலது படி ற்றுச் செய்கையினகப்பட்டான். இங்ஙனமாயின நெய்யனபுடன் தீபமிடுகின்றவர் அடையும் பலன் இவ்வளவின தென்று உலகமறிந்து ஏற்றியுய்க,

தீபமாலை. தீபம் என்னும் இவற்றுற் பிரகாசிப்பித்தல் சில வழிபாட்டிற்கு இன்றியமையாததாகும், தீபமாலையாவது கபில நிறப்பசுவின் நெய்யினுல் நிறைக்கப்பட்டதும், கர்பூரம் அகில் என்னுமிவற்றேடு சம்பந்தமாகத் திரிக்கப்பட்ட இழைகளையுடையதும். அவியாததும், வட்டவடிவாகிய தோரணம் முன்னர்த் தூங்கப்பெற்றதும் திரிசூல வடிவாகச் செய்யப் பட்டதுமாயுள்ளது. தீபங்கள் ஒருமுகம் இருமுகம், மும்முகம், நான்குமுகம் ஐம்முகம், என்பனவும் பருடதீபம் நக்ஷத்திரதீபம், மாயூரதீபம், இடதீபம் நந்திதீபம், கும்பதீபம் எனப் பலவகையாக விளங்கும் பூசையின் மூவகையுள் தீபம் வரையும் அர்ச்சனை எனவும் நைவேத்தியம் வரையும் பூசை எனவும், பலியிடுமளவும் சாந்திகருமம் எனவும் சொல்லப்படும் ஆகவே தீபமில்லையேல் அர்ச்சனை என்பது இல்லையால் ஆலயங்களில்திபமிடும் போது ஒன்றுமுதல் பத்துவரையில் இடுதல் அதமாதமமாம் பத்துமுதல் நூறுவரையில் இடுதல் அதமம். நூறுமுதல் பதினுயிரமுதல் ஓரிலக்கம்வரையும் இடுதல் உத்தமமாம். இலக்கத்திற்கு மேல் இடப்படுவன வெல்லாம் உத்தமோத்தமமாகும்,

பகற்காலத்தில் இடப்படுந் தீபங்களில் இரட்டிப்பாக இராக்காலத்திடுக, முதலாஞ்சாமம் நான்காஞ் சாமங்களின் இடப்படுவனவற்றிலும் இடைச் சாமங்களில் இருமடங்கு அதிகமாக ஏற்றுக. இன்னுந் தீபங்கள் நான்கு வகைப்படும். குற்றமில்லாத நற்பசுக்களின் நெய் கொண்டு இடுவது சாத்துவீக தீபம். வெள்ளாட்டு நெய் நல்லெண்ணெய் கொண்டு இடுவது இராசத்தீபம் எருமை நெய்யை விடுவது தாமத தீபமாகும் விருக்ஷங்களின் விதைகளில் உற்பத்தியான ஆமணக்கெண்ணெய், இருப்பைநெய், கடலையெண்ணெய் முதலியன கொண்டு இடுவது பைசாசுதீபமென்க தாமததீபத்தைப்பார்க்கிலும் பைசாசதீபம் இழிந்ததும் யோக்கியமில்லாததும் என்று சிவாகமங்களால் இழித்து கூறப்பட்டன, திரிகள் தாமரை நூல்: பருத்திநூல் கொண்டு செய்க. இவ்வாறு பரமசிவனாது திருமுகங்களினின்றுந் தோன்றிய சிவாகமங்கள் முறையிடவும் சிலா அதனை யெட்டுணையேனும் மதிக்காது குளிக்கப்போய்ச் சேறு பூசுவார்ப்போலச் சிவாலயங்களிலே கெட்ட நாற்றமுள்ள மண்ணெண்ணெய் கொண்டும், மெழுகுவர்த்தி யென்னும், அநாசாரப்பொருள் கொண்டும் தீபமிடுகின்றனர். உற்சவகாலங்களிலே எண்ணெய் செலவிற்குப் பயந்து கானவாட்டியிலேமண்ணெண்ணெயைத் தோய்த்துக் கொளுத்திப் பிடிக்கின்றனர். தருமகர்த்தர்களும் அதனைக்கண்டித்தல் கிடையாது. அர்ச்சகர்களும் அவர்வழியே செல்கின்றார். அதனால் அவர்க்கு நரகப்பிராப்தியன்றி நற்பலன் கிடையாது தீபமிடுங்கால் அது ஓரங்குலம் வளர்ந்து எரிவது அதமமென்க இரண்டு மூன்று அங்குல மத்திபமாம், அவற்றின் மேற்பட்டெரிவன உத்தமம்.

காலை, உச்சி, மாலை என்னும் முக்காலங்களிலும் தீபங்கள் நந்நான்குடன் பூசிப்பது அதமத்தினதமம். காலை உச்சிகளில் நான்கு தீபங்களும், மாலைக்காலத்தில் எட்டு தீபங்க

ளும் இட்டுபூசித்தல் அதமம். மூக்காலங்களிலும் பன்னிரண்டு இடுவது மத்திமத்திலதமமும்.இருபத்து நான்கிடுவது மத்திமத்தின் மத்திபமும், சங்க காகளத் தொனிகளோடும் அருக்கிய புட்பங்களோடும் முப்பத்தாறு தீபங்களிடுவது மத்திமத்தி லுத்தம மாகும். எழுபது தீபங்களேற்றிப் பூசித்தல் உத்தமதலதமம். மூக்காலங்களினும் இரண்டுமரக்கால் அரிசிகொண்டு செய்யப்பட்ட அவிசு பாயஸம். சித்ரான்னம் என்பவற்றையும், அவ்வளவு சுத்த அன்னத்தையும் படைத்து அர்த்த சாமத்தும் அவ்வாறு நைவேத்தியம் செய்து, முப்பத்திரான்கு வாத்தியங்கள் முழங்க இருநூறு தீபங்களிட்டுப் பூசிப்பது இத்தமத்தில் மத்திபமாம். பத்து மரக்கால்அரிசி கொண்டுசெய்த நைவேத்தியம் படைத்து, ஐம்பது வாத்தியங்களும், முப்பத்திரண்டு உபசாரமும், ஐம்பது உருத்திர கணிகையர் நிருத்தங்களுமமையக் காலை உச்சி: மாலை என்னுமுக்காலங்களினும் ஐந்நூறு ஆயிரம். பதினுயிரம் தீபங்களேற்றிப் பூசிப்பது உத்தமமோத்தமம் ஆகும் இங்ஙனம்சிவாகம விதிப்படி சிவாலயங்களிலே எண்ணிறந்த தீபங்களை யேற்றிப் பூசித்ததனுலுண்டாகும் பலன் திருவருணுசலத்தில் கார்த்திகை மாதத்தில் இடப்படும் தீபதரிசன மாத்திரையே யுண்டாகும்: கார்த்திகை தீபத்துக்கு நெய்திரி முதலியன உபசரித்தோர் பெறும்பயனை எவருஞ் சொல்லுதலியலாது.

ஓம் தத் ஸ்த்

ஓம்

திருச்சிற்றம்பலம்

தீபதத்துவம்

ஆலயாதிகளிலே திருவிளக்கிடுவதின் உண்மையை ஆராய்வோம். தீபம் ஆக்கினேய உபசாரத்து ளொன்று அக்கினி அருளாகவும், உருவாகவும் இருத்தல் போலச்

சங்கரபகவானும் அருளாகவும் உருவாகவும் இருக்கின்றார் என்பது உணரப்படும். அக்கினியொன்றைப் பற்றித் தோன்றுதல் போலப் பரமபதியும், அன்புமுருகிய விடத்துத் தோன்றுவார் என்பதும் பொதரும், ஒரு விளக்கினிலிருந்து வேறொரு விளக்கும் அதிலிருந்து பலவிளக்குகளும் தோன்றுவது போலத் தத்துவங்கடந்த தனிப்பரம்பொருள் ஆகிய சிவபெருமானும் ஆன்மாக்களை அநாதியே பந்தித்த அணவாதி மும்மலங்களையும் நீக்கியவைகட்கு அத்துவித இன்பமாகிய சிவசாயுச்சியத்தை யளித்தற்குச் சிவமாகியும் சத்தியாகியும், நாதவிந்துக்களாகியும் சதாசிவன், மகேசுரன் உருத்திரன் முதலிய அளவிறந்த உருவங்களைக் கொண்டும் பஞ்சகிருத்தியங்களையும் இயற்றுகின்றார் என்பது பெறப்படும். அவ்வுண்மை ஒருமுகதீபம் இருமுகதீபம் மும்முகதீபம் நான்முகதீபம் ஐம்முகதீபம் பலவடுக்குத் தீபங்களாலும் உணர்த்தப்படுமென்க. தீபம் என்பது சிவபெருமானது திருவருள் வடிவாகிய சிவசக்தி குறியாம் இன்னும் இத்தீபமிடுதலை ஆராயுங்கால் தீபம் இருளை நீக்குவதுபோல அஞ்ஞானவிருளை நீக்குவது ஞானம் என்று அறிதல் சான்றோர்க் குரிமையாம். ஆலயம் தேகமாகவும் ஆங்குள்ள தகழிபோல இருப்பது தேகத்திலுள்ள மனம் ஆகவும், அத்தகழில் நெய்யை நிறைத்தல் போல 'இம்மனத் தகழிலும் உண்மையுணர்வாகிய நெய்யை நிறைத்து தாமரைநூல் திரியிடுதல் போல உயிர் என்னுந் திரியையிட்டு பிராணன் என்னுங் காற்றை நிறுத்தி. அன்பென்னுந் தூண்டுகோல் கொண்டு சிவஞானம் என்னுந் தீபத்தையேற்றின் ஆணவமாதி மலவிருளகன்று பரஞ்சோதி வாகிய சிவதரிசனம் உண்டாகும் என்பதற்கு அறிகுறியாகக் காணப்படும் கார்த்திகை தீபமும் இதனை தரிசிக்குங் கண்களின் ஒளியும், இரண்டற அத்துவிதமாக 'விளங்கல் போலச் சிவபெருமானாகிய பசுபதியும் ஆன்மாக்களும் "விண்ணினிலமுடலுயிர்" என்றின்னவர் போல அத்துவித

மாக விளங்குகின்றனர் என்னுந் தத்துவமுந் தோன்ற நிற்கும் பெற்றியது.

தேவாரம்

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
சடம்யமர் காளைதாதை கழலடி காணலாமே

பேற்படி

ஊதி லுயிர்ப்பை யொடுக்கி யெண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி,

ஓம் தத் ஸ்த்

ஓம்

திருச்சிற்றம்பலம்

கார்த்திகை தீபச் சிறப்பு

திருவண்ணாமலையிலே கார்த்திகை மாதங்கள் தோறும் இடப்படுந் தீபத்திற்குச் சர்வாலய தீபம் எனவும், கார்த்திகை விளக்கிடு எனவும். ஞானதீபம் எனவும், சிவஜோதி பரஞ்சுடர் எனவும் பெயர்கள் வழங்கப்படும். கார்த்திகை தீபக்காட்சியைக் கண்டு ஆனந்தித்தவர் கண்களே கண்களெனப்படும். அல்லாதார் கண்களெல்லாம் புண்கண், மரக்கண், பீலிக்கண், மட்பாண்டக்கண் எனப்பட்டு ஒரு சிறிதும் பயனிலாவாம். அதனை மதுரைச் சங்கப்புலவருளொருவராம் பொய்கையாரும்.

மடநடைப் பறவையு மாயவிலங்கு
மடிமலர் முடிக்கா டவைமுறை போகா
துறமுபு காண்குமென் றுறீயித் திரிந்து
தேவயாண் டாயிர நேடியு முணராப்

பரஞ்சுடர் மலைக்கட் கருத்துடன் கண்ணி
காணுபு விளக்குஞ் கார்த்திகை விளக்கை
மரணப் பெறீ இயவிற் மணக்கோ விழியே
அல்லன மரங்கற் பீலி பேணம்
வலமி வற் றுழைபோ மாசின வாகலின்
பல்சான் றீரே பல்சான் றீரே
விழி நாட் டடாமை வியற்பய றாறுவான்
சென்மின் காண்மின் றிருவிளக் கருளே.

என்று அவ்வுண்மை தெரிவித்தார். இவ்விளக்கீடு, இவபெருமான் உலகமுழுவதும் சோதிவடிவாய் விளக்கி நின்றதற்கு அறிகுறியாக எவ்விடத்துந் தீபமிட்டுத் தரிசிக்குமதுவாம். வைணவர்க்கு ஐப்பசியில் தீபாவளி வருதல் போல, சைவ சித்தாந்திகளாகிய எம்மனோர் யாவருக்கும் உரிய தீபாவளி கார்த்திகை தீபமேயாம். இதனைப் புறச்சமயிகளும் ஏற்றுக் கொண்டாடி வருகின்றார். சமணர் முதலாய்ப் புறப் புறச் சமயிகளும் ஆங்காங்கு எடுத்து வியந்துளார். சமண நூலாகிய சீவகசிந்தாமணியினும்,

தார்ப்பொலி தருமதத்தன் றக்கவா றுரைப்பக்குன்றிற்
கார்த்திகை விளக்கிட்டன்ன கடிகமழ்குவளைப் பைந்தார்
போர்த்ததன் னகலமெல்லாம் பொன்னென வியர்த்துப்
பொங்கி நீர்க்கடன் மகரப் பேழ்வாய் மதனன்மற்றிவனைச்
சொன்னான்.

(நாமகளிலம்பகம் 227-வது செய்யுள்)

என்று சிறப்பித்துப் பேசப்பட்டிருக்கின்றது. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரும் புறத்திணையியலின் மக்கட்பாடாண்டினை கூறியவிடத்து "வேலினோக்கிய விளக்கு நிலையும்' என்றருளி இதன்பெருமை குறிக்க வைத்தார், இலற்கு உரைசெய்த உச்சிமேற் புலவர்களும் ஆசிரியர் நச்சினார்க் கினியாரும் "இது கார்த்திகைத் திங்களிற்

கார்த்திகை நாளின் ஏற்றியவிளக்குக் கீழும் மேலும் வலமு மிடமுஞ் திரிபரந்து சுடர்ஓங்கிக் கொழுந்துவிட் டெழுந்த தென்று அறிவோராக்கங் கூறப்படுவதாம்'' என்றுரைத்தார் அவ்வாறே சங்கப்புலவர்களும்.

தொல்காப்பியம் புறத்திணையில் 35 சூத்திரத்து

உரைச் செய்யுள்கள்

மைம்மிசை யின்றி மலைவிளக்குப் போலோங்கி
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கேடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து
வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியா பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலா—னளிசிறந்து
நன்னெறியே காட்டு நயந்தெரி கோலாற்கு
மெய்ந்நெறி காட்டும் விளக்கு.

என்று கார்த்திகை தீபத்தின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டினர் ஆகவே யித்தீபக்காட்சி உலகந் தோன்றிய காலந் தொடங்கி நிகழுகிறதென்பதை உண்மை யாயிற்று முன்னர்க்காலத்தில் கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நக்ஷத்திரத்தில் சிவபெருமானைப் பூசித்து விளக்கு ஏற்றியபோது அது எத்துணைக் காற்றடித்த போதும் சாயாது மேலோங்கி யெரியுமாயின் மிகவும் நல்லதென்றும் வலப்பக்கத்தாயினும் இடப்பக்கத்தாயினும், கீழிலாயினும் சாய்ந்து எரியுமாயின் இன்னின்ன பலாபலமென்றும் அறிந்து கொள்ளும் வழக்கம் இருந்தது இக்காலத்தும் அது கொள்ளப்படுகின்றது. உலகரும் '' மலையிலிட்ட விளக்கு குன்றின மேலிட்ட விளக்கு'' எனக்கூறுதல் காணப்பட்டு வருதலால் திருவண்ணாமலையின் கண் இடப்படும் கார்த்திகைத் தீபத்தின் சிறப்பு விளங்கும். திருவண்ணாமலை என்பது தொண்டை நாட்டு முப்பத்திரண்டு சிவதலங்களுள் ஒன்று முப்பத்திரண்டு தலம் வந்ததற்குக் காரணம் என்ன

வென்று ஆராயுங்கால், இறைவியாகிய பரமேசுவரி திருக்கயிலையினின்றும் இவ்வுலகில் வந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருளினள் என்னலால் அதற்கு அறிகுறியாயாகத் தலங்களும் முப்பத்திரண்டாயின வென்பர் பெரியோர் உலகத்திலுள்ள தலங்கள் எவற்றினும் நினைத்தமாத்திரையே அத்துவித முத்தியாகிய திருவடிப்பேற்றை யளித்தலால் திருவருணாசலத்திற்கு ஒப்பாகவும் மிக்கவுமான தலங்கள் எங்குமில்லை. பரமசிவனே மலையாக விளங்குவாராயின் அதன் பெருமையை யாவரே உணரவல்லார்.

இத்திருவண்ணாமலையின் பெருமை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பெரியபுராணம் கந்தபுராணம், சூதசங்கிதை, பிரமாண்டபுராணம், சரப உடநிடதம், உருக்குவேதம் பாஸ்கரசங்கிதை, அருணாசலபுராணம், அருணகிரிபுராணம் திருவருணைக்கலம்பகம் அருணையந்தாதி அருணகிரியந்தாதி, சிவரகசியம் முதலிய பலநூல்களில் விளக்கப்பட்டுள்ளன: விட்டுணு தன் பிள்ளையுடன் சண்டையிட்டு மிருகமாகவும், புத்திரன் பறவையாகவும் உருவெடுத்து அடிதலை தெரியாது மயங்கிக் கருவமொழிந்த பின்னர்த் துதிக்க சோதிவடிவாய்ச் சிவபெருமான் மலையாக விளங்கி நின்றார் அம்மலையினால் உலகமெல்லாஞ் சிவந்த நிறமாக விளங்கினமையால் அருணாசலமென பெயர்பெற்றது அருணம்-சிவப்பு அசலம்—மலை; சோணகிரி என்பதற்கும் பொருள் அதுவே சோணம் சிவப்பு, இனி அருணம் என்பதனை அருணம் என்னும் வடமொழிகளாகக் கொண்டு ருண சம்பந்தங்களை யொழிப்பது எனவும் பொருள்கூறுவர். அருணகிரி புராணத்தார் நிற்க சிவபோலி வைணவர்கள் திருவண்ணாமலை சுதரிசனகிரி எனப்பெயர் பெற்ற வைணவதலம் என்று கூக்குரலிடுகின்றனர் அவ்வாறே இராமநுசன் என்னும் புதுவை வைணவனொருவன் சுதரிசனகிரி புராணம் என்று ஒரு போலிபுராணம் பாடிச் சிவதூடணங்களும் புரிந்தான்

அதற்குச்சைவர்கள் மறுப்புக்கள் எழுதி வெளியிட வாயட ங்கி நாவலர்ந் தாளுலர்து தென்றிசையோடினன். அது நிற்க விட்டுணுவும் பிரமனும் அடிமுடிகளைத் தேடியறியாது துதிக்க அக்கினியுருவாய் நின்றருளிய பெருமான் அடியையும் முடியையுங் காட்டாது இலிங்கோற்பவ மூர்த்தியாய் விளங்கியும் இலிங்கோற்பவ காலமாகிய மகாநிசியிலே ஒரு முகூர்த்த காலங்காட்சி கொடுத்தருளியதுமன்றி கார்த்திகை மாதத்திலே, கார்த்திகை நட்சரத்திலே இதுபோல ஓர்சோதி காட்டுவோம், அதனைத் தரிசிப்பவர்யாவராயினும் அவர்பாச மாகிய இருட்சடலத்தினின்றும் நீங்கிச் சிவஞான வொளியையடைந்து நம்கழலடி யுறுவர் என்றும் பரமர் அருளினமையால் அந்த ஐதிகப்படியே ,இப்போதும் மலையில் கார்த்திகைக் கார்த்திகையில் தீபமேற்றித் திருவிழா கொண்டாடப்படுகின்றது. விட்டுணுவுக்கும் பிரமனுக்கும் நடுவிற் சோதி வடிவாகத் தோன்றியது மாசி மாதந்தில் கிருஷ்ணபக்ஷச் சதுர்த்தசி திதியும் சோமவாரமுந் திருவோண நட்சத்திரமும் கூடிய மகாநிக்க காலமன்றோ? தீபமிடல் மாசிமாதத்திலன்றிக் கார்த்திகையி லிடுதல் யாது காரணம் எனவினவிற் கூறுவாம்.

இறைவன் சோதியுருவாக முதலிற் றோன்றியது மாசிச் சிவராத்திரியிலே இலிங்கோற்பவமூர்த்தியார் பின்னர்க் காட்சி கொடுத்து மகாநிசிக் காலமாகிய இரவு இருபத் தேழு நாழிகைக்குள்ளாம்: அக்காலந் தேவராளாதலின் அக் கணக்கின்படி பார்க்கின் மானிடதினக் கார்த்திகைமாதமே தேவர்க்கு மகாநிசிக்காலமாகும் அதுபற்றியே கார்த்திகையில் விளக்குவிழாச் செய்யப்படுமென்றறிக. இதுவன்றி யிரன் என்னுமொரு சித்தன் முனிவர் சாபத்தால் மகிடாசூரனகப் பிறந்திருக்க சங்கரி அவனைக்கொன்று அவன் கழுத்திற் சிவலிங்கந் தோன்றியெடுக்க, அது கையினின் றும் நீங்காதுறைய அப்பாவத்தை விலக்கிக் கொள்ளற்காக

அம்மையார் இத்திரு வருணாசலத்தையடைந்து ஐப்பசி மாதத்திற் கேட்டை நட்சத்திரத்திற் பூசித்து, கடக தீர்த்தத்தில் முழுகி அருச்சித்தமையால் சிவலிங்கங் கையினின்றும் நீங்கப்பெற்று கார்த்திகை கார்த்திகையிலே சிவாகம விதிப்படி உற்சவம் நடத்துவித்துத் தீபங்களேயும் எவ்விடத்தும் ஏற்றுவித்துத் தாம் நினைத்தனவெல்லாம் பெற்ருர் என்று அருணகிரி புராணங் கூறுதலால் அவ்விதிபடியிருக் காலத்தும் தீபமேற்றுதலுமாம் இத்தீபதரிசனஞ் செய்தோர் சிவபெருமானைத் தரிசித்தவராவர்.

சிவபெருமான் ஒளிவடிவாயிருக்கின்ருர் என்பது தோன்றத் திருநெறித் தமிழ்வேதமும் "சோதியே சுடரே சூழொளி விளக்கே," என அடுக்கிக் கூறுகின்றது. இந்திருமலே சிவனே யாதலால் இதன்கண் கால்வைத்து ஏறுதல் மகாபாதகமாம். இம்மலேயை வலம்வந்தோர் தம்பாவங்களெல்லாம் நீங்கி முத்திபெறுவர் வலம்வருவோர் பாதரட்சையிட்டும் குடைபிடித்தும், வாகனத்திலேறியும் செய்தல் ஆகாது முன்னர்மாகிதன் என்னும் அரசன் குதிரையிலேறி வலஞ்செய்தான். அதனுல் அவன் நரகத்தில் வீழ்ந்தான், குதிரைசிவலோகஞ் சென்று சிவகணத் தலேவனுய், வாழ்ந்ததென்று உண்மை நூல்கள் கூறுகிறது. ஆதலால் நாமெல்லாம் குளிக்கப்போய்ச் சேறுபூசுவார் போலப்பாவந் தேடிக்கொள்ளாது விதிபடி தீபதரிசனமும் பிரதக்கிணையுஞ் செய்து சிவஞான பலத்தால் அருணகிரிப் பெருமானது திருவடிப் பேருகிய அத்துவித சிவசாயுச்சிய முத்தியை யடைந்து செம்மாந்து வாழ்வீராக,

ஓம் தத் சத்

திருச்சிற்றம்பலம்

சைவசமயி

—※—

விபூதி உருத்திராக்கம் தரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்றுசிலர் எண்ணுகிறார்கள். விபூதி உத்திராக்கம் தரிப்பது மச்சமாமிசம் புசியாதுவிடுவது இவ்விரண்டு மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்றுவேறு சிலர் எண்ணுகிறார்கள். விபூதி உத்திராக்கம் தரிப்பது மச்சமாமிசம் புசியாது விடுவது மச்சமாமிசம் புசிக்கிறவர்கள் காணுதிருக்கும்படி போசனஞ் செய்வது இந்த மூன்றுமாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று மற்றுஞ் சிலர் எண்ணுகிறார்.

சைவசமயிக்குரிய முக்கிய விளக்கங்களாவன:

1. கொலை, களவு, கள்ளுண்ணம், மச்சமாமிசம் புசித்தல் விபசாரம். பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது 2. உயிர்களுக்கு இறங்குதல், மெய் பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்நன்றி அறிதல். இந்தக்கருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது 3. மாதா; பிதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, அரசன் முதலிய பெரியோரை மரணபரியந்த மூபசரிப்பது. 4. சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது 5, விபூதி உருத்திராக்ஷந்தரிப்பது 6. சந்தியாவந்தனை, (அனுஷ்டானம்) சிவாத்தியானம், பஞ்சாக்ஷர ஜபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம் நித்தமும் ஒருபத்து நிமிஷ நேரத்திலாவது மனதை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது 7, நித்தமுமாவது புண்ணிய காலங்களிலாவது சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித்துதிப்பது 8: சைவ

விஞ விடை, சிதம்பரமான்மியம்,பெரியபுராணம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது. 9. சிவ பெருமானுடைய மகிமையையும், புண்ணிய பாவங்களை யும், சிவபெருமானை வழிபடு முறைமையும் அறிவிக்கிற சைவ பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது. 10. சிவநிந்தை சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுவது, 11. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாய னார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சைவசமயகுர வர் நால்வருடைய திருநக்ஷத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து விரதத்துடனிருப்பது.

சைவசமயி முற்றிற்று.

ஓம்

சைவசமயம்

பிறப்புமிறப்புமுடையவர்கள் பசுக்கள் பசுக்கள்என் ணில்லாதவர்கள்; பசுக்களாவர் தேவர்கள் முதலாகக் கிரு மிகள் ஈறாக உள்ள சீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி பதி ஒருவரே அந் தப்பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்களெல் லாம் என்றும் அடிமைகள்.சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்துநின்று அவர்களை எல்லாம் ஆளுந்தலைவர் ஆதலால் சிவபெருமான் ஒருவரே பதி (பசுக்களுக்குப்பதி பசுபதி) பசு- ஆன்மா, பதி-தலைவன்.

இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழி படுகிற மார்க்கம்-சைவசமயம் பல்லாரப்பரம் என்று கொ

ண்டு வணங்குகிற சமயம் சைவசமய அன்று சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றுவது. சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர்உண்டு என்றுவது கொள்வது சிவத்துரோகம்.

சிவபெருமானின் வேருகாத திருவருளே சிவசக்தி. அந்தச் சிவசக்தியே பார்வதிதேவியாரென்று சொல்லப்படும் சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்பொருட்டு கொண்டருளிய மூர்த்தங்கள்:—

விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக் கடவுள்,விரபத்திரக்கடவுள் இவர்களுக்குச் செய்யும்வணக்கம் சிவபெருமான் ஒருவரைக்குறித்த வணக்கமேயாம்.

(சந்தி-வல்லபை)

முப்பத்து முக்கோடி தேவர்களைப் பரம் என்றுக் கொண்டு வணங்குகிற மார்க்கம் சைவசமயம் என்று மூடர்கள் பலர் பகர்கின்றனர். மனிதர்களைப் போலாக பிறந்தும் இறந்தும் உழலுகிற தேவர்களைப்பரம் என்று கொள்வது சைவசமயத்துக்கு முற்றும் விரோதம்.

சைவசமயிகளை அஞ்ஞானிகள் என்று கிறிஸ்தவர்கள் வழங்குகிருர்கள். அஞ்ஞானி என்கிற சொல்லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறிகிற அறிவு இல்லாதவன் கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள்சைவசமயிகளை அஞ்ஞானிகளென்று வழங்கலாம் என்ருல் சைவசமயிகளுந் தங்கள் கருத்தின்படி தாங்கள் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகளென்று வழங்கலாம்.

சைவசமயிகள் என்றுபெயர் இட்டுக்கொண்டு அநேக மூடர்கள். உயிர்ப்பலி ஏற்கிற அஷ்ட தேவதைகளையும் காடன், மாடன், சுடலைமாடன், காட்டேரி, மதுரைவீரன் கறுப்பன். பதினெட்டாம் படிக்கருப்பன், சங்கிலிகருப்பன் பெரியதம்பிரான்,முனி கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்குகிருர்கள். இந்தியாவில் அநேகர் மகம்மதி

யர்களுடைய பள்ளிவாயிலைச் சேவிக்கிறார்கள். இலங்கையில் அநேகர் ரோமன் கத்தோலிக்கருடைய மரியை கோயிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எல்லாருஞ் சிவத்துரோகிகள் இவர்களே அஞ்ஞானிகள்.

சைவசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்றும் சைவசமயக் கோயிலை தமிழ்க்கோயில் என்றும் அறிவில்லாத ஜனங்கள் வழங்குகிறார்கள், தமிழ் இன்பம் ஒருசமயத்தின் பெயரன்று ஒரு பாஷையின் பெயர்.

பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றும் மிகமேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும் சைவசமயம் இப்படிப்பட்டது அந்தச்சமயக் கடவுள் இப்படிப்பட்டவர் அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து அறிந்துகொண்டு சைவசமயத்தை அநுட்டியாது, நேர்ந்தது நேர்ந்தபடி நடந்தது ஐயையோ நரகத் துன்பத்துக்குக் காரணமன்றோ !

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவதற்குக்காரணம். சைவசமயத்தை சைவசமயசாரிகள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே. யாதாயினும் ஒரு சமயத்தை அறிவது பிரசங்கஞ் செய்யாதவர்கள் அந்த சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்று சொல்லிக்கொண்டு திரிவதும் அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவதும் என்ன பரிதாபம் பரிதாபம்!

சைவசமயம் முற்றிற்று,

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலை ஸ்தலபுராணமென்னும்

அருணாசலபுராண

(வசனம்)

விநாயகர் வணக்கம்

திருவளர்நா ராயண னுன்முக னிருவழிந்
தேடித் திகைத்து நிற்க
மருவியவோ ரழற்சயில மவர்நடுவி
லேயுதித்து மலைவு நீக்கி
ஒருபெரிய தெய்வமிஃ தெனத்தெரித்த
தலமகிமை யுரைக்க வெற்குத்
தருமரிய வுயரருணை விக்கினவி
நாயகரற்சாமி தானே.

திருநகரச் சருக்கம்

அநந்தகல்யாணகுண பரிபூரண சச்சிதானந்த சொருபியாகிய சிவபெருமான் தரித்துக் கொண்டிருக்கும் கங்கையினையும், சந்திரனையும் திருநீற்றினையுமொத்த கந்திகையைப் போல வெண்மையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் திருக்கைலாயம் என்னும் ஒருபெரிய ஒப்பற்ற மலையுண்டு

அத்திருமலைமேல் சிவபெருமானை வணங்கும் பொருட்டுத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் நெருங்குகிறபடியால் கிரீடத்துடன் கிரீடம் நெருங்கி யிடிபட்டுச் சத்தத்துடனே சொர்ணப் பொடிகளும். இரத்தினப்பொடிகளும் உதிர்ந்து மேருமலையினைப் போலக்குவியும், இந்திரனைக் கல்லினாலே ஒன்றுடனொன்று சேர்த்துச் சந்து தெரியாமற் சித்திர மெழுதிச் சுவர்வைத்து, மந்தரகிரிபோல வயிரத்தூண்களை நிறுத்தி மாணிக்கத்தினாற் செய்த கொடுங்கைச் சேர்த்து பவளத்தினாற் போதிகையும், மரகதத்தினால் உத்திரமுஞ் சேர்த்து அதன்மேல் சந்திரகாந்தத்தகடு பரப்பிய மண்டப மொன்றுண்டு. அம்மண்டபத்தில் நந்திகேசுரரானவர் மழுவும் மானும், பிரம்பும், உடைவாளு முடையவராய் பவளமலையில் சந்திரன் பொழிகின்ற நிலவுப்போலத் தேகத்தில் அணிந்த விபூதியை உடையவராய். சடாபாரத்தை யுடையவராய், திரிநேத்திரங்களை யுடையவராய் இடையில் புலித்தோலையுடையவராய், நான்கு புயங்களை யுடையவராய் பூணூலையுடையவராய், இருபக்கமும் முத்துக்களிழைத்த சிங்காதனத்திலிருந்து பருத்த நீலரத்தினத்தினு லிழைக்கப் பட்டிருக்கிற பாதக்குறட்டில் மலர்போன்ற பாதங்களை வைத்துக்கொண்டு பரமசிவனைப்போல வெழுந்தருளியிருந்தனர். அக்காலத்தில் கும்சர், உரோமசர், குமுதர், குமுதாட்சர், சகடாயர், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர்; கஞ்ஞிமுனி, வியாக்கிரபாதர், வாமதேவர், சனகர் சனற்குமாரர், வியாசர். மதங்கர், பதஞ்சலி, முதலாகிய அனந்த முனிவர்கள் பக்கத்திற்சூழ நிலைபெற்ற வய்தினையுடைய மார்க்கண்டேய முனிவர் எழுந்திருந்து நந்திஎம்பெருமானை வந்தனஞ்செய்து சுவாமி மேகத்திற்றோன்றி அதிசீக்கிரத்தில் அழியுமின்னல் போல உயிர்கள் இவ்வுலகத்தில் பிறப்பதும் இறப்பதும் இவைகளுக்குக் காரணமாக நல்வினை தீவினைகளாகிய

இரண்டு முண்டாவதுமான காரணங்களை எங்களுக்குவிளங் கும்படியாக முன்னமே அருளிச்செய்த கருணாமூர்த்தியே! இனி நாங்கள் திவாசயுச்சியத்தினை அடைவதற்கேற்ற உபா யத்தினை கிருபை செய்தருள வேண்டுமெனக் கேட்ட மாத் திரத்திற் கிருபா நிதியாகிய நந்தி எம்பெருமான் சொல்லத் தொடங்கினர்.

சைவமுனிவர்களே! கம்பாநதி, கும்பாநதி. காவிரி கோதாவரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகநதி, சரயுநதி கங்காநதி, தாம்பிரவருணி, பொன்முகில், யமுனாநதி நரும தாநதி, சோனைநதி முதலாகிய அநேகநதிகளு லகத்திலுண்டு அவற்றுள் ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாவத்தையவை நீக்கும். அன்றியும் காசியென்கிற ஒரு திவ்வியதலம் இக் கைலாயத்தைப் பார்க்கிலும் சிறப்புள்ளது அக்காசியில் கங்காப்பிரவாகத்தில் திரிகரண சுத்தியுடன் முழுகினல் மோட்சத்திற்கு சாதனமாகும். மரமானும் மிருகமாகியினும் மனிதராயினும் அக்காசியில்இறந்தால் சிவபெருமானுடைய தாரக பிரமோபதேசத்தினைச் செவியிலேற்றலினல் சிவசா ரூபமுண்டாகும். விண்டுவானவர் ஒரு காலத்தில் அசுரரு டன் யுத்தஞ்செய்து யாவரையுந் தோற்கடித்துத் தனித்து ஒரு பக்கத்தினின்று தனது கரத்திலுள்ள கோதண்டத்தினை முகவாய்க் கட்டையினில் ஊன்றிக் கொண்டு நிற்கையில் தோற்றேடிப்போன அசுரர்சிலர் செல்லுருக் கொண்டு வந்து கோதண்டத்தின் நாணினை அடியில் அறிந்தவுடன் கோதண்டத் திடீரென நிமிர விண்டுவின் தலை அறுப்புண்டு அநேக காததூரம் போய் விழுந்தது.

இலட்சுமி கண்டு சிவபெருமானை நோக்கி நடனஞ் செய்து யாசித்துப் பூசித்துத் தனது நாயகனுக்குயிர் பிச்சை யேற்ற கமலாலயமென்னும் திருவாரூர் எனுந் தலமொன் றுண்டு. வீராட்டபுநடனுடைய இதயத்தலமாகிய சிதம்பர

மென்று ஒருதலமுண்டு. அத்தலத்துக் கனகசபையின் கண்ணே சர்வலோகேசனுகிய் மகா நடராஜப்பெருமான் ஆனந்தத்தாண்டவம் புரிந்தார். அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொரு கூறுதான் இக்கைலாயத்திலிருக்கு மெனில், அத்தலத்தின் பெருமையினை யறிந்து சொல்பவர் யாவர்? அத்தலத்தினை தரிசித்தவர்கள் அலைகடற் றுயின்றோனுலும், மலர்மிசை யிருந்தோனுலுங் காணற்கரிய சிவகதியினை யடைவர் சக்கரத்தினைக் கரத்தேந்திய சார்ந்தனன் பூசித்த விருத்தாசலமென வொருதலமுண்டு, அத்தலம் பிரணவ சொருபமாயிருக்கும். அத்தலத்திலுயிர் விட்டால் தேகமழியாது, நிறங்குன்ருது, வீங்கமாட்டாது கட்டுநழுவாது பட்சி மிருகங்களால் பின்னமாகாது. வெடிக்காது துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாதுமேலாகக் கிடக்கும்.

மகிடாசுரனைச் சங்கரித்த சாம்பவியினை வாம பாகத்தினில் வைத்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் எருமை முகம் போன்ற திருக்கேதார மென்னுந் தலமொன்றுண்டு இது இச்சென்மத்தில் வருகிற துக்கமும், மறுமையில் வருகிற துக்கமும் ஞானமின்மையால் வருந்துக்கமும் ஆகிய எல்லாத் துன்பங்களைத் தீர்ப்பதற்கு மூவுலகத்தினர்க்கும் எளிதாகி கனித்த முத்தித்தானமாக விருக்கின்றது, மல்லிகார்ச்சுன மென்னும் பர்வதத்தில் பிரமராம்பிகை சமேதராக விளங்கும் சிவபெருமானை அன்னவாகனத்தை யுடைய பிரமன் வந்து பக்தியுடன் இரண்டு வேளையும் வணங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோக முதலாக வெல்லாவுலகங்களையும் படைத்தார், மற்றைத் திருப்பதியிலிருப்பவரும் தேவர்களும் அத்தலத்தில் சரசமாகவும், அசரமாகவும், பிறந்திருப்பதற்குத் தவஞ்செய்வார்க ளென்ருல் எத்தகைய தலமும் அத்தலத்தினுக்குச் சமமாகுமோ? திருகாளத்தி யென்னுந் தெய்விகம் பொருந்திய தலத்தில் ஆதிசைவப்

பிராமணராகிய சிவகோசரியார் பக்தியோடு மிகுதியாக வருச்சனைசெய்த அறுகு புட்பங்களிவைகளுடனே கண்ணை பிடிங்கிப் பதித்த கண்ணப்பதேவரது காற்செருப்பையும் விருப்பமாக வேற்றுக்கொண்ட இலிங்க சொரூபமாகிய சிவப்பெருமான் தானே குளிர்ச்சி பொருந்திய தேனை சொரிகின்ற தாமரை மலரிலிருக்கின்ற இலட்சுமியுடன் வாசனையுள்ள துளபமாலையை யணிந்தமார்பை யுடைய விஷ்ணுமூர்த்தி திருவேங்கட மென்னுந் திருப்பதியில் நின்றுக்கொண்டு தரிசனஞ் செய்து வணங்கும் பொருட்டு அந்தக் காளத்தி மனையாகியும் விளங்குகின்றார். அகன்ற எண்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்து கொண்டிருக்கின்ற தொண்டை மண்டல மென்னும் தெய்வீகம் பொருந்திய நாட்டில் தரிசனஞ் செய்தவர்களுடைய பாவத்தைப் போக்குகின்ற ஒரு தலமுண்டு அதன் பெயரைச் சொல்லக் கேளுங்கள் சரஸ்வதியின் கணவனாகிய நான் சொல்லக் கேளுங்கள் சரஸ்வதியின் கணவனாகிய நான்முகம் படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படி முப்பானிரண்டு தருமங்களையும் பரிபாவனஞ்செய்து எந்நாளும் காக்கின்ற காமாட்சியம்மையாருடனே ஏகாம்பரரேசுவரர் எழுந்தருளி யிருக்கிற காஞ்சிபுரமாகும். யாதொருபழுது மில்லாமலேழு சமுத்திரங்களையும் ஏழுமலைகளையும், ஏழுலகத்தையும் படைத்த பிரமனுலறியக்கூடாத திரத்தினைச் சிவசருமர் என்னுமோர் ஆதிசைவப் பிராமணப்பிள்ளை யறிந்த தலத்தினைச் சொல்லக் கேளுங்கள்.

ஆனந்தத் தாண்டவஞ் செய்த சுவாமிக்கு பார்வதியாரும், பிரமனும் சிவநேசமிகுந்த விஷ்ணுவும், அரனும் பூசித்த விரிஞ்சிபுரமென்னும் தலமாம். பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரி நதியினிரு கரையிலும் சீர்காழி, திருவையாறு திருவிடைமருதூர், கும்பகோணம் திருவானைக்கா, திரிசிபுரம் இரத்தினகிரி முதலான ஸ்தலங்களில் விளங்கிக் கொண்டிருக்கும் அந்தத் திவ்விய க்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம் வேதமானது தான் மெய்மையாக விவரித்துச் சொல்லும் பெரியசங்குகள் முழங்காநின்ற வைகையாற்றின

திரத்தில் சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளை யாடல்களைச் செய்தருளிய துவாதசாந்தத்தலமாகிய மதுரை மாநகர மென்னுமொரு தலமுண்டு. அத்தலத்தின் மகிமை யினை எவராலுஞ் சொல்லுதலரிது தென் சமுத்திரகரையில் சனன துக்கத்தைத் தொலைக்கின்ற இராமேச்சுர மென்னு மொரு ஸ்தலமுண்டு. யுத்தத்தினை விளையாட்டாகச் செய் கின்ற இராமபிரான் இராவணனைக் கொன்றதனால் நேர்ந்த பிரமஹத்தியை யித்தலத்திற் சிவபூசை யியற்றியப் பாவத் தினை நீக்கிக் கொண்டனர் இத்தகைய தலங்களில் எவராயி னும் பிறந்திடினும், இறந்திடினும், தரிசித்திடினும் பரிசுத்த மாகிய சிவா காயத்தின் கண்ணே நிருத்தஞ் செய்யுமிகுந்த பிரகாசமே சொருபமாகிய சிவபெருமானுக்குத் திருவுளங் களிக்கும்படி தூய்மையாகிய நீரினால் அபிஷேகஞ் செய்தி னும் திரவியங்களைச் செலவுசெய்து சிவாலயங்கட்டுகினும் விரிந்த பூஞ்சோலை வைக்கினும் உத்தமமான சிவசாயுச்சிய முண்டாமென நந்தியெம் பெருமான் சொல்லக்கேட்டு மார்க்கண்டேய முனிவர் சொல்லத் தொடங்கினர்,

எம்பெருமானே இதுகாறும் தாங்கள் கட்டளையிட்ட நதிகள்தோறும் தலங்கள்தோறும் போய்த் தீர்த்தமாடி வழி பாடு முதலானவற்றைச் செய்ய வேண்டுமெனின், மிகுந்த சிறப்பப் பொருந்திய தேவர்களாலும், சித்தர்களாலும். முனி வர்களாலும் முடியாது மின்னல்போற்றோன்றி நிமிடத்தில் அழியுஞ் சிறியவாணாளையுடைய மனிதர்கட்கு எளிதில் முடியுமோ அங்ஙன முடிந்தாலும் மிருகங்கட்கும், பட்சி கட்கு. விருட்சங்கட்கும் இடைக்கமாட்டாதே. மனிதர்கள் ஆடுகின்ற அந்த நதிகள்தோறும் இனிதாகிய அந்ததலங்க டோறும் அநேககாலமாக ஸ்நானஞ் செய்து தரிசன முதலி யவைகளைச் செய்ததினால் உண்டாகிய பிரயோசன மாகிய சிவஞானத்தை வருத்தப்படாமல் சிறிது காலத்திற்றானே

பிரதட்சணஞ் செய்தல், கும்பிடுதல், தரிசனஞ்செய்தல் முத லியவற்றிற்கு ஏதுவாகிய கை, கால் கண்களற்றவர்களுக்கும் விவேகஞானியர்கட்கும் நீசர்கட்கும் நரகத்தில் விழத்தகுந்த பாவஞ் செய்தவர்கட்கும், மற்றுமுள்ள எல்லாஞ் ஜீவராசி கட்கும் புண்ணியம் கொடுக்கின்ற ஒரு ஸ்தல மருளிச் செய்ய வேண்டுமென இயமனைச் செயித்த பெருமையினை வாய்ந்ததவத்தினையுடைய மார்க்கண்டேயரும் மற்றுமுள்ள முனிவர்களும் இந்தப் பிரகாரமாகச் சொல்லித் தோத்திரஞ் செய்து தாமரைமலர் போன்ற கரங்களால் நந்தி யெம் பெருமானுடைய திருவடிகளைப் பரிசித்து வந்தனஞ் செய்யும் அளவில் அவர்கிருபை யுள்ளவராகி நீங்கள் சொன்னபடியே மோட்சங் கொடுக்கின்ற தலமொன் றுண்டு.

அதனைச் சொல்லுகிறேனென்று கையமர்த்தின் பின்பு விடந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமான் எழுந் தருளியிருக்கின்ற அருணாசலமென்னுந் தலத்தினைநினைத்துப் பரவசமாகி தேகமெல்லா மயிர்க் கூச்செரிய நடு நடுங்கிக் கொண்டு இரண்டு நேத்திரங்களிலும் நின்று அருவிபோலா னந்த பாஷ்யம் பரவ, மலர்போன்ற விரண்டு கரங்களு மொன்றாகக்குவிய வார்த்தை தடுமாற அநேக நாழிகை ஞா பகமில்லாமற் கங்கையைத் தரித்திருக்கின்ற சடையை யுடையவரே அக்கினிக் கண்களை யுடையவரே எங்களை யாட் கொண்டவரே என்று தோத்திரஞ் செய்து விழித்துக் கொண்டு அதன்பின்பு சொல்லத் தொடங்கினார்.

கேளும் மார்க்கண்டேயரே! சத்தியமாகச் சொல்லுகின் றேன் மோட்சத்தைக் கொடுக்கின்ற தலமொன் றுண்டு அதற்குரிய நாமங்களோ அநேகம். அத்தனை பெயரையுஞ் சொல்லுகிறதற்கு நானெவ்வளவு சக்தியுடையவன்! ஆனா லும் அவைகளில் சிலநாமம் மாத்திரம் சொல்லுகின்றேன்.

சித்திகளைக் கொடுக்கிற கவுரிநகரம் என்றும் தேவநகரம் என்றும் அழகிய அருணசலம் என்றும், சிறப்புப் பொருந்திய சிவலோகம் என்றும் நாகரீகமிகுந்த வாயு நகரஎன்றும் பெயர்களுண்டு,சத்தபுரிகளென்ற அயோத்தி,மதுரை மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தை, துவாரகை முதலாகிய எல்லாத் தலங்களையும் ஒரு தட்டிலும் அந்த அருணசலத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்க அத்தலங்கட்கெல்லாம் அதிக கனத்தை யுடையதாயிருந்து பிரகாசிக்கின்ற அத்தலத்திற்கு முத்திநகரம் என்றும், ஞானநகரம் என்றும் முதன்மையாகிய தவேச்சுரம், சத்தநகரம் தக்ஷிண கைலாயம் என்றும் சோணகிரி என்றும் பெயர்களாம், இறுதிகாலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினுலும், ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினுலும், சமுத்திரப்பிரளயத்தினுலும் யுகமுடிவில் பொழிகின்ற ஏழு மேகங்களினுலும் யாதொரு வேதனையு மடையாத தலம்,சைத்திய முதலான பிணிகள் தீமையாகிய விடைபூறுகள் பசி முதலிய சேராத தலம், மகத்தாகிய தவசிகள் அநேகமான விஷ்ணுக்கள் பூஜை செய்ததலம் அத்தகைய விஷ்ணுக்களுடைய நாபிகளாகிய தாமரை மலர்களிலுண்டாகிய தொண்ணூற்றுறு பிரமர்கள் பூசித்த தெய்வீகம் பொருந்தியதலம் அருணசலமென்னுந் தலம் இத்தகைய தலமொன்றுண்டு.

இத்தலமின்றைக்குப் புதிதாக வந்ததல்ல இப்பூவுலகமும், மேலுலகங்களும், ஆகாயவெளியும் என்றுண்டாயினவோ அன்றே யுண்டாயிருக்கின்றது. வேதத்தின் முடிவினீங்காமலுள்ளது அத்தலத்தில் கெடுதலில்லாதவொரு மலையுண்டு அது நெடிய கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்குத் தென்திக்கில் என்றும் நிலையுற்றுப் பிரமாண்ட கொள்கையை யுருவி நிற்கின்றது- இருடிகளால் பூசிக்கப்பெற்ற ஆரிடலிங்கம், இராக்கதரால் பூசிக்கப்பெற்ற இராட்சசலிங்கம். அசுரராற் பூசிக்கப்பெற்ற அசுரலிங்கம் தேவர்களால் பூசிக்கப்பெற்ற தைவதலிங்கம், மனிதரால் பூசிக்கப்பெற்ற மானிடலிங்கம் தானே முளைத்த சுயம்புலிங்கம் முதலிய எத்தலங்களிலும் பிரகாசிக்கும் இத்

தலத்திலோ வெனில் மலையே லிங்கமாக விருக்கின்றது, முதல் யுகமாகிய கிருதாயுகத்தில் சிவப்பாகிய அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் மிகுந்த பிரகாசத்தையுடைய பொன் மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவுந் திருவுருக் கொள்ளும் அந்த மலைக்கு அருணாசலமென்னுந் திருநாமமுண்டு, எல்லாச்சீவராசிகளும் கருவறும்படி யுகாந்த காலத்தில் பொழி கின்ற மேகங்கள் ஏழென்கிற வெண்ணிக்கை யில்லாமல் ஒவ்வொன்று கோடியாகிய ஆயிரம் வருஷம் ஒவ்வொரு துளி பனியின் கனி போலப் பருமனாகப் பெய்தாலும் அம் மலையின்மேற் சிறிய வருவியாகச்சுவரி யடங்கிப்போ மல்லால் புறத்தில் வரமாட்டாது.

விஷ்ணு பன்றியாகியும், பிரமன் அன்னமாகியும் அநேக கோடி காலமாகந்தேடி யடி முடி காணாமல் வருந்துவார்களானால் அவ்வருணாசலத்திற்கு ஒன்றைச் சமமாக சொல்லக்கூடுமோ! அஃதல்லாமல் ஆகாய கங்கை தன்னிலும் முக்கியமென்று துதிசெய்கின்ற அந்த மலையிலிருக்கின்ற சுனையிலே நீருண்ணச் சூரியன் தேரிற்கட்டிய குதிரைகள் தாவிச்செல்லும் வெள்ளை நிறமாகிய மேகங்கள் அம்மலை யடிவாரத்தில் சேர்ந்திருத்தல் எவராலும் மதிக்கத் தகுந்த கைலையின்மேல் அம்மலையிருத்தலை யொக்கும் குளிர்ச்சி வாய்ந்த கார்த்திகை மாதத்தில் கிருத்திகா தீபம் அம்மலையின்மேல் ஏற்றுதல் பூமிதேவியினுடைய கிரீடத்தில் பதித்த இரத்தினம் போற்றோன்றும் முன்னொரு காலத்தில் விஷ்ணுவினும், பிரமனாலும் அறியப்படாத சிவபெருமான் கீர்த்தி பொருந்திய அம்மலையுருவங் கொண்டதனால் இமயவத இராஜனானவன் நல்லது இதுகாறும் வேறு சாதியிலிருந்த நம்மருமகன் இப்போது நம் குலமான மலையுருவாயினனென மனஞ் சந்தோஷித்தனன், பன்னிரண்டு மாதமும் சூரிய சந்திரர்கள் மகமேருவை வலஞ்செய்தல் போலப் பிரதக்ஷணம்செய்து வருவார்களென்றால் அவ்வருணாசலத்தின் பெருமையினைச் சொல்லுதற்கு அற்பமாகி என்னுடைய

புத்திபோதுமோ! ஆனாலுஞ் சொல்லவேண்டுமென நினைவு கொண்ட அவாவினால் சொல்லத் தொடங்குகிறேன். அருணாசலம் என்னுமலைக்கு அடுத்தகீழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்று ஒருமலையுண்டு. அதில் ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன் இருந்துகொண்டு சுவாமியை தோத்திரஞ் செய்வான். அவ்வருணகிரிக்கு அடுத்த தென்பக்கத்தில் தெய்வமலையென்று ஒன்றுண்டு. அதில் சிவந்த கரங்களையுடைய இயமனிருந்து புகழ்ந்து வணங்குவான். மேற்பாரிசுத்தில் தண்டமலையென வொன்றுண்டு அதில்மகரவாகனத்திலேறும் வருணராஜன் செவ்விய கரங்களைக்கூப்பி வணங்கிக்கொண்டிருப்பான்.

வடதிசையில் சூலமலையென ஒன்றுண்டு. அதில் எல்லாராலும் ஏத்தப்பட்ட குபேரன் இருந்துகொண்டு துதி செய்வான். மற்ற நான்கு திசைகளிலும் இருக்கிறமலைகளிலிருந்து கொண்டு வாயு அக்கினி ஈசான்; நிருதி இந்நால்வர்களும் வணங்குவார்கள். அவைகளைச் சுற்றியிருக்கிற மலைகளில் எல்லாம் தேவர்களும் சித்தர்களும் சிறப்பு வாய்ந்த அஷ்டவசுக்களும் இருந்துகொண்டு வணங்குவார்கள் தனக்குத்தானே ஒப்பாகிய அத்தலத்திலே பூலோகத்திற்குத் தாயாகிய பார்வதியம்மையார் மகத்தாகிய அரியதவஞ்செய்து சிவபெருமானுடைய இடப்பாகத்திற் சேர்ந்தனள். ஆதலின் அவ்வருணாசலத்தின் பெருமையினைச் சொல்ல முடியுமோ? மந்திரம், புவனம், தத்துவம் இவைகளுருவாய் விளங்கும் அருணாசலத்தின் விஷ்ணு. பிரமன் இருவரும் பன்றியும், அன்னமுமாகித் தேடியுங் காணாமையாலே தங்களுடைய கர்வத்தினை நீக்கினார்கள். மகத்தாகிய கீர்த்தியுற்ற வச்சிராங்கத பாண்டியன் அருணாசலத்தினைப் பிரதக்ஷணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்தைப் போக்கி பயமில்லாதவனாக்கிக் கொண்டனன்.

பெருமை பொருந்திய கலாதரன். காந்திசாலி இவ்விருவரும் அத்தலத்தை வலம்வந்து மோட்சத்தை யடைந்தார்கள் இதுகாறுங் கூறியவர்கள் தொடங்கி அன்று முதல் இன்றுவரைக்கும் அநேகம்பேர் அருணாசலத்தினை நினைந்தும் ஆசையுடன் தோத்திரஞ் செய்தும் கேள்வியுற்றும், தரிசனஞ் செய்தும், பிரதட்சணஞ் செய்தும் அத்தலத்தில் நீதி பொருந்திய வைதிக மார்க்கத்தை யனுசரித்துக் கொண்டிருந்தும் மகத்துவம் பொருந்திய தீர்த்தங்களிலே முழுகியும், தருமங்களைச் செய்துச் சோதி சொருபமாகிய சிவபெருமானது பாதங்களைத் தொழுதும் திருப்பணி செய்தும் கெடுதலில்லாத சிவசாயுச்சியத்தினைப் பெற்றிருந்தார்கள் அவ்வருணாசலம் தமிழ்நாட்டில் இருக்கிறது. அத்தலத்திற்கு வலப்பக்கத்தில் வருகிற பெண்ணையாறு இடையென்னும் நாடியாகும். இடப்பக்கத்தில் வருகிற செய்யாறு பிங்கலையென்னும் நாடியாகும். கமலை என்கிற நதி சுழிமுனை என்னும் நாடியாகும். அந்நதிகளில் ஸ்நானஞ் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் பங்கு பலன்வரும் முப்பத்துமுக்கோடி தேவர்களும், முனிவர்களும் அத்தலத்தில் தவஞ் செய்வார்கள். அத்தலத்திற்கொப்பு இவ்வுலகத்தினும் மேலுலகத்தினும் இல்லை என்று சொல்லினர் நந்தியெம்பெருமான்.

சிவபக்தியிற் சிறந்த நந்தியெம்பெருமான் இவ்வாறு சொல்லிய அருணாசலத்தின் மான்மியத்தினாலே மனமகிழ்ந்து உருக்கத்தை யடைந்த மார்க்கண்டேய முனிவரானவர் மற்றைய சிவதலங்களைப் பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்று சொன்ன உண்மையினை மனத்தி லெலாப்புக் கொள்ளாமல் சொல்லுவாராயினர். சுவாமி! நான் சிறிய அறிவையுடையவனாதலால் தேவரீர் திருவுளம்பற்றி யருளியது நன்றாகத் தோன்றவில்லை. என்று சொல்ல அதுகேட்டுச் சகலத்தையும் உள்ளத்தில் உணர்ந்த நந்தி எம்பெருமான் உமக்குண்டான சந்தேகத்தைச் சொல்லுமெனக் கேட்க, மார்க்கண்டேயர் அவருக்குச் சொல்லுவார்.

சிதம்பரத்தினைத் தரிசனஞ் செய்தாலும், காசியில் தேகத்தினை விட்டாலும், சிறப்பு வாய்ந்த திருவாரூரிலே பிறந்தாலும், அளவில்லாத பெருமையினை வாய்ந்த அருணசலத்தினை நினைத்தாலும் முத்தி கிடைக்குமென்று அருளிச் செய்தீர், இந்நான்கு தலங்களையும் ஒன்றுக்கொன்று ஒப்பென்னத் திருவுள்ளம் பற்றுமல் சுவாமி! அல்லிமலர் தடாகஞ் சூழ்ந்த அருணசலத்தினை மாத்திரம் அதிகமெனக் கட்டளையிட்டதை அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென மார்க்கண்டேயர் கேட்க, அதற்கு நந்தியெம்பெருமான் அருளிச் செய்கின்றனர். கேளும் மார்க்கண்டேய முனிவரே ஒருவன் இறக்குந் தொழிலும், பிறக்குந் தொழிலும், நினைத்தபடி முடியாது. அஃதிருக்க, பட்சி ஜாதிகளுக்கும் மிருகங்கட்கும், விருட்ச முதலிய வோரறிவுயிர்கட்கும் புன்மை நிறைந்த நீசருக்கும் குருடருக்கும் நடராஜப் பெருமானது நிருத்த சபையைத் தரிசனஞ் செய்யவே இயலாது. பூர்வ ஜனன புண்ணியத்திலே அந்தச் சபைக்குப் போய்க்காணத் தகுந்தவர்களாகிய சிலருக்கு மாத்திரங்கிடைக்கும், மற்றவர்கட்கு அரியதாகும்,

ஒருமாது தன் கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டர்களுக்கும், பாவிகளுக்கும், விதவை பெற்ற கோளகருக்கும், நீசருக்கும், கொலை செய்கிறவர்கட்கும், அவயவங் குறைந்தவர்கட்கும், தீமை செய்கின்றவர்கட்கும் நெடுந்தூரத்தில் இருப்பவர்கட்கும் கிருபை வாய்ந்த அருணசலத்தினை ஒருதரம் நினைத்த மாத்திரத்தில் முத்தியுண்டாகும். இவர்களல்லாமல் மிருகங்கள் பட்சிகள் மரங்கள் தாமரை முதலிய கொடி பூண்டுகளும் அத்தலத்தில் முளைத்தால் முத்தியை யடையும் அத்தலத்திலிருக்கிற கற்களெல்லாம் இலிங்கங்களான படியினாலே அதுசிவலோகமாகும். அத்தலத்திலிருக்கிற விருட்சங்கள் யாவும் கற்பக விருட்சங்களாம்: அத்தலத்திலிருக்கிற அலைபொருந்திய நீரெல்லாம் சிவபெருமான் சடாப்பாரத்திலிருக்கிற கங்

கையாகும்; அத்தலத்தில் சாப்பிடுகிற உணவுகளெல்லாம் தேவாமிர்தமாகும். அத்தலத்திற் சஞ்சரித்தல் பூமி பிரதட்சணஞ் செய்தலாகும். அத்தலத்தில் சொல்லும் வார்த்தைகளெல்லாம் வேதமாகும். அத்தலத்தில் நித்திரை செய்தல் நிஷ்டைகூடிச் சமாதியிருத்தலாகும். ஆதலின் அதற்கு மற்றொரு தலஞ் சமானமாகுமோ? காருகபத்தியம். ஆகமனீயம் தக்ஷணாக்கினியம் என்கிற மூன்றக்கினியை வளர்த்தவர்களும், உருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களை உணர்ந்தவர்களும், பிரமயாகம், தெய்வயாகம். பூதயாகம், பிதுர்யாகம், மானிடயாகம் என்கிற ஐவகையாகங்களையும் நிறைவேற்றினவர்களும் எத்தகைய தவஞ் செய்தவர்களும், எத்தகைய தருமஞ் செய்தவர்களும் யாகம். நியமம், ஆதனம் பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி எனப்படுகிற அஷ்டாங்கயோகஞ் செய்தவர்களுமாகிய எத்தகையவராயினும். அவ்வருணாசலத்தை நினையாவிடில் அவர்கட்கு முத்தியென்பது எக்காலுமில்லை,

ஆகையினால் தேவர்களாகச் சொர்க்க லோகத்தில் இருந்தவர்களும் ஞானம் வாய்ந்த மானிடராகப் பூமியிற் பிறந்தும் அவ்வருணாசலத்தினைத் தியானம் செய்து கெடுதலில்லாத முத்தியை அடைந்திருப்பார்கள். ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில் நரை. திரை, மூப்பு உண்டாகாதபடி அமிர்த முண்டிருப்போர்களாகிய தேவர்களும், போகத்தை அனுபவித்தற்குறிய பொன்னுலக முதலாய் திக்குபாலகர்களும் அருணாசலத்திற் கிருமியாக பிறத்தல் சொர்க்கத்தை அனுபவித்தலைப் பார்க்கிலும் அதிகமெனப் பிறத்தற்கு ஆசைப்படுகிறார்கள். தெய்வத்தன்மை பொருந்திய அத்தலத்தில் பிறத்தல் நூறுயாகஞ் செய்தவர்கட் கல்லாமல் கிட்டாது. சிவபெருமானது கிருபை பெற்றவர்கட்கு கிடைக்கும். அவர்களன்றி மற்றைய தேவர்கள் முதலான மகத்

துவம் பொருந்திய யாவர்க்கும் அங்ஙனம் பிறத்தல் இடைக்கமாட்டாது. சொற்பவிலைபெற்ற இரும்பிலும்; செம்பிலும் வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப்பொன்னினும் பதித்த தோஷமில்லாத மாணிக்க ரத்தினம் போல மற்றையஸ்தலங்களில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பர் பொன்னாற் செய்த தகட்டினில் பதித்த இரத்தினம் போல அருணசலத்தில் எழுந்தருளியிருப்பர். கண்களிருக்கிறதினால் முகம் பிரகாசிக்கும் அம்முகத்திலிருப்பதால் அக்கண்கள் விளங்கிக் கொண்டிருக்கும். இவை யிரண்டினுடைய சேர்க்கையழகால் உடலெல்லாம் விளங்கும். அதுபோலச் சிவபெருமானால் அருணசலம் சிறப்படையும். அவ்வருணசலத்தால்சிவபெருமான் அமிசையுடையவராய் விளங்குவார்

அத்தலத்தாலும் அப்பெருமானாலும் எண்ணில்லாத தலங்களெல்லாம் சிறப்புற்று விளங்கும், ஆதலின் எத்தலத்திலும் அருணசலஞ் சிறந்து விளங்கும். ஒரு கொடியினது வேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மணம் வீசுகின்ற புட்பங்களும். இலைகளும் குளிர்ச்சியினை யடையும், அதுபோல் அருணசலத்தில் சிவபெருமானுக்கு எள்ளளவேனும் பூசை குற்றமின்றி நடக்குமானால் அதுகாசி முதலிய எல்லா ஸ்தலங்களிலும் மேன்மையாகப் பூசை நடந்ததாகும். அவ்வருணசலத்தில் பூசை நடவாவிட்டால் மற்றைய தலங்களில் நடந்தாலென்ன நடவாவிட்டாலென்ன ஒருபயனுமில்லை உலகத்தார் போற்றுகின்ற அருணசலத்தினைவிட உயர்ந்த தலமிருக்குமென்பதிற் சந்தேகங்கொண்டு சென்று ஒரு ஸ்தலத்தினை நாடி நடந்தவர்கட்கு அவர்கள் அதற்குமுன் செய்திருந்த தவங்களும் பிரயோசனப்படமாட்டா. அவர்கள் நல்லகுலத்திற் பிறந்தவர்களானாலும் நீசரேயாவர் நல்ல குணங்களை யுடையவரானாலும் கொடிய குணத்தவராவர், அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்

கட்குச் சமானமானவரே யாவார்கள். அவ்வருணாசலத்திற்கு ஒப்பாகச் சொன்னாலும் தோஷமனைத்து முண்டாம். இங்ஙனம் அருணாசலத்தின் பெருமையினைக் காரணங்களுடன் முனிவர்கட்கு இனிதாக வெடுத்து அருளிச்செய்து மான் மழு உடைவாள் தரித்த நந்திதேவர் களிப்புற்றிருந்தார். அந்நந்தி யெம்பெருமானைப் பலதரம் வந்தனஞ்செய்து கரங்குவித்துட்டுருகிச் சிரசின்மேல் சிவந்த கைகளை நெடுநேரங் கூப்பி ஒன்றுபட்ட மனத்தராய் ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கித் தன்னை மறந்தவராகிப் பின்பு ஞாபகமடைந்து மார்க்கண்டேயர் சொல்லுவாராயினர்,

திருநகரச் சருக்கம் முற்றிற்று.

சிவபிரான் முடியையும். அடியையும் காணப் பிரமன் அன்னமாயும், விஷ்ணுவராகமாயும், தேடி அலுத்து நிற்க கயிலையினின்று தவறிய கைதை பிரமனுக்காகப் பொய்சொல்லக் கைதைக்கும், பிரமனுக்கும் நேரிட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலைச்சுருக்கம்

அருணாசலத்தின் மகிமையினைக் கேள்வியுற்ற மார்க்கண்டேய முனிவர் நந்தியெம்பெருமானை நோக்கி, ''எம்முடைய ஆண்டவரே! அடியார்க்கெளியவரே தேவரீர் அருளிச்செய்த திருவண்ணாமலை என்னுந்தலத்தின் மகிமையினால் மனங்களிப்புற்றேன். அத்தகைய ஸ்தலத்தினிடத்தில் சிவபெருமான் அக்கினி சொரூபமாய்த் திருவுளங்கொண்டதும் அதன்பின்பு மலையுருவமானதும், அந்த அக்கினி மலையின் அடியும், முடியும் அறியக்கூடாமல் பிரமதேவரும், விஷ்ணுமூர்த்தியும் வருத்தமடைந்ததும், பின்பு சிவபெருமான் அவ்விருவர்கட்கும் அனுக்கிரகஞ் செய்ததும் திருவுளம்பற்ற வேண்டும்'' என்று விஞ்ஞாபனஞ் செய்துகொண்டனர், நந்தியெம்பெருமான் அம்முனிவரைப் பார்த்து' ஐயா ஒருவன் அந்த அருணாசலத்தில் பஞ்சமா பாதகங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும், அங்ஙனம் நினைந்ததே விசேஷ புண்ணியமாகி அதனால் பற்றுக் கோடாகிய முத்தியுண்டாகும் என்று வேதங்கள் விளம்பும் அன்பினை யுண்டாக்கும், நல்ல சொற்களினால் தோத்திரஞ் செய்பவர்கட்கு என்னபேறு கிடைக்கமாட்டாது? ஆனபடியால் அந்த அருணாசலத்தின் மகாத்மியத்தைக் கேட்கிற உமக்கேயல்லாமல் எனக்கும் அதிகபலனுண்டாம்; துக்கத்தையும் மோகத்தையும், நீக்கிவிடுகிற சிவபெருமான் ஒப்பற்ற பெரியசோதி வடிவமாய்ப் பிர்மா விஷ்ணுக்காக ஆகாயம் அளாவி வந்ததும் யாவருக்கும் போகத்தைக் கொடுக்கா நின்ற இலிங்க வடிவமென்று சொல்லும்படி திருவுருக்கொண்டதும் எனக்குத்

தெரிந்த அளவில் சிறிது சொல்லுகிறேன் கேட்கக்கடவாய்' என்று சொல்லத் தொடங்கினர்.

மார்க்கண்டேய முனிவரே! சர்வசங்கார காலத்தில் முறைப்படி சகல உயிர்களும் பிரமனிடத்திலே ஒடுங்கிப் பிரமதேவர் விஷ்ணுவிடத்தில் ஒடுங்கினர், அந்த விஷ்ணு உருத்திரனிடத்தில் ஒடுங்கினர். அவ்வுருத்திரர் மகேச்சுரனிடத்தில் ஒடுங்கினர். அம்மகேச்சுரர் சதாசிவரிடத்தில் ஒடுங்கினர். அச்சதாசிவர் விந்துவினிடத்தில் ஒடுங்கினர். அவ்விந்து நாதத்தில் ஒடுங்கியது, அந்நாதம் சத்தியினிடத்தில் ஒடுங்கியது. அச்சத்தி சிவத்திலே ஒடுங்கியது. அச்சிவத்தினுக்கு மேற்பட்ட வஸ்து ஒன்றுமின்மையால் அது தனித்து நின்றது, அப்பரமசிவன் மறுபடியும் உலகத்தினையுண்டாக்க வேண்டுமெனத் திருவுளங் கொண்டபோது அச்சிவனிடத்து ஒடுங்கின முறையே யாவரும் உண்டானார்கள். பிரமன் தனக்கு உரிய தொழிற்படி உலகத்தினைச் சிருஷ்டிப்பதற்கு மனதில் எண்ணினர். அங்ஙனம் நினைத்தவுடன் மரீசி, அங்கிரர், புலத்தியர், புலகர், கிருது, அத்திரி சனபதி என்கிற இருடிகள் எழுவரும் பிறந்தனர். தக்கன் வலதுகால் பெருவிரலிற் பிறந்தான், பிறகு மார்பினிடத்திற் பிறந்தான், தருமதேவதை முகத்திற் பிறந்தது. மேற் சொன்ன மரீசி முனிவரிடத்தில் காசிபன் பிறந்தனன். தக்கனென்பவன் ஐம்பது பெண்களைப் பெற்றனன். அப்பெண்களுள் பதின்மூவரைக் காசிபன் விவாகஞ் செய்து கொண்டனன்.

முதல் மனைவியாகிய அதிதி என்பவள் வயிற்றில் முப்பத்து முக்கோடி தேவர்கள் பிறந்தார்கள். இரண்டாவது மனைவியாகிய திதி என்பவள் வயிற்றில் இரணியாதி இரணியாட்ச னென்னும் இருவர் பிறந்தனர். இவ்விருவரில் இர

ணியன், பிரகலாதனன் முதலாக ஐந்து பிள்ளைகளைப் பெற்றனள். அப்பிரகலாதனன் மூன்று பிள்ளைகளைப் பெற்றனன். அம்மூவரில் விரோசனன் என்பவன் மாவலி என்பவனைப் பெற்றனன், மாவலி வாணாசுரனைப் பெற்றனன். அவ்வாணாசுரன் பரமசிவனைப் பூசிந்துப் பிரமன் தொழும்படியான வாழ்வு பெற்றிருந்தனன், தேவேந்திரன் வேண்டுகோளுக் கிரங்கித்தன் முதுகெலும்பைக் கொடுத்தவனுகிப் ததீசி என்பவன் சம்பரன் முதலாய்ப்பத்து அசுரர்களையு பெற்றனன். அப்பதின்மருள் சிங்கிகை என்பவள் இராகு முதல் நான்கு பிள்ளைகளைப் பெற்றனள், அவளுக்கு இளையவள் மூன்று அசுரரைப் பெற்றனன். காலை என்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும் பெற்றனள். கவிர்த்தை என்பவள் கருடன் அருணனுடன் நான்கு பிள்ளைகளைப் பெற்றனள், கத்துரு என்பவள் பாம்புகள் எல்லாவற்றையும் பெற்றனள். அரிட்டை என்பவள் அரம்பை—ஊர்வசி முதலிய பெண்களைப் பெற்றனள், இலங்கிளை என்பவள் பதினாறு வகையாகிய கந்தருவர்களையும் பெற்றனள். கபிலை என்பவள் பத்து பிள்ளைகளைப் பெற்றனள். அங்கிரர் சனபதி என்னும் இருவரும் கர்ந்தருவரைப் பெற்றனர் அத்திரி யென்பவன் சூரிய சந்திரர் இருவரையும் பெற்றனன் புலத்தியன் இராட்சதர்—வானவர்—கின்னரர் இவர்களைப் பெற்றனன். பலகர் என்பவன் கிம்பிருடரையும் மிருகங்களையும பெற்றனன் சனபதி என்பவன் அஷ்டவசுக்களைப் பெற்றனன். பிருகு என்பவன் கவி சவுனகன் இலக்குமி மூவரையும் பெற்றனன். கவி என்பவன் சுக்கிரனைப் பெற்றனன். சூரியன் தன்மனைவியைச் சேருவதற்கு எத்தனப்பட்டபோது அவள் அதற்குச் சம்மதியாமல் பெண் குதிரையாக ஓடினாள் சூரியன் ஆண்குதிரையாகித் தொடர்ந்து போக அவள் திரும்பிப் பார்த்தனள். அப்போது அவள் மூக்கினில் சூரியன் இந்திரியத்தையூற்ற அசுவனி தேவர்கள்

இருவர் பிறந்தனர். அதன்பின்பு சரமும் அசரமுமான அநேக மூண்டாயின.

இங்ஙனம் சகலமும் உண்டாகிய பின்னர் பிரமதேவர் இந்த உலகமனைத்தும் நம்முடைய சிருஷ்டியினுலன்றோ உண்டாயினவென்று அகங்காரங் கொண்டு அதனால் வைகுந்தத்தில் வழியிற்சென்று விஷ்ணுவைப்பார்த்து அவமதித்தச் சிலவார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினர். வாராய் விஷ்ணுவே! 'பதினான்கு உலகங்களையும் கறுத்த மேகங்களையும், சத்த சமுத்திரங்களையும், சத்தகுல பருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினால் படைத்து இப்போது வாழ்கின்ற எல்லா உயிர்களையும் உண்டாக்கி, மரீசிமுதலிய இருடியர்களைப் பெற்றேன், என்னுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள் குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத்தேவர்களும் சந்திர சூரியர்களும், அசுரர்களும், கந்தருவர். கிம்புருடர், சித்தர், கணநாதர்களும் தேவேந்திரன் முதலாகிய திக்குபாலகர்கள் எட்டுப்பேராய் யிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்கள் சகலத்திற்கும் கர்த்தர் நீ என்பதும் உன்பிள்ளை நான் என்பதையும் மறந்துவிடு. நான் உலகத்தினைப் படைக்காவிட்டால் நீ எப்படி காப்பாற்றுவாய்? சுவரின்றி சித்திரமெழுத முடியுமோ சகலத்தையும் இரட்சிக்கின்றோமென்கிற மமதையைவிட்டு விடு விடாமற்போனால் உன் உத்தியோகத்தினை நீக்கி மற்றொருவனை யுண்டாக்கி இரட்சிக்குந் தொழிலுக்கு நியமித்துப் போடுவேன். என்னுடைய புத்திர பௌத்திரர்களாகிய தேவர்கூட்டங்கள் உன்னைக் கொல்லும்படி வளைத்துக் கொள்ளுவதற்கு முன்னே திருப்பாற் கடலுக்குள்ளே குதித்து ஒளித்துப் போகக்கடவாய்.

ஞான சொருபமாகிய பிருகுமுனிவரிட்ட சாபத்தினால் பத்துதரம் நீ பூமியிற் பிறந்தாய். பிறந்தபோதெல்லாம் நானன்றோ உன்னை சிருஷ்டித்தேன். அவ்வப்போது உன்னுடல்களைப் படைத்துப்படைத்து என்கைகள் காய்ப்பேறிக் காய்த்தும் போயிற்று. இதோ பார்! ஒரு காலத்தில் உன்னுடைய நாபிக் கமலத்தில் நான் வந்தவனென்று நீ

னிந்தனை சொல்லாதே. முன்னொரு காலத்தில் நீஒரு தூணி
னிடம் பிறந்தாயன்றோ? அத்தூணை உனக்குத் தகப்பனென்று
சொல்லலாமா? அல்லது தாயென்று சொல்லலாமா?
அத்தூண் உனக்குத் தந்தையாகுமேல் எனக்கு நீ தந்தை
யாவதற்கிடமில்லை நெருப்பானது மூங்கிலினிடத்திலே உற்
பத்தியாகி மூங்கிலைத்தானே கொளுத்திப் போடுகிறதையறி
யாயோ? அங்ஙனமே உன்னிடத்தில் நான் பிறந்திடினும்
உன்னையழித்துப் போடுவதிற் றடையில்லை" என்றனர், இங்
ஙனம் பிரமன் சொன்ன வார்த்தைகள் விஷ்ணுவிற்கு இர
ண்டு காதிலும் வேலாயுதத்தைப் பழுக்கக் காய்ச்சித் தொ
ளைக்க விட்டு உள்ளேசெலுத்திய நெருப்புப் போலத்தகிக்க
மிகுந்த கோபம்கொண்டு புகையெழும்படியாக நகைத்து
இப்பிரமனுக்கு இவ்வகங்காரம் எவ்விதத்தினாலோ என்று
ஆலோசித்தும் சிலவார்த்தைகளைச் சொல்லந்தொடங்கினார்

"பிரமனே! நீ வந்த வழியினையும் நினைத்ததாயில்லை,
என்னுடைய நாபியை உனது தாயென்று ஆலோசித்ததா
யில்லை. தந்தையாயினபேர் தங்கள் பிள்ளைகள் செய்த பிழை
களைக் குற்றமாக நினையார்கள் என்று இவ்வார்த்தைகளைச்
சொல்லினை போலும்; இனிச்சிறிதும் பொறுக்கமாட்டேன்.
கோபத்தினையுடைய மதுவென்பவனும் யானைபோன்ற கை
டவனென்பதும் எனக்குப் பிள்ளைகளல்லவா? என்னை
இகழ்ந்தபடியினாலன்றோ நான் அவர்களைக் கொன்று விட்
டேன். நிலைபெற்ற ஒரு தீங்குசெய்தால் அக்காலத்தில் மக
னென்று பார்க்கக்கூடுமோ? அஃதன்றித் தேகத்தினிடம்
ஒரு கட்டி கண்டால் அதை யறுத்தெறிந்து சௌக்கியப்
படுத்திக் கொள்ளாமல் இருக்கின்றவர்களும் உண்டோ?
முதல்வனாகிய பரமசிவன் உன்னுடைய தலைகளில் ஒன்றை
பிடுங்கி எறிந்த காலத்தில் அத்தலையினை மறுபடி உண்டாக்
கிக்கொள்ள வகையறிந்ததாயில்லை. இத்தகையனாகிய நீ தலை
வனாவது எப்படி? இப்படிப் பட்டவனன்றோ பட்டத்தை

வாய்ந்த ஆதிசேடன் முடியிலிருக்கிற பூமியினைப் படைத்தனை! சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைத் திருடிக்கொண்டு போனபோது, நான் மச்சவதாரங் கொண்டு அவ்வசுரனைக் கொன்று அவ்வேதங்களை வாங்கித் தந்தேன் அஃதன்றிச் சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைக் கொன்று தேவர்களுடன் உன்னையும் காப்பாற்றினேன். எட்டிமரமானாலும் தான்வைத்த மரமாக யிருந்தால் அதனை வெட்டத் துணியார்கள். அதைப்போல எனது பிள்ளையான உன்னைக் கொல்லக்கூடாதென்று அஞ்சுகிறேன்" என்றனர்

இங்ஙனம் ஒருவர்க்கொருவர் எவ்வளவோ வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கோபித்துக் கொண்டுப் புஜத்தின்மேல் கைகளாலே அடித்துக் கொண்டார்கள் பூமியின் மேல் குதித்தார்கள், நெருங்கினார்கள் சிமிர்த்தார்கள் நெருப்புப்பொறி நெருக்கமாய்விழ சுருக்கெனக் கண்களை விழித்தார்கள். சண்டையிட ஆரம்பித்தார்கள். இருவருஞ் சண்டை செய்கிறபோது மலையனைத்தும் பொடியாயின. அண்டகடாகம் படீரென வெடித்தது. பற்பல கிரணங்களையுடைய சந்திர சூரியர்கள் ஒளித்தார்கள். ஆதிசேஷன் தலைச்சுமை பொறுக்கமாட்டாமல் வுடல்நெளிந்துக் கொண்டான். கற்பகாலம் வந்து உலகம் அழியப்போகிறதென்று இமையா நாட்டமுடைய தேவர்கள் கண்களை இமைத்துக் கொண்டார்கள். நட்சத்திரக் கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் உதிர்ந்தன. உலகமெல்லாம் துன்பங்களுடன் அடுக்குக்குலைந்து விழுந்தன. தூளெழும்பின கங்கை முதலான நதிகளனைத்தும் தண்ணீரில்லாமல் வற்றிப்போயின, அட்டத்திக்கினு லிருக்கிற யானைகள் இடுக்கிட்டுப் பயந்தன, ஒருவரை யொருவர் மேலே எடுத்தெறிவார்கள். கீழே விழுவார்கள். மறுபடியும் எழுந்து விரைவில் ஓடி வளைந்து எதிரே நின்று குத்தென்று சொல்லுவார்கள். அங்ஙனம் குத்திக் கொண்டு மடியைப் பிடித்துச் சூறைபோல அநேகவிசை

சுழன்று திரிவார்கள் அது அந்திநேரமும் இருளும் வலமிட மாக வருதலை ஒத்திருந்தன.

அவ்வேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்ற ஜீவன் களும் தவழ்கின்றவைகளும், நடக்கின்றவைகளும், பறக் கும் ஜீவராசிகளைப்போல ஆகாயத்தில் பறந்தன நிலையாக நின்ற விருட்சமும் மலைகளுமுதிர்ந்தன. திரளாக நிறைந்த ஐந்துவகையாகிய தேவதருக்கள் பொடிப் பொடியாய்ப் போயின. எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது மகாமேரு அசைந்தது, சத்த சமுத்திரங்களுஞ் சேராயின, சருவசங் காரகாலம் வந்ததென்று சொல்லும்படி இருவரும் சண்டை செய்ய அவ்வேளையில் தேவர்களெல்லாம்பயப்பட்டு தேவே ந்திரனிடத்திற் போய்ச்சேர்ந்து தங்களுடைய துக்கத்தை சொல்லுவதற்கு முன்னே தேவேந்திரன் தான்பட்ட துன் பங்களெல்லாம் சொல்லிப்பின்பு நீங்கள் வந்த காரியம் ஏதெ ன்றுகேட்கத் தேவர்கள் இந்திரனைநோக்கி ஐயா "பிரம விஷ்ணுக்களாகிய இருவரும் பூமியில் மிகுந்த யுத்தத்தைச் செய்கின்றனர், எங்கட்குப் பிழைக்க தகுந்த மார்க்கம் வேறேயில்லை சகல லோகங்கட்கும் காரணமாய் சர்வைஸ் வரிய சம்பன்னராய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தொழுது இச்செய்தியினை விஞ்ஞாபனஞ் செய்துக் கொள் வதே நலம் என்றனர்.

இங்ஙனம் சொல்லத் தேவேந்திரனும் சம்மதித்து தேவர்களுடனே சென்று திருக்கைலாயத்தினை யடைந்து பரமசிவனுடைய பரிசுத்தமாகிய தாமரை மலர் போன்ற திருவடியினைத்தொழுது, அனந்தகல்யாண குண சம்பன் னராக விளங்கும் அமலனே! அம்பலவாணனே! அடியேன் விஞ்ஞாபனத்திற்குச் செவி கொடுத்தருளவேண்டும், விட்டு ணுவும், பிரமனும் சண்டை செய்து வருவதால் விளையும் துக்கத்தினை நிவர்த்தி செய்தருள வேண்டும் ; பிள்ளைகட்குத்

தாயே துணையில்லாமல் மற்றொரு துணையுமுண்டோ? உருண்டு கொண்டு போகின்ற வண்டியினுடைய சக்கரம் போல, அஞ்ஞானம் பொருந்திய பிறப்பையும் இறப்பையும் மாறி மாறியடைந்து வருத்தத்தை யனுபவியாமற் மோட்சத்தைப் பெறத் தேவருக்கு அடிமையாகப் புகுந்து தேவரீருடைய அளவில்லாத கிருபைக்கடலில் குளிக்க அடைக்கலமானேனும் அநேகம் புழுக்கள் குடைந்து கொண்டிராநின்ற உடற்பாரத்தைப் பொறுக்க முடியாத இழக்காகிய சுவாமியே பெரிய சமுத்திரத்தினிடத்தில் தினம் முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்கற்றுப்போக அடைக்கலமாக உமது திருவடியில் அடைந்தோம். இனிமேல் வேறே ஆலோசனையில்லை. எங்கட்குக் கிருபை செய்தருள வேண்டுமெனத் தோத்திரஞ் செய்கையில் கருணைக்கடலாகிய கண்ணுதற்பெருமான் அவ்விருவருக்கும் வந்தசண்டையின் மூலத்தினை யறிந்துகொண்டு சகல ஆன்மாக்களிடத்தும் எள்ளிலெண்ணெய் போல எழுந்தருளி யிருக்கும எமது பெருமான் அவ்விருவர் சண்டையு மாற்றக் கருணை கூர்ந்தனர்.

நடுக்கமடைந்த முனிவர்கள், தேவர்களெல்லோரும் பயம் நீங்கும்படி சர்ப்ப சயனத்தில் நித்திரை செய்கின்ற விட்டுணுமூர்த்தியும் தாமரைப் புட்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும் ஒருவருக்கொருவர் தம்பகை நீங்கவும் அடுக்கடுக்காய் இருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்கழியாமலிருக்கும் கிருபை செய்வதாய்த் தடுத்தற்கரிய அக்கினி சொருபத்தோடு கூடிய ஒருமலையாகி அவ்விருவருக்கும் மத்தியில் எழுந்தருளினர், பாதாளத்தி லிருக்கும் பாம்புகள் அனைத்தும் அம்மலைக்குச் சல்லிவேராகவும், அதன் கீழ் பருத்தவேரோடி பூமியிற் பெரியதாய்க் கிளைத்துத் தேவலோகங்கள் எல்லாம் தாண்டி பிரமலோகத்து முகட்டையுமுடைத்து அண்டகடாக வெளியைக்கடந்து அதற் கப்பாலிருக்கின்ற பெரிய வெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் வக்கினி சொருபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்

வளர்ந்தது உதயமாகி நெடுந்தூரங் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேர்க்கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக் கூடாத உலகமெல்லாம் ஒடிக்கிளைத்த நீலமணி போலும் கரிய இருளை ஓட்டுவதற்கு ஏற்றி வைத்த விளக்குபோல் பிரகாசிப்பதனால், சமுத்திர மெல்லாம் சொல்லுதற்கரிய வடவா முகாக்கினி பறந்தது போலச் சிவப்பு நிறம் போலிருந்த சத்தகுல பர்வதங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தினால் அந்த அக்கினி மலை சொறிந்த அக்கினிப்பொறிகள் போலச் சிவந்தன. இங்ஙனம் ஆகாய பரியந்தம் அக்கினி சொரூபத்தைக் கண்ட பிரமனும், வேணு நாதத்தைச் செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும் பயப்பட்டு ஒதுங்கி நின்றனர், ஞானக்கண்களை யுடையவர்கள் காணுவதல்லாமல் குற்றம் பொருந்திய ஊனமாகிய முகத்திற் கண்ணுடையவர் காண்கிறதற்கு எளியரோ நம்முடைய பரமசிவன்| அவ்விருவரும் தங்கள் கண்களாலே இவ்வளவு தூரம் இம்மலை போய் இருக்கிறதென்று அறியக்கூடாத பிரகாசமான மலையினைப் பார்த்து இரண்டு பேருந்துன்பத்தினை யுடையவர்களாய் இம்மலையினது அடியையாவது முடியையாவது அறிகிறவரே பெரியவரென ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு சர்ப்பாசயனத்தில் நித்திரை செய்பவராகிய விஷ்ணுமூர்த்தியானவர் இம்மலையின் அடியினை நான் அறந்து வருகிறேனென்று வராக வடிவமானார்.

இம்மலையின் சிகரத்தினைக் காண்கிறேமென்று பிரமன் அன்னப்பட்சியாகி ஆகாயத்திற் பறந்தார் அரைக்கணத்தில் பிரமதேவர் ஆயிரங்காதவழி பறந்து மேலாகப்போனார் படத்தை யுடைய ஆதிசேஷன் சுமக்கும் பூமியை அரை நொடியில் ஆயிரங்காததூரம் தோண்டித்துக்கொண்டுவிஷ்ணு கீழாகப்போனார். அவர்கள் அங்ஙனம் மேலும், கீழும் போனது எங்ஙனமிருந்தது என்னில் அம்மலை தங்கமயமாகிய இரத்தினப்பூட்டைப் போலவும்) அதில் இறைக்கிறதற்குக் கட்டி விட்டிருக்கிற நீலரத்தினத்தோண்டி போல

வும், அதில் முத்துக்கள் இழைத்திருக்கிற அழகியதோண்டி போலவும் இருந்தன. வராக வடிவமெடுத்த விஷ்ணுவான வர் பூலோகத்தைக் கடந்து அதன்கீழ் இருக்கிற ஏழு உலகத்தினையும் முறையே தொளைத்துக் கடந்துபோய் மாவலி சக்கரவர்த்தி காவல் இருக்கிற போகவதி பட்டினத்தைத் தாண்டி அப்புறம் தேவர்கள் வணங்கும் பிரம சொரூபமாய் நின்ற ஆடகேசரத்தைக் கண்டு கைகளினாலும் சிரத்தினாலும் வணங்கி முன்னே மூன்று லோகத்தையும் அளந்தவர் இப்போது ஏழு உலகங்களையும் அளந்தும் அம்மலையின் அடியைக்காணாமல் தனது வளர்ச்சியுற்ற இரு கொம்புகளும் தேய்பிறைபோல் குறைந்து மழுங்கிப்போகவும், கார்குளம்புகளும் முகத்தினுனியும் தேடும்போது எங்ஙனம் குறைந்து போயிற்றோ அங்ஙனம் தேய்ந்து குறைய எண்ணக் கூடாத துக்கசாகரத்தில் விழுந்து நூறு வருஷகாலந்தேடியுங் காணாமல் பின்பு தெளிவடைந்து இது முதல்வனாகிய சிவபெருமான் செயலென்று உணர்ந்து அவரைத் தியானம்செய்து இளைப்பும் சலிப்டம் நீங்கித் தன்னுடைய துக்கசமுத்திரத்தினையும், ஏழு உலகத்தினையுந் தாண்டிப் பழையபடி பூமியின்மேல் வந்துதனக்கும் பிரமனுக்கும் வந்த கலகத்தை நீக்கும்படி அக்கினி சொருபமாய் எழுந்த தலத்தினைச்சேர்ந்து அழகிய தாமரைப் பூவிலிருக்கின்ற பிரமன், இம்மலையின் முடியினை அறியமாட்டானென நிச்சயஞ் செய்துகொண்டு நம்பாத மனிதர்கட்கு அரிதானவரை எத்தகையினருக்கும் தூரமானவரைத் தன்னுடைய கண்ணாகிய புட்பத்துடன் அழகிய புட்பங்களைத் தரிசிக்கின்றவரைப் பலதரமும் வந்தனஞ் செய்து உள்ளமுருகிப் பரவி நின்றனர்.

இந்தப்பிரகாரம் விஷ்ணு இருக்க அக்கினிமலையின் முடியைத்தேட, அன்னப்பட்சிபாகப் பிறந்த பிரமர் அரைக்கணத்திலே ஆயிரங்காதவழி தாண்டிபோய்ப் பார்த்தாலும் முதல் பார்த்தது போலவே முடிவில்லா திருக்கவும் சிறகெல்லாம் உதிர்ந்து வேகமுமடங்கிக் குறைவில்லாத துக்க

மும் பெருமூச்சும் அதிகப்பட்டு மனக்குறை வளர ஒருவரு மின்றித் தனியேநின்று மனத்தில் ஆலோசிக்கத் தொடங் கினர், என்னைப்போலவே இவ்வக்கினி மலையின் அடியைத் தேடிக் கொண்டுபோன விஷ்ணு அடியை அறிந்து திரும்பு வானோ? கொஞ்சம் தூரந்தேடி முடியாமல் திரும்பி வரு வானோ? எத்துக்கம் அதிகரித்து ஊஞ்சல்போல தள்ளாடி நெருப்பிலே இட்ட மெழுகுபோல் இளகிய மனமுடையவ னாகி இம்மலையினைச் சிவபெருமானென்று அறியாமற்போ னேனே! பகைத்துக் கொள்ளப்பட்ட விஷ்ணுவையாவது உறவுசெய்து கொள்ளாமற் போனேனே! அன்று முதல் இன்று வரையிலும் வெகுகாலமாய்த் துக்க சமுத்திரத்தில் மூழ்கினேனே என்னுடைய சிறிய புத்தியினாலேயோ? பூர் வம் நான்செய்த பாவத்தினாலேயோ இங்ஙனஞ் சம்பவித் தது இவ்வளவு தூரந்தேடி வந்தும் முடியை யறியாமற் போனேன். ஆனாலும் இனிமேற் போய் விஷ்ணுவினிடத் தில் முடியைப் பார்த்தேனென்று பொய்சாட்சி சொல்வதற் கும் ஒருதுணையும் இல்லையே என்று விசனப்பட்டுக்கொண் டிருக்கிற சமயத்தில் தாழம்பூமடல்ஒன்று மேலிருந்து இறங் கித் தனக்கு சமூகமாக வரக்கண்டு இத்தாழைமடல் எங் கேயிருந்து வருகிறதென்று ஆலோசித்து அதைத் தனது கரத்தில் ஏந்தினன். அது சிவபெருமானுடைய சிரத்தி னின்றுந் தவறி விழுந்த பழம்பூவாகையால் மெய்மையான பெருமூச்சுடன் என்னைச் சீக்கிரத்தில் விட்டுவிடுவாயெனச் சொல்லிற்று. அதனைக்கேட்டு அழகிய தாழம்பூவே! எங் கேயிருந்து இங்குவந்து கொண்டிருக்கிறாய்? என்று பிர மன் கேட்க, நான்முகக் கடவுளாலும் நாராயணனாலும் அறியக்கூடாத பரமசிவனுடைய சிரத்திலிருந்து நாற்பதினா யிரம் வருஷங்களாக இன்னும் பூமியில் நான் போகவில்லை வருத்தத்துடன் வருகிறேன் என்னைப் பிடிக்கவேண்டாம் விட்டு விடென்று தாழம்பூ சொல்லப் பிரமன் சுவாமியின்

முடியைத் தேடுவதை நிறுத்திச் சிலவார்த்தை சொல்லத் தொடங்கினர்.

என் சமீபத்திலுற்ற தாழம்பூவே! "நீ எனக்குத் துணையாயிருந்து நான் இன்னமுந்தேடி யலையாமல் என்வருத்தத்தை நீக்கினால் உன்னைப்பார்க்கிலும் உயிர்போன்ற துணையும் உறவும் வேறில்லை, நானும் அன்னியனல்லன் அன்னப்பட்சியும் அல்லன், என்பெயரோ பிரமன், நானும் விஷ்ணுவுங்கூடி அக்கினி சொருபமாகிய இர்மலையின் உயர்வைத்தெரிந்து கொள்ள எண்ணினோம். பூமியின் கிழிடத்தைப் பிளந்து கொண்டு அவன் அடியை தேடப்போனான். பாவியாகியநான் முடி யைக்காண வெகுநாள் தேடியுங்காண்கிலேன், ஆதியந்தமாக நடந்த செய்தி இது அதைக் குறித்துப் பேசுவதினாற் பலனென்ன? பெருமை பொருந்திய உன்னுடைய நல்வரவினாலே நினைத்த காரியம் முடிந்தால் தான் பலன் பூமியை அளந்த விஷ்ணுவிடம் பறவையாய் உருவெடுத்த இப்பிரமன் முடியையறிந்தான் என்று நீ சொல்லவேண்டும்" என்று பின்னுஞ் சொல்லுவான் பிரமன் தாழம்பூவே! கேள் "இது வஞ்சனைத் தொழிலென்று தள்ளாதே;யாதோஒரு துன்பத்தை யடைந்தவர்க்கு உயிர்ச்சேதம் வருமாயின் அது பிழைத்தற்குப் பெரிதாகிய பொய்யையும் சொல்லலாம். இது பயப்பட்டுச் சொல்லக்கூடாத வார்த்தையுமல்ல. சினேகம் வேண்டினவர்கள் தம்முடைய நண்பன் விஷத்தைத் தின்றான் என்றாலும் தின்று அவர் பேச்சைத் தட்டாமல் கீர்த்தி நிலைக்கச் செய்வார்கள். சிவபெருமானுடைய முடியில் வாழ்கின்ற தாழம்பூவே! வேறே ஓர் ஆலோசனையுஞ் செய்யவேண்டாம். இதற்கு உடன்படு" என்றுசொல்லத் தாழம்பூ அதற்கிசைந்து வந்தது, ஆகாயத்தினின்றும் சீக்கிரத்தில் பிரமன் மண்ணளந்த விட்டுணு விடத்தில் வந்து சேர்ந்தான். பிரமா நாராயணனை நோக்கி, "விண்டுவே! உன்னுடைய நல்வரவைக்கேள் ஒருநொடியிலே நூறாயிரங்காதம் பறந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவபெருமானுடைய சிரசினைப் பார்த்து வந்தேன்" என்று சொன்னான் தாழம்பூவும் நிஜந்தான் பிரமன் பார்த்தானென்று சொல்லிற்று.

பிரமன் சொன்ன அந்தட்சணமே அக்கினிமலை படீ ரென்று வெடித்தது. வெடித்த சத்தத்தில் இராக்ஷசர்கள். தேவர்கள் திடுக்கிட்டு உயிர் சோர்ந்தார்கள். அஷ்டதிக்கி லுள்ள யானைகள் அநேக சூரியர்களை உருக்கிச் சாய்த்தா லெப்படியோ அப்படி இரத்தத்தைக் கக்கின. மாலையில் தோன்றும் செக்கர்வானத்துப் பிரகாசம் மழுங்கிப்போம் படியாகவும், முருக்கம் பூவிதழ் கறுக்கும்படியாகவும் சிவந்த தம்முடைய திருவுருவின் ஒளிபொருந்திய நிறம் விபூதியினால் வெளுத்த வடிவாய்த் தோன்ற அந்த வெடிப்பில் நின்றும் சிவபெருமான் முப்புரத்தை யெரித்த நகை அவர் முகத்திற் றோன்ற எழுந்தருளினர். சிவபெருமான் நான்முகனை நோக்கி. ஓ பிரமனே! உன்னுடைய அகங்காரத்தினால் சொன்ன 'சொல் நன்றாயிருந்தது" என்று சொல்லி நகைத்த போது அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கியொடுங்கிப் போயின! சூரிய சந்திரர்களுடைய பிர காசம் அடங்கிப்போயின; மேகங்கள் மறைந்தன; நிலையாயி ருக்கிறவைகளெல்லாம் இறந்தன; குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன, கூட்டமாகிய திக்குகள் அலைந்தன; பரவியிருந்த மரங்களெல்லாம் கரிந்து பொரிந்து மெலிந்து போயின தேவர்களெல்லோரும் பிரமன் இன்றே அழிந்து போனா னென்று பயப்பட்டார்கள். பூமி பள்ளமாகும்படி கொள்ளை கொள்ளையாகப் புட்பமாரி பொழிந்தார்கள். நெடுமாலுக் குச் சந்தோஷம் வந்தது, பிரமனுக்கு அகங்கார மென்கிற இருள் நீங்கிப்போயிற்று; அப்போது தெளிவை யடைந்த விஷ்ணு அக்கினி மலையினிடத்திலிருந்து எழுந்தருளிய சிவ பெருமானைப் பாடினார், வந்தனஞ் செய்தார், பரவசங் கொண்டு ஆனந்த கூத்தாடினார்! நான்கு திக்கிலும் ஓடி னார்; யாவராலும் அடையிடக்கூடாத இனிச் சிவபெருமானைத் தரிசித்துக் கூடினவனாகி இனி நாம் என்னவரங் கேட்போ மென்று ஆலோசனை செய்தார். இங்ஙனம் மிகுந்த பக்தி

யினால் தேகம் உருகாநின்ற விஷ்ணுவினுடைய அடிமைத் திறத்தைப் பார்த்துக் கேட்ட வரங்களெல்லாம் சிவபெருமான் அருளிச்செய்து, பிரமனைப் பார்த்து, உனக்குப் பூமியிலே பூசையும் இல்லாமற் போகக்கடவது'' என்று திருவுளம் பற்றினார்: ஓ தாழம்பூவே '' நீ இப்பிரமனுடன் சேர்ந்து பொய்சாட்சி சொன்னபடியால் உன்னை இது முதற் கொண்டு தீண்டேன்; எனத் தள்ளினர். அதன் பின்பு சிவபெருமானுக்கு இத்தகைய கோபம் வந்ததைப் பார்த்து ஏக்கங்கொண்டு பிரமன் தன்னுடைய தேகம்பூமியில் நன்றாகப்பட விழுந்து வந்தனஞ்செய்து சொல்ல ஆரம்பித்தான்

நீறுபூத்த நெருப்பினை யொத்த சுவாமியே! சண்டாளத்துவமென்கிற ஆணவமலமென்னும்செடி மூடிக்கொண்டிருப்பதினால் அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியேன் ஒரு பொருளோ உருவமானவரே! அகண்ட வெளியானவரே நான்கு வேதமானவரே! நான்கு வேதத்தினுடைய அந்தத்திலிருக்கின்றவரே! ஒப்பற்ற முதலாகியவரே! கோபித்துக் கொள்ள வேண்டாம்; எல்லா நதிகளின் நீரும் விழுந்து ஒன்றாகிய ஏழு சமுத்திரங்களும் காய்ந்து வெந்நீராகச் சுட்டால் அதை ஆற்றுவதற்கு வேறே ஜலமுண்டோ? தேவரீருக்கே இத்தகைய கோபம் வந்தால் உலகத்தில் இருக்கிற ஜீவராசிகள் எப்படி பிழைக்கும்? பூர்வகாலத்தில் சமுத்திரத்தில் பிறந்த ஆலகால விஷத்தைபுண்டு தேவர்களை ரட்சித்த மூர்த்தியே! கோபம் செய்யவேண்டாம்; இளம்பிறை யாகியும் பூர்ணச் சந்திரனாகியும், பெண்ணாகியும், ஆணாகியும், தேனாகியும், புட்பமாகியும், மலைகளாகியும்: கிருபா வருஷத்தைப் பொழிகின்ற மேகமாகியும், விளங்காநின்ற சப்த ஸ்வருபமாகிய நாதமாகியும், மற்றும் நானாவித ரூபமாகி இருக்கின்ற மூர்த்தியே! உமக்கு முறையோ: பலமுறை என்னைக் கோபிக்க வேண்டாம் மிகுந்த வெப்பத்தைக் கொடுக்கின்ற

புஷ்ப பாணங்களையுடைய மன்மதன் தேகமல்லவோ. நான் தாருகாவனமது முனிவர்கள் விடவெழும்பின தலையும் ஆறு போன்ற மதத்தையுடைய கோபமாகிய யானையல்லவோ, நான்விட்ட சிவப்பாகிய மழுவல்லவோ; நான் கொலை செய்யுந் தொழிலையுடையவனல்லவோ; நான் திரிபுரமல்லவோ; என்னை ஒரு பொருளாகக் கோபம் செய்யவேண்டாம். யாவராலும் அறியக்கூடாத உம்முடைய முடியினை அறிந்தேனென்று கெர்வங் கொண்ட மாத்திரத்திலே பறவையுருவானேன், இனிமேலாவது துக்கத்தையடையேன். சிறுமையடைந்த என்னிடத்தில் கிருபை செய்யுமென்று சொல்லி விசனப்பட்டபோது காய்ந்து குளிர்ந்த ஜலம் போலச் சிவபெருமான் சந்தோஷமாகித் திருவாய் மலர்ந்து சிலமொழிகளை அருளிச் செய்யாராயினர்.

பிரமனே! இனிமேல் நீ பயப்படாதே, பூமியில் பிராமணர்களுக்குச் செய்கிற பூஜை உன் பூஜையாகக் கொண்டு பொன்னுருவமாகிய மகாமேரு மலை தாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும் போல படைக்க கடவாய், பிரமவிஷ்ணுக்களே! உங்களுக்கு இந்தக்காலத்திலே அனுக்கிரகம் செய்து வரங் கொடுத்தபடியினால் இத்தலத்தைச் சுற்றி மூன்று யோசனை தூரம் வரைக்கும் சுத்த பவித்திரமாக இருக்கவேண்டும் இந்தச் சோதிமலை சிறிய உருவத்தோடுங் கூடிய மலையாகக் கடவது; பேரின்பஞ் சிறந்தமோட்சத்தைத் தடையில்லாமற் கொடுக்கும்; இத்தலத்திற்கு அருணைபுரி என்று பெயராம், தேவேந்திரனும், தேவர்களும் நம்மை நினைக்க அவர்களுடைய துன்பத்தை இத்தலத்தில் தீர்த்தோம். ஆனபடியால் இந்தத்தலத்தை நினைக்கின்றவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்குவோம். இந்தப் பர்வதமும். இத்தலமும் பிறவிய காலத்திலும் நாசமடையாத லட்சணத்தையுடையதாய் மோதுகின்ற வாரி சஞ்சரிக்கின்ற திக்குகளிலுள்ள சராசரங்கள் எல்லாவற்றையும் மேலான முத்தியிலே சேர்க்கும் பூமியில் அரிதாகிய தவத்தைச்செய்தவர்களுக்கு இனிமையானமோட்சத்தைக் கொடுக்க விரும்பிச் சோணவடிவமாகிய இத்தலத்தில் அவதரிக்க வரத்தைக் கொடுப்போம். இதில் ஓர் தானஞ் செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும். இத்தலத்தில் பாவமேயுண்டாகாது, இதைச் சந்தேகமாக நினைப்பவருக்கு

நம்முடைய ஆணைப்படி மோட்சங் கிடைக்க மாட்டாது" என்றார் இந்தப் பிரகாரம் சிவபெருமான் சொன்ன மாத்திரத்தில் அக்கினிமலை குறுகிச் சிறிய மலையாய் நிறம் பொருந்திய மிகுந்த பிரகாசம் விரிந்து பிரகாசித்தலைப் பார்த்த பிரமவிஷ்ணுக்களும் சிவபெருமானை வணங்கிச் சொல்லுவாராயினர்,

"தேவர்கட்கும், எங்கட்கும் இந்தமலையின் சோதிக்கு எதிராகப் போய் விழிக்கக் கூடவில்லை, ஆனபடியால் எண்ணுதற் கரிய கிரகணங்களெல்லாம் மறைந்து ஒருமலையாயிருக்கவேண்டும்" என்றார்கள்; அன்னவாகனனும், கருடவாகனனும் அங்ஙனங் கேட்டுக்கொண்ட மாத்திரத்தில் அங்ஙனமே மலை உருவாகச் செய்தார். இம்மலையின் உச்சியில் ஒரு பிரகாசம் எந்நாளுந் தெரியும்படி கிருபை செய்யவேண்டும் என்றார்கள். அவ்வாறு சொன்ன அடியார்கட்காகச் சுவாமி மனமிரங்கி "பிரம விஷ்ணுக்களே கார்த்திகை நட்சத்திரத்தில் மலையினுச்சியில் ஒரு பிரகாசம் காண்பிப்போம், அங்ஙனம் பொருந்திய சுடரைத் தரிசித்தால் பசியும் வியாதியுமில்லாமல் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள், இச்சோதியைக்கண்ட அரசர்களும், அரியதவசிகளும் இடையூறு நீங்குவார்கள், இதைப்பணிந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரம் இருபத்தொரு தலை முறைக்கும் முத்திவரங் கொடுப்போம்" என்றனர், இறப்பினையும் பிறப்பினையும் நீக்குவதற்கு மருந்தான படியினாலே இம்மலைக்கு மலைமருந்தென்றும் பெயர். இம்மலை சிவப்பு நிறமானபடியினாலே அருணகிரி என்று ஒருபெயர் அதனை ஒருதரம் பூமியில் சொன்னவர்களுக்குப் பஞ்சாட்சரத்தை மூன்று கோடி தரம் உச்சரித்தற்குச் சமானமாகுமென்று சிவபெருமான் அருளிச்செய்யப் பிரமவிஷ்ணுக்கள் சந்தோஷமடைந்து சிவபெருமானை வணங்கிச் சொல்லுவார்கள். அருணாசலேசுரரே! மலையாகிய தேவரீருக்கு ஆகாயத்தினின்றும் பெய்யாநின்ற மழையேயல்லாமல் ஜலங்கொண்டு வந்து அபிஷேகம் செய்கின்றவர்கள் யார்? நட்சத்திரக் கூட்டங்களே முத்து மாலையாவதல்லது வேறே முத்துமாலை சூட்டுகின்றவர்கள்யார்? சூரியகிரணமே தீபமாதல்லாமல் தீபங்கொண்டு வந்து காட்டுகிறவர்கள் யார்? ஆனபடியினாலே நாங்கள் அபிஷேக முதலானவைகள் செய்து பூசைசெய்வதற்கு

இந்த மலையின்கீழ் ஓர் இலிங்க வடிவமாய் எழுந்தருளவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள், அங்ஙனமே இலிங்கமாகிறோம். நீங்கள் சுவாமியின் விதிப்படி பக்தியுடன் பூசியுங்களென்று சிவபெருமான் அம்மலையினுள்ளே மறைந்தருளினார்.

அப்போது அம்மலையடிவாரத்தில் ஓர் இலிங்கந் தோன்றிற்று, அதைக்கண்டு வணங்கித் தோத்திரஞ் செய்து புஷ்ப வருஷம் பொழிந்து பரவசமாய்ச் சந்தோஷமடைந்து ஆனந்தக் கூத்தாடி மயனென்கிற தேவதச்சனைக் கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்களும், மண்டபங்களும் அழகு பொருந்திய திருமதிலுஞ் செய்வித்தார்கள். ஒரு காலத்தும் அழியாத வளப்பமுள்ள நகரமும். முந்நூற்றறுபது வகையாகிய தீர்த்தங்களும் உண்டானது கண்டு ஆனந்தங் கொண்டார்கள். அழியாத ஜலத்தையுடைய ஆகாயகங்கையும் கற்பக விருட்சமும், கிணறுகளும், மரங்களுமாயின. தேவர்களும், ரிஷிகளும் மனித வடிவங்கொண்டு பிறந்தார்கள் விருஷம்போன்ற கண்களையுடைய தாசிகளாக அரம்பாஸ்திரீகள் பிறந்தார்கள், பிரம விஷ்ணுக்கள் இருவரும் காலையில் முழுகி மரவுரி தரித்துக்கொண்டு சிவந்த சடைகட்டி விபூதியைத் தேகமெல்லாந் தரித்து உருத்திராட்சமாலை பூண்டுகொண்டு அன்னத்தினாலும், திருமஞ்சனத்தினாலும் சந்தனத்தினாலும். மாலையினாலும் சிவபூஜை செய்து திருவண்ணாமலையைப் பிரதட்சணஞ் செய்து வணங்கிப்பதினாயிரம் வருஷம் ஆனபின்பு. சிவபெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள் பதிக்குப்போய்த் தங்கள் அதிகாரத்தை பெற்றுக் கொண்டார்கள். சிவபெருமானுக்கு விருப்பமுண்டாகும்படி அருணாசலத்தலம் அமைந்த பிறகு கயிலை மலையிலிருக்கும் ஆசை வெறுத்தது, இம்மலையே பொன்னுருவங் கொள்ளுமாயின் வெள்ளி மலையின் மேல் ஆசையுண்டாகுமா! காசி முதலாகச் சொல்லப்பட்ட ஏழு தலங்களும். தேவலோகமும் குற்றம் நீங்கிய சூரியன் உதயமாகப் பிரகாசமிகுந்த நட்சத்திரங்கள் போல ஒளி மழுங்கிப் போயின.

திருமலைச் சுருக்கம் முற்றிற்று.

ஓம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவவதாரச் சருக்கம்

மார்க்கண்டேய முனிவரே! முன்னாளிலே பிரமனிடத்திற் பிறந்த தக்கனென்பவன், அரிய தவஞ்செய்து உயர்ந்த வரங்களைப் பெற்றுக்கொண்டு மிகவும் பிரசித்தவனாகி வாழுகின்ற காலத்தில் பார்வதியார் தன்னிடத்தில் பிறக்க அந்த அம்பாளைச் சுவாமிக்குத் திருக்கலியாணஞ் செய்து கொடுத்து மாமனாராகும்படி வரம்பெற்று. அந்தப்படி செய்த பின்பு ஒருநாள் தக்கன் சுவாமியினுடைய சபைக்குப் போனான். அவ்விடத்தில் சுவாமி தனக்கு எழுந்து மரியாதை செய்யவில்லை யென்கிற கோபங்கொண்டு தன்னுடைய வீட்டிற்கு வந்து சுவாமியைப் பார்க்கிலும் தான் உயர்வை அடைய வேண்டுமென்று எண்ணங்கொண்டு பன்னிரண்டு சூரியர்கள், பதினொரு ருத்திரர்கள், சத்தரிஷிகள், அஷ்ட திக்கு பாலகர், நாகலோகத்தார், கின்னரர், கிம்புருடர். சித்தர், யட்சர், தேவர்கள், முனிவர்கள், பிரமன் விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி முதலிய யாவருஞ்சூழ முதல்வராகிய பரமசிவனை நிந்தித்துப் பெரிய யாகமொன்று செய்யத் தொடங்கினன். பார்வதிதேவியானவள் தகப்பனாகிய தக்கன் யாகம் பண்ணுவதைக் கேட்டு, சுவாமி, என்னுடைய தகப்பன் செய்கிற வேள்வியைப் பார்த்து வருகிறதற்கு உத்திரவு கொடுமென்று கேட்க அதற்குச் சுவாமியானவர் "உன் தகப்பன் புத்தியில்லாமல் என்னை மிகவும் நிந்தித்திருக்கிறானே? நீ போகலாமா?" என்று சொல்லினர். அதைக்கேட்டு "சுவாமி என் தகப்பன் செய்த இக்குற்றத்தை



தக்கன் பரமசிவனை நிந்தித்து யாகஞ் செய்யவும் அதையறிந்த பரமசிவன் வீரபத்திரரால் யாகத்தை யழிக்கவும், பின்பு பரமன் பாணிக்கிரகணஞ் செய்யப் பார்வதி பருவதா இராஜனுக்குப் பெண்ணாய் அவதாரஞ் செய்தது.

என் பொருட்டுப் பொறுத்தருளவேண்டும்" என்று நமஸ்காரஞ் செய்தபோது அந்த அம்மையைப் பார்த்து நகைத்து நல்லது நீபோய் சீக்கிரத்தில் வந்து சேர்வாய் என்று சொல்லப் பார்வதியாரும் தனது தகப்பன் யாகஞ் செய்கிற இடத்துக்குப் போயினள். அம்பாள் யாகசாலைக்குப் போய்த் தன்னுடைய தாயை வணங்கினுள். அவள் அந்த அம்மையைத் தழுவி உபசாரஞ் சொல்லாமல் இருந்தாள். அதன் பின்பு தனது தகப்பனை வந்தனஞ் செய்ய அவன் வெகுவாக நிந்தித்தான்.

அதைப் பார்த்து கோபங்கொண்டு உன்னுடைய யாக சாலை பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகப் போகக்கடவது என்று சபித்து, இந்தப்பாவி வளர்த்த தேகம் இருக்கக்கூடாதென்று யோகத்தினுலே தன்னுடைய தேகத்தை விட்டனர். அதுதெரிந்த பரமசிவம் கோபித்துக் கொள்ள அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரர் ஆகாயமும், பூமியும் நடுங்கும்படி மேகத்தைப்பார்க்கிலும் உடம்பு கறுத்து மயிலின் நிறம்போன்ற மரகத ரத்தினத்தை இழைத்த கிரீடத்துடன், மேருவுக்கு ஒப்பாகி இடிபோல முழங்குகின்ற நெருப்பாகிய சொல்லையுடைய வாய் நஞ்சைக் கொப்பளிக்க, நெற்றிக்கண் கொதிக்கச் சிரத்தின் மேல் வைத்துக் கூப்பிய கைகளோடு தோன்றி, இரணியனைக் கொன்ற நரசிங்கத்தினுடைய தோல் உத்தரியமாகவும், தாருகாரிஷிகளால் விடப்பட்டுச் சுவாமியால் மரணமடைந்த புலியின் தோல் இடுப்பிற் கட்டிய கச்சையாகவும், விழித்த இமைக்கு முன்னே ஆகாயமெல்லா மறைத்த தேகத்துடனே என்னை அழைத்தது என்ன காரணம் என்று சுவாமியை வீரபத்திரர் கேட்டனர். திரிநேத்திரதாரியாகிய பரமசிவம் அவரை நோக்கி, "குழந்தாய் ஜலத்தினைப் பொழியாமல் நெருப்புச் சுளைக் கக்கும் மேகம்போற் சென்று தக்கனுடைய யாகத்தை அழித்துவா" என்று அருளிச்செய்ய அந்தட்சணமே வீரபத்திரர் அதிக சந்தோஷமடைந்து சுவாமியினுடைய

திருவடியைத் தொழுது பக்கத்தில் நின்ற பூதக்கூட்டங்களும் பேய்களும் சூழ,விஷங் கக்குகின்ற 1 அஷ்டமா நாகங்களை மாலையாகத் தரித்துக்கொண்டு, பத்துப் பூதங்கள் நீலவர்ணமான ஆலவட்டம் வீசிக்கொண்டுவர 2 எட்டுத் திக்கிலிருக்கும் யானைகள் எட்டையும் காதிலே குண்டலமாகத் தரித்துக்கொண்டு, வெள்ளைச்சட்டை அணிந்த நால்வர் சாமரம் வீசவும், வடவாமுகாக்கினி குடிகொண்டிருந்த வயிற்றினுடைய பசியை மேகங்களைப் பிழிந்து குடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இரண்டாயிரம் பேய்கள் எக்காளம் பிடிக்கவும், சந்திரனை இரண்டாகப் பிளந்து இரண்டு கடைவாயிலும் வைத்தது போலுமிருக்கும், ஆயிரம் பூதங்கள் முத்துக்குடைகள் பிடிக்க இறந்திறந்து பிறக்கும் அநேக கோடி விஷ்ணுக்களுடைய கையிலிருந்த சங்குகளை அநேக பூதங்கள் வாயில்வைத்து ஊதிவர, அக்கினி பகவான், வாயுபகவான், ஏறுகிற ஆட்டுக்கிடா கலைமான் இவைகளுடைய கொம்புகளைவாயில் வைத்து அநேக பூதங்களும், பலரீ ஈமன் ஏறிய எருமைக்கடாக்களுடைய கொம்புகளை வாயில் வைத்து அநேக பூதங்களும் ஆயிரம் ஆண் யானைகள் கட்டியிருக்கிற தேரிலேறினர்.

அப்போது சில பூதங்கள் யானை ரூபங்கள் கொண்டன சில பூதங்கள் தேரினுருவம் கொண்டன, சில பூதங்கள் குதிரையாயின; சிலபூதங்கள் மனிதரும் தேவருமாயின. எண்ணில்லாத பேய்கள் என்னணிறந்த ரூபங்கொண்டு புறப்பட்டன. அவருக்கு முன்னே நடந்த பூதங்கள் சில 3 ஏழு

---

1. அஷ்டநாகங்கள்—அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன். பதுமன், மகாபதுமன், சங்கபாலன். குளிகன்.

2 யானைகள் எட்டு—ஐராவதம், புண்டரீகம், வாமனம் குமுதம், அஞ்சனம், புட்பதந்தம். சாருவபௌமம், சுப்பிரதீபம்,

3 ஏழு சமுத்திரங்கள்—உப்பு, தேன், கருப்பஞ்சாறு தயிர், நெய், பால், சுத்தநீர் என்பன.

சமுத்திரத்து நீரடங்கலும் குடித்தாலும் விடாய் தீராமல் திரும்பத் தக்கன்; சிலபாரமாகிய ஏழுலகத்தையும் சாப்பிட்டும் பசி போகாமல் அலைந்து கொண்டிருக்கும் கூர்மைபொருந்திய வேலாயுதத்தை எறிந்து எமனுடைய நாட்டையுங் கொள்ளையிடத் தக்கன்; சில ஏழு மேகங்களையும் பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சுற்றிக் கட்டிக்கொள்ளத் தக்கன், சில அனேக பிரமாண்டங்களையும் புகையுண்டாக நெருப்பினுல் கொளுத்துவன; சில எட்டு திக்குந்தேடி யாகசாலை எங்கே என்று தேடுவன; சில பிரசண்டவாயு போலக் கைகளைக் கொட்டிக்கொண்டு ஓடுவன; சில சமுத்திரம் போன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து அதனுல் விருப்பு மேலிட்டுச் சண்டைக்கு எழுவன், சிலதுள்ளிக்கொண்டு உலகமெலாஞ் சுற்றி வருவான்; சில நம்முடைய சுவாமியை நிந்திக்கிறவர்கள் யாரென்று கேட்டு அவர்களைக் கொல்லுதற்காக நின்று வீரநகை கொள்ளுவன; சில சுவாமியைக் குறித்துப் பாடுவன; இந்தப் பிரகாரம் வீரபத்திரர் புறப்படப் புள்ளாங் குழல், சிலம்பு, முரசு, சங்கங்கள், உடுக்கை முதலான வாத்திய முழங்கவும் பெரியமணி, தவண்டை, மிருதங்கம் சப்திக்கவும் தக்கன் யாகசாலையிற் பிரவேசித்தனர்.

அப்போது மேக வாகனனுகிய தேவேந்திரனும் ஆட்டு வாகனனுகிய அக்கினியும், எருமை வாகனனுகிய யமனும், பேய் வாகனனுகிய நிருதியும் மகர வாகனனுகிய வருணனும் மான் வாகனனுகிய வாயுவும், விமானத்திலேறுகின்ற குபேரனும், எருது வாகனனுகிய ஈசானியனும் தேர்களில் ஏறிக் கொண்டு வீரபத்திரரை எதிர்த்தார்கள். தங்கள் ஆயுதங்களாகிய பாணம், சூலாயுதம், வேல், உலக்கை வச்சிராயுதம் மழு. கத்தி இவைகளால் பூதங்களை அடிக்க ஆரம்பித்தனர். அப்போது எட்டுப் பூதங்கள் புறப்பட்டு எட்டுதிக்குப்பாலகர்களையும், அவர்கள் தேர்களையும் வாரியெடுத்து 1 அம்மனைக்காய்போல வீசி எறிந்தார்கள், அப்போது திக்குப்பால

1 அம்மானை என்பது மகளிராடும் ஒரு விளையாட்டு

கர்கள் எழுந்து ஓடிவந்து எட்டுப்பூதங்களை அடித்தார்கள் அதுகண்ட வீரபத்திரர் எட்டுப் பாணங்களைவிட அவை போய் எட்டுத் திக்குபாலகர்களையும் துளைத்து அவர்கள் உடலிலிருக்கிற அமிர்தத்தைப் புசித்துவிட்டன, தேவேந்திரன் குயில் வடிவெடுத்து ஓடினன். ஈசானன், குபேரன் நிருதி, வாயு, வருணன் தோற்று வெட்கமடைந்து போயினர். எமன் இறந்தான், அக்கினியினுடைய ஏழு கைகளையும் அறுத்துத் தள்ளினர். யாக கர்த்தாவாகிய கலைக் கோட்டு மகாரிஷியின் உடலை உரித்து எறிந்தனர். தக்கனுடைய மனைவியின் இரண்டு காதையும் அறுத்தனர். யாகத் தம்பங்களிலொன்றைப் பிடுங்கித் தக்கனுடைய தலையை மோதிக்கீழே விழத்தள்ளினர்; அப்போது பூதமொன்று அந்தலையை எடுத்து விழுங்கிவிட்டது அஷ்ட வசுக்கள், மருத்தவர்கள் அங்கு குரங்குகள் போல மூலைகளில் ஒளித்துக் கொண்டிருந்த முனிவர்கள் முதலிய உயிர்களை வீரபத்திரர் சூலாயுதமானது 2 தின்றுவிட்டது சூரியன் பற்களும்,கண்ணும் தெரித்துக்கீழே விழ அடித்து சரஸ்வதியின் நாக்கை இரண்டாக அறிந்து, இலட்சுமியின் மூக்கை அறுத்து தனது திருவடியால் சந்திரனைத் தேய்த்து விட்டனர். பூதங்களோ இறந்துபோன தேவர்கள் கரியபேய்களாகி மறுபடியும் மாயமாய் வந்து சண்டை செய்ய அவர்களை எல்லாம் வீரபத்திரர் சேனை அடித்துக் கொன்றன.

பிரமன் உண்டாக்கிய யாகசாலையை யழித்து அங்கிருந்த சோறும், எள்ளும், பொரியும் ஒருபூதம் வாரிவாயில் கொட்டிக்கொண்டு நெய்க்குடங்களை எடுத்து மடமடவென்று குடித்துவிட்டது, யாகசாலையிலிறந்து கிடந்த திக்குப்பாலகர்கள், அஷ்டவசுக்கள் ஆகிய முப்பத்து முக்கோடி தேவர்கள் வீணாகாதபடி பூதங்கள் விழுங்கிவிட்டன

2. தின்றுவிட்டது என்றது இங்ஙனம் பிளந்து கொன்றது என்று பொருள் கொள்க.

இவ்வாறு யாவரும் இறந்துவிடப்பிரமன் அடிக்கடிசிருஷ்டி செய்துகொண்டே வந்தான், அவர்கள் மறுபடியும் யுத்தஞ் செய்து வந்தார்கள். இதைக்கண்டு வீரபத்திரர் பிரமனுடைய கைகளை யறுத்து, சூலாயுதத்தால் அவன் தலைகளைவெட்டித் தள்ளினர் இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுவானவர் கருடன்மேல் ஏறிக்கொண்டு அனேக பாணங்களை வீரபத்திரர் மார்பில் படும்படி பொழிந்தார். அப் பாணங்களையெல்லாம் வீரபத்திரர் கண்டதுண்ட மாக்கினர் விஷ்ணு கோபங்கொண்டு ஒருசக்தியை எடுத்துச் சுழற்றி வீசினர், அக்சக்தியையும் வீரபத்திரர் ஒடித்து ஒருபாணத் தால் கருடனைக் கொன்றுவிட்டனர் விஷ்ணு வருத்தமுற்றுச் சக்கராயுதத்தைப் பிரயோகித்தனர். அது வரிசையாக வந்து வீரபத்திரர் காலடியில் விழுந்தது. பின்பு விஷ்ணுவானவர் பன்றியாகவும், சிங்கமாகவும் உருவெடுத்து யுத்தம்செய்ய வாளால் அவைகளை மாய்த்தனர். விஷ்ணு பயந்து மீன்வடி வங்கொண்டு சமுத்திரத்தில் விழுந்து ஒளித்துக் கொண்ட னர். இந்தப்பிரகாரம் தக்கனுடைய யாகசாலையை வீரபத்தி ரர் அழித்தபிறகு தான் கைலாயத்திற்குப் போய் சிவபெரு மான் திருவடியில் வணங்கி நடந்த வரலாற்றை யெல்லாம் சொல்லி அருளினர்,

பரமசிவம் கேட்டுச் சந்தோஷமடைந்து கோபமாறிக் கிருபையுற்று யாகத்தில் இறந்தவர்கள் அனைவரையும் எழுப்பி அவர்கட்குக் கிருபை பாலித்து அனுப்பி விட்டார். அவர்கள் யாவரும் தாங்கள் அறியாமையினால் செய்த குற் றத்தை மன்னித்தருளும்படி கேட்டுக்கொண்டு நமஸ்கரித்து விடை பெற்றுச் சென்றார்கள் தக்கனுக்கு மாத்திரம் நிந்தை செய்ததற்கு அபராதமாக ஆட்டுத்தலையை அவனுடலில் வைத்து எழுந்திருக்கும்படி செய்தனர், பரமசிவனை நிந்தித்த தக்கனுக்குத்தான் புத்திரியாகப் பிறந்த தேகத்தை நீக்கிக் கொண்ட பார்வதியார் மலையரசன் தபோமகிமையினாலும் முன்னே மைநாகனென்கிற பிள்ளையைப்பெற்ற மேனாதேவி

யினது தவ முயற்சியினாலும், அவர்களுக்குக் குமாரியாக அவதாரம் செய்தனர் தேவர்கள் புட்பவருஷம் பொழிந்தனர் பார்வதியார் நாளுக்குநாள் வளர்ந்து மன்மதன் சிவபெருமானை வெல்லவேண்டி அதற்கு வளர்த்த கரும்பை ஒத்தும் பற்பல சாஸ்திரங்களையும் கற்றும் பந்து கழங்கு ஊசல விளையாட்டு முதலானவை செய்துக் கொண்டும் வருகிற காலத்தில், மலையரசனிடத்தில் வேதம் உணர்ந்த நாரதர் ஒருநாள் வந்து உலகங்களெல்லாம் வயிற்றில் வைத்திருந்த அம்மையுடைய இலட்சணம் பார்த்து சொல்லுவராயினர். "பருவதராஜனே உம்முடைய குமாரத்திக்குச் சிலநாளில் நெற்றியில் ஒரு பக்கத்தில் அரைக்கண் தோன்றும்; ஒரு கையில் சூலமுண்டாகும்; ஒரு பக்கத்துந் தனம் மறைந்து போகும்; பாதி சரீரம் பச்சைநிறம் போய் பவளநிறமாகும்; கூந்தலிற் பாதி சடைகளாகும்; ஒருகையில் வளையல் இல்லாமற்போகும்" என்றனர்.

பர்வதராஜன் கேட்டு உள்ள முருகிச் சந்தோஷ மடைந்து பார்வதியே நமக்குப் பெண்ணாகவந்த படியினால், பரமசிவன் மருமகனாகி வரவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிற நாளையிலே, இமயபருவத்தில் பரமசிவன் யாதோ ஒருநிலையினால் யோகத்திலிருக்கிறாரென்கிற வார்த்தை கேள்வியாகித் தன் மகளாகிய பார்வதியையும் அழைத்துக்கொண்டு போய் நமஸ்காரஞ் செய்து என்னுடைய பெண்ணை தேவரீருடைய தவத்திற்காக ஏவல் செய்ய ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவரிடத்தில் அம்மையை விட்டுப்போயினான். பார்வதியார் பழம் புஷ்பம் தருப்பை திருமஞ்சனம் முதலானவைகளைக் கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களுடனே பல பணிவிடையுஞ் செய்து கொண்டிருந்தனள்.

இது இங்ஙனமிருந்த தேவேந்திரன் தேவர்களுடன் சென்று பிரமனைத் தொழுதார்கள், அந்த பிரமனும் அவர்

களுக்கு ஆசனங்கொடுத்து அவர்கள் முகஞ் சோர்ந்திருப்பதைக்கண்டு இந்திரன் வச்சிராயுதம் ஒடிந்தும், ஈசானன் மழுவாயுத மழுங்கியும், எமன் சூலாயுதம் வளைந்தும், மற்றவர் ஆயுத முறிந்தும், அவர்கள் மகுடம் பிடுங்கப்பட்டும் இருப்பதைப் பார்த்து தேவர்களே "உங்களுக்கு நேர்ந்த வருத்தத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்க, தேவேந்திரன் தாருகா சூரன் இப்படி அவமானஞ் செய்தனன் என்று சொன்னான் பிரமன். "இந்திரனே! இயமன், அக்கினி வாயு, விஷ்ணு இவர்களாலும், என்னாலும், உன்னாலும் தாருகனைக் கொல்லக்கூடுமோ? பரமேஸ்வரன் புத்திரனும், இமாசல புத்திரியான பார்வதியினிடமாகச் சிவசுப்பிரமணியர் அவதரித்து அவனைக்கொன்று உங்கள் சிறையை மீட்பர் யோகத்திலிருக்கு சிவபெருமான் பார்வதிக்கு மாங்கல்ய தாரணஞ் செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சியுங்கள்" என்று பிரமன் கூற, அவன்பால் தேவர் உத்திரவு பெற்றுத்திரும்பி மன்மதனை நினைத்தார்கள். அவனும் வந்து சேர்ந்தனன். மன்மதன் தேவர்களைப் பார்த்து, ஐயன்மீர் எவனுடைய தவத்தை அழிக்கவேண்டும்? எந்த பெண்களை மயக்கவேண்டும்? நீங்கள் ஏது நிமித்தமாக என்னை யழைத்தீர்கள்? என்று கேட்க தேவேந்திரன் மன்மதனை இரண்டு கைகளினாலும் தழுவிக்கொண்டு உபசாரத்துடனே பார்த்துச் சிவபெருமானுடைய தவத்தை நீக்கியாள வேண்டுமென அழைத்தோம் என்றனன். மன்மதன் கோபித்து. "இந்திரனே நம்முடைய கடவுள் ஆணுமல்லன், பெண்ணுமல்லன், அலியுமல்லன்; பிறப்பு மிறப்புமில்லாதவன், காட்சி பிரமாணத்தாலும், ஆகமத்தாலும், வேதத்தினாலும், கருத்தினாலும் இத்தகையனென்று நிதானிக்கக் கூடாத அகண்ட வைபவ சச்சிதானந்தப் பிழம்பாகியமுதல்வன். அவன் தவத்தை யழிக்கவல்லார் யார்? அம்பாளோ நித்திய கன்னிகை, அப்பனோ நித்திய பிரமசாரி, இவர்களுடைய சந்நிதி விசேஷத்தால் சகல உயிர்களுமுண்டாகும், முன் எப்படி சுவாமி யிடத்திலிருந்து

சிவர்கள் உண்டாயினரோ, அப்படியே அவரிடத்தில் ஒடுங்கும். அம்முநல்வன் சங்காரத் தொழில் செய்வதனால், தபோ குணமுடையவன் போலத் தோன்றினும் அவன் அக்குணத்தவனல்லன் அவன் திருத்தியம் உயிர்களின் இளைப்பை மாற்றுதலேயாம்

மற்றைய தேவர்களைப் போல பலசம்பந்த முடையவனல்லன். அவன் சொருபம் நெருப்பேயாகும்; அவன் மேல் எனது புஷ்பபாணம் விட்டால் புகையாய்க் கரிந்து போகும். நம்பொருட்டு அவனுருவாக விளங்கினும் அவன் அருவமேயாம். அவன்மேல் எங்ஙனம் பாணம் விடுவது! என்றனன். இந்திரன் மன்மதனை நோக்கி "ஐயனே விஷ்ணு தனது மார்பில் இலட்சுமியை வைத்ததும், பிரமன் சரஸ்வதியைத் தனது நாவில் வைத்ததும் மகாதேவர் தங்கையைத் தலைமேல் வைத்ததும், சூரியனைச் சாணையில் கடையச் செய்ததும், எனக்கு ஆயிரங்கண் உண்டானதும் உன்னுடைய ஆண்மையினாலல்லவா? எம்பொருட்டு நீ சென்று அவர் யோகத்தை நீக்குவையேல் அவர்யோகம் நீங்கிப் பார்வதியாரை விவாகஞ் செய்துக்கொண்டு புத்திரனை யளிப்பார் அப்புத்திரனைக்கொண்டு தாருகனைக் கொன்று தேவர்களுடன் நாம் க்ஷேமமடையலாம். இது உனக்குப் பெரும் புண்ணியமாகும்; என் சொல்லை மறக்கவேண்டாம்; வரத்தைக் கொடுப்பாய்" என்று வேண்டிக்கொள்ள மன்மதன் சந்தோஷித்து அங்ஙனமே செய்வேனென்று புறப்பட்டான், உடனே தென்றற்காற்று வீசியது வசந்தனாகிய மந்திரி வந்தனன், சந்திரன் கிரகணத்தோடு புறப்பட்டனன். மாமரங்களில் குயில்கள் பாடின, இரும்பு செம்புகள் உருகும்படி சொல்லுகிற வார்த்தைகளுடைய பெண்கள் குறிஞ்சி யாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள், நட்சத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாகவும், செவ்வானம் திலக பொட்டாகவும் விளங்குகின்ற இருட்டானது யானையாகவும், கிளி குதிரையாகவும் குதிரை உடன்வர பருத்த

தனமும் பவளம் போன்ற வாயுமுடைய ஸ்திரீகள் தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டனர் கரும்பு வில்லையும் புட்பபாணங்களையும், எடுத்துக்கொண்டு இரதிதேவி கூடவர மீனக்கொடியுடனே மன்மதன் சிவ பெருமானைச் சந்தித்து அவரைப் பார்த்து வெட்கமடைந்து நடுங்கி, கோரயுத்தம் செய்தால் என்ன நேருமோவென்று ஒளித்திருந்து, சமயம் பார்த்து வில்லை வளைத்துப் புட்பப் பாணத்தைச் சுவாமியின் மீது விட்டனன், அது சுவாமிமீது பட்டமாத்திரத்தில் தனது நெற்றிவிழியைத் திறந்தனர் உடனே மன்மதன் எரிந்துபோயினன். தேவர்கள் ஓடி யொளிந்துக் கொண்டார்கள். சுவாமி தனது பூதக்கூட்டங்களுடனே அவ்விடம் விட்டுக்கயிலைக்கு எழுந்தருளினர் சுவாமி சப்த ரிஷிகளை யழைத்துப் பருவதராஜனிடத்திற்கும் போய் பார்வதியாரைத் தனக்குக் கலியாணம் செய்துக் கொடுக்கும் படி அனுப்பினார்.

அவர்கள் இந்தச் சங்கதியைப் பர்வத ராஜனிடம் சொல்லினர் பர்வதராஜன் கேட்டு ஆனந்தங் கொண்டனன். அவன் பிள்ளையாகிய மைநாகன் முனிவர்களைப் பார்த்து "சிவன் என்னசாதி? அவர் தாய் தந்தை பெயர் என்ன? குடிப்பெயர் என்ன? அவர் ஊர்யாது? சொல்லுங்கள்" என்று கேட்டான், முனிவர் கேட்டு நகைத்து. அவர் மைநாகனைப் பார்த்து "ஐயா அவன் ஒப்புடையவனல்லன். ஒருவன் அல்லன் ஓர் உருவமனில்லி. அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும், அவனருகே கண்ணுகக் காணினல்லால். இப்படியவன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்று யாராலும் சொல்லவும் எழுதவும் முடியாதபடி யுள்ளவன்" என்றனர். இதைக் கேட்டுப் பர்வதராஜன் முதலானவர்கள் எல்லாம் மகா சந்தோஷத்தை யடைந்து சிவபெருமான் நட்சத்திரத்திற்கும் பொருத்தமுங் கலியாணஞ் செய்கிற காலமுமறிந்து நிச்சயஞ் செய்து முனிவர்களுடைய பாதத்தைப் புகழ்ந்து வணங்கித் திருக்கலியாண முகூர்த்த ஓலையும் எழுதிக் கொடுத்தனுப்பி வைத்தான், முனிவர்கள் வந்து நடந்த சங்கதி யனைத்தையும்

சுவாமிக்கு தெரிவித்தனர். முகூர்த்த ஓலையை அநேக தூது வர்கள் எடுத்துக் கொண்டுபோய் சத்தகுல பர்வதங்களிலுள் ளவர்கட்கும், மேருமலை சக்கரவாளகிரியிலுள்ளவர்கள் கும், சத்த சமுத்திரர்கட்கும். சித்தர், சாரணர், முனிவர், தேவர் முதலானவர்கட்கும் திருக்கலியாணமெனத் தெரிவித் தனர். உடனே ஏழுதிக்குகட்கும், நீலகிரி முதலிய சப்தகுல பருவதங்கட்கும் அதிஷ்டானமாகிய தேவதைகள், முனிவர் கள், சித்தர்கள். தேவர்கள் வந்து சேர்ந்தார்கள்; எட்டுதிக் கையும் தேரினாலும் கொடிகளாலும் இடமில்லாமல் விமா னத்தினாலும், மாலைகளினாலும் மறைத்து விட்டார்கள். வீதி களில் நீண்ட இலைகளுடைய வாழைகளையும். கமுகுகளை களையும். நிரைநிரையாக நட்டு அலங்காரம் செய்தார்கள், புனுகைக்கரைத்துத் தரைகளெல்லாம் மெழுகினார்கள், தோரணங்கள் கட்டினார்கள், முத்துமாலைகளைத் தொங்க விட்டார்கள்; ஆகாயகங்கை கொண்டுவந்து பூரணகும்பம் வைத்தார்கள்; இரத்தினவிளக்கு ஏற்றினார்கள்; பிரமலோக மும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும் நாணும் படி சிங்காரித்தார்கள்.

இரத்தின தீபம்போன்ற பார்வதியை மலையிலிருக்கிற பெண்கள் கூடிக் கற்பகமலர் வாசனை சேர்ந்த கங்காசலத்தி னால் ஸ்நானஞ் செய்வித்து, இடுப்பில் கோடி சூரியப்பிரகாச மான சேலைகட்டி. இரத்தினாபரணங்களும் முத்து மாலைக ளும் பூட்டி; பரிமளம் பொருந்திய மாலைசூட்டி, நெற்றியில் திலதமிட்டு.வேதவிதிப்படி பிரமன் முதலானவர்கள் கூடிப் புலித்தோலை நீக்கி இரத்ன மயமான வஸ்திரஞ் சாத்திக் கற் பகப்பூமாலைதரித்து.சர்ப்பாபரணத்தைக்கழற்றி மாணிக்கரத் தின் ஆபரணந்தரித்து நவமணிகளால் பிரகாசிக்கின்ற கிரீ டத்தில் சடை மகுடத்தை மறைத்து சந்திர சூரியரைப் போல இரண்டு குண்டலங்களைத் தரித்து விஷ்ணுவின் நேத்தி ரம் விளங்கும் திருவடியில் நேமணி பிழைத்த சிலம்பு தரித்து அலங்காரஞ் செய்தனர். சிவபெருமான் இடபவாகனத்தி லேறினார். அரம்பாஸ்திரீகள் மஞ்சளாலாத்தி யெடுத்தனர் விஷ்ணு முன்னே வந்து வணங்கி எழுந்தருளுமென்றனர்.

பிரமன் வணங்கச் சற்றே திருமுடியை யசைத்தனர். மற்றத்தேவர்கள் வணங்கத் திருக்கண்ணுற் கிருபை பாவித்லனர். சந்திரவட்டக் குடை பிடிக்கவும், சாமரம் வீசவும், விஷ்ணு அடப்பை யெடுத்துக்கொண்டு வரவும், தேவேந்திரன் படிக்கமேந்தவும். பிரமன் ஆலவட்டம் வீசவும், தும்புரு நாரதர் சங்கீதம் பாடவும், இமயன் பாதக்குறடு தாங்கி வரவும். வாயுபகவான் அகிற்புகை காண்பிக்கவும், ஈசானன் உடைவாளேந்தவும்; சூரிய சந்திரர்கள் விளக்கேந்தவும். தேவகன்னியர்கள் வஸ்திரப்பெட்டித் தாங்கவும், நாகலோகப் பெண்கள் நகைப்பெட்டித் தாங்கவும். கின்னரர் கிம்புருடர் வீணை வாசிக்கவும், வேதங்கள் புகழ்ந்து பாடவும், கின்னரரும், அஷ்டவசுக்களும், முனிவர்களும் சூழ் நாகலோகத்தார் வித்தியாதரர்கள்.

தேவர்கள்பாட, ஏகாதச ருத்திரர்கள் புட்பங்களை இறைப்ப, இலக்குமி சரஸ்வதி பன்னீர் தெளிக்க, திக்குப்பாலகருடைய தேவிமார் சேவிக்க, சத்தமாதர்கள் சோபனம்பாட, வீரமகளிர் வாழ்த்து சொல்ல. வித்தியாதர மாதர்கள் பல்லாண்டு கூற, மணியினேசை. பேரிகை, குடவாத்தியம், கா்களம், தவண்டை. மல்லரி, சல்லரி, சங்கங்கள் கோஷிக்கவும், தேவப்பெண்கள் காலில் சிலம்பு கலீரென்று சப்திக்கவும், நந்திதேவர் கூட்டங்களை விலக்கும் பிரம்பின் சத்தம் பிரகாசிக்கவும், கைலைச்சாரலில் சுவாமிவர, பூதசேனையின் முன்னணி இமய பருவதத்தை யடைந்தது. ஆகாயமும் பூமியும் எள்ளிருக்க இடமில்லாமல் விமானங்கள் நெருங்கின, இடபவாகனருடராய்ச் சுவாமி இமயபர்வதராஜன் பட்டினத்தில் வந்தனர்.

அவ்வூர் பெண்கள் சுவாமியின் அழகைப் பார்த்துப் பார்வதியார் செய்த தவத்திற்கு ஒரு குறைவுமில்லாமல் பலன் சித்தியாயிற்று என்றார்கள். சிலர் யுத்தத்திற்கு வந்த மன்மதனை எரித்த கண் எதுவோ அந்தக் குரூரமான கண்

ணைப் பார்ப்போமென்றார்கள் மன்மதன் தேகத்தையுடையவனாயிருந்தபோதும் இவர் யோகத்திலிருந்ததனால் உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் விகாரமில்லாமல் அயர்ந்து கிடந்தனர். மன்மதன் தேகம் போயும் இவர் போகத்தில் விருப்பம் உண்டானபடியினால் சகலருக்கும் போகத்தில் ஆசையுண்டாச்சுது. ஆனபடியால் மோகத்தையும் உண்டாக்குகின்றவர் இப்பெருமானேயன்றி வேறொருவருமில்லை என்று சிலமாதர் சொன்னார்கள். மாயஞ் செய்கிற கையில் தரித்திருக்கின்ற மன்மதன் அழகு இந்தச் சுவாமியினுடைய வடிவமாகிய அழகில் ஆயிரத்தில் ஒருபங்கில் காணாது அதனாலே அவனை இகழ்ந்து தன்னைமறந்து தீயினால் அவனைக் கொளுத்திப் போட்டது. தபோமகிமையினாலே ஆராய்ந் தெடுக்கத் தகுந்த உத்தமர்கள் ஆனால் அப்படிச் செய்வார்களோவென்று சிலர்சொன்னார்கள், மாமனாகிய மலையரசன் சுற்றத்தார் முதலிய சேனைகளும் மருமகனாகிய பரமசிவத்தினுடைய சேனசமூகமிருந்த ஆசையோடுங் கூடியவர்களாய் எதிரெதிராக வந்து ஒருவர்க்கொருவராகத் தழுவிக் கொண்டார்கள். முதலுமீறுமில்லாத சிவபிரான் பிரமன் கையைப் பிடித்து இடபவாகனத்தினின்றும் இறங்கினார் அநேகம் பெண்கள் ஆரத்தி எடுத்தனர். திக்குப்பாலகரெண் மரும் சுவாமியின் இருபுறத்திலும் நடந்து ஒதுங்கி வரவும் விஷ்ணுவின் இரண்டு கைமேலும் தம்முடைய ஒருகையைச் சேர்த்துக் கணக்கில்லாத இரத்தினங்களால் இழைக்கப் பெற்றிருக்கின்ற மண்டபத்தில் வந்து சேர்ந்து ஒரு ஆசனத்தில் எழுந்தருளினர்.

அப்போது தெய்வமாதர்கள் அம்பாளை அவரது வலப் புறத்தில் உட்காரவைத்தனர். அந்த வேளையில் பிரமதேவர் கலியாணச் சடங்கை விதிப்படி முடிக்கச் சுவாமியானவர் அக்கினியிற் பொரிசொரிந்து நெய்யாகஞ் செய்து அம்பாளைக் கை பிடித்துக்கொண்டு அக்கினியை மூன்றுதரம் வலமாகச் சுற்றினர். அப்போது சங்க முழங்கவும் நான்கு வேதங்கள்

சப்திக்கவும், தேவர்களும் முனிவர்களும் புஷ்பமாரி பொழி யவும், சுவாமி ஆசனத்தில் எழுந்தருளச் சர்வத்திர பேரும் வந்தனஞ் செய்தனர். தேவர்களும் பிரமனும் விஷ்ணுவும் யாவரும் சுவாமியை நோக்கி "ஐயனே" தேவரீர் முன் எரித்த மன்மதனை எழுப்பித் தரவேண்டும் என்று கேட்டார்கள். அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்துக் கொடுத்துக் கிருபைசெய்தனர். திருக்கலியாணம் நடந்த பின்பு சுவாமியும் அம்மையும் மிகுந்த அன்பு கொண்டு வாழ்ந்து வந்து விநாயகமூர்த்தியையும், சுப்பிரமணியக்கடவுளையும் பெருது பெற்றெடுத்தார்கள். சுவாமி சண்முகக் கடவுளுக்கு வேலாயுதமொன்று தந்தருளியனுப்பி வைக்க அவர் போய்த் தாருகாசூரன் முதலியோரை சம்மாரஞ் செய்தனர். பின்பு நமது அப்பனாகிய சிவபெருமானும் அம்மையாகிய பார்வதியாரும் திருக்கைலாயமடைந்து வீற்றிருந்தருளினர்,

திருவவதாரச் சருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கண் புதைத்த சருக்கம்

மறலியை ஜெயித்த மார்க்கண்டேயரே! பின்பு ஒருநாள் மகா கைலாயத்திலே பார்வதியார் சுவாமியை வணங்கி ஐயனே! சந்திர சூரியர்கள் யாவர்? என்று கேட்க அதற்குச் சுவாமி, "பெண்ணே! அந்த இருவரும் நம்முடைய கண்கள்" என்றனர். அப்போது வேடிக்கையாய்ச் சுவாமியினுடைய



ஓர் சமயம் வேடிக்கையார்த்தமாய்ப் பார்வதிதேவியார் சுவாமியின் கண்களை மூட அதனால் தோஷமடைடல் ஷி தோஷம் நீங்க பார்வதி காஞ்சிநக ல் சம்பாநதியில் மணலால் லிங்கம் ஸ்தாபித்து பூசித்தல்.

நேத்திரங்களை அம்பாள் தனது திருக்கரங்களால் மூடினர். உடனே இருட் கூட்டத்தை உருகச்செய்து பூசினது போலத் திக்குகளும் பூமியுமிருண்டது. மலைகளெல்லாம் நீலகிரியைப்போலக் கறுத்தன. நதிகளெல்லாம் யமுனாநதி போல் கறுத்தன. பிர்மாவும், விஷ்ணுவும், முனிவர்களும் அஷ்டவசுக்களும், தேவேந்திரனும் கண்பிரகாம் மற்றுப் பிறவிக் குருடர் போலாயினர். பசு, காளை முதலிய மிருகங்களும் பட்சிகளும் கண்ணொளியற்றன. இல்லறம் துறவரம் இரண்டும் ஒழிந்தன. தேவர்களும் மனிதர்களும் இராட்சதர் போலக் கறுத்தனர். பிரமன் அன்னம் காகம் போலாகியது. இப்படி எல்லாம் மயங்குகிற காலத்தில் மூவர்க்கு முதல்வனான சிவபெருமானிடத்தில் தேவர்களெல்லோரும்போய் முறையுமிட்டனர். கருணையங் கடவுள் யாவரையும் கையமர்த்திப் பனிரண்டுகோடி சூரியன் உதயம் போலத் தம்முடைய நெற்றிக்கண்ணைத்திறக்க, ஏழுலகமும் அந்தகாரம் நீங்கியது. அம்பாள் உடனே அச்சங்கொண்டு தமது திருக்கரங்களை எடுத்து விட்டனர், பார்வதியார் சுவாமியை வணங்கி, "ஆண்டவரே! நெடிய சூலத்தையுடையவரே! எமனை மார்பிலுதைத்த மலர்போன்ற பாதங்களுடையவரே! ஆத்திமாலையை யணிந்த சடைக்காட்டினையுடையவரே! ஏழுலகமும் மேகநிறத்திலும் அதிகமாக இருண்டு விடும்படி உமது கண்களை மூடிய கொடியபாவம் போகும்படி சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்தில் தவம் செய்தற்கு நல்ல இடஞ் சொல்லும்" என்று கேட்டனர்.

சுவாமி "பெண்ணே! உன்னைமிப்பாவம் வந்து சேராதாயினும், மற்றவர்கட்குப் பாவம் நீங்கும் பொருட்டுத் தவஞ் செய்ய இச்சித்தாயானல் மதுரா, மாயா, காசி, அவந்தி இவைகளுட் சிறந்த காஞ்சிபுரம் போய்ப் பூசையுடன் அரிய

தவஞ்செய்க" என்றனர். அதுகேட்டுச் சுவாமியை வணங்கி விடை பெற்று, வீரலட்சுமி குடைபிடிக்க, ஜயலட்சுமி பொன்னடப்பை தாங்கிவர, இரத்தினங்கள் இழைத்த சாமரங்களால் அருந்ததியும் இலட்சுமியும் இரண்டு பக்கங்களிலிருந்து காற்றுக்களைவீச, நாலுதிக்கிலும் சந்திரனைப்போலப் பிரகாசம் வீசும் முத்துப் பல்லக்கிலேறி யாவரும் விரும்புகின்ற தருமம் பெருகச் சலம் பெருகுகின்ற கீர்த்தியையுடைய கங்காதீரம் வந்து சேர்ந்தனர். இறந்துபோன உயிர் இனி திரும்பி பிறக்காமலும், இறக்காமலும் பரமசிவத்தினுடைய திவ்விய சொருபமான காசிப்பதியைச் சேர்ந்து விசுவேசருடைய பாதம்போற்றி மழையில்லாமல் வருந்துகின்ற ஜீவராசிகள் பிழைக்கும் பொருட்டு அத்தலத்தில் தருமத்தைப் பலநாள் வளர்த்துப் பின்னர் பல தேயங்களையும் தரிசித்துக்கொண்டே தொண்டமண்டலம் அடைந்து மேகங்கள் தவழுகின்ற தலையினை யுடைய பலாவினது பழங்கள் வாய்விண்டலாலும், மகரவாழைப் பழங்கள் அளிவதனாலும் புதியதேன் பெருக்கெடுத்து வாய்க்கால் வழியோடி விழுகின்றன. கனிகளைக்கடந்து குண்டலம் வரைக்குந் தாவுகின்ற கண்களையுடைய பெண்கள் நாட்டியஞ் செய்கின்ற குறிப்பைப் பார்த்துச் சோலைகளில் இளமையாகிய மயில்கள் நடனஞ் செய்கின்ற காஞ்சீபுரத்தைச் சேர்ந்தார், கற்களையும் மரங்களையும் உருகச்செய்து மனிதர்களுடைய உள்ளறிவைக் கொடுக்கின்ற விசாலமாகிய கண்களையுடைய பெண்கள் சிலம்பணிந்த தாமரை மலர்போலும் பாதஞ்சிவக்க நூல்போல் இடைவளைய, ஏறுகின்ற அப்பட்டினத்தி லிருக்கும் இரத்தினமிழைத்த உப்பரிகைகள் அரம்பை முதலிய பெண்கள் விளையாடுகிறதற்கு மலைகளாக விளங்கும்.

சிவாலயத்தின் கோபுரத்தில் கட்டியிருக்கிற கொடிகள் கற்பகவிருட்சத்திற் படர்ந்த காமவல்லி யென்னும்

கொடிக்குப் படருகிறதற்குக் கொழுக் கொம்பாகவிருக்கும் அத்தகைமையையுடைய விதியைக்கடந்து வேதசொருபமாகிய மாமரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனை வணங்கி நெருப்பையொத்த பாவங்கள் நடுங்கி ஓடிப்போக வருகின்ற கம்பைநதி அருகேபோய் அலங்காரமாய் மணலைக் குவித்து இலிங்கரூபமாக்கிப் பார்வதியார் பூசை செய்யும் போது, எம்முடைய சுவாமி அம்மையார் தவத்தின் உறுதியை யறிய அரிதாகிய கங்கையைப் பிரவாகமாக வரச் செய்தனர். பூமியில் அகத்தியமுனிவர் கமண்டலங் கவிழ்ந்ததினால் பெருகி வருகிற காவேரியோ? அந்த முனியானவர் அதிசாலையில் ஆசமனஞ் செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ? குற்றமற்ற தவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனிவர் இரக்கத்தில் காதின் வழியாக விழப் பெருக்கெடுத்து வந்த கங்காநதியோ? என்று சந்தேகப்பட விருந்தது அந்த கம்பைநதி. அந்நதி பெருக்கெடுக்கும்போது பார்வதியார் மணலால் செய்த இலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயந்து, காமங்கொண்ட, ஆசையினால் அணைப்பவன் போலப் பர்வதராஜகுமாரி வளையலணிந்த கைகளாலும், இரண்டு கொங்கைகளாலும், இறுகித் தழுவுதலும், வாசனைபொருந்திய சந்தனத்தை அணிந்த திருமார்பு உருகிக் குழைந்தார். தன்னுடைய தவத்திற்குப் பின்னும் வாராமல் நினைத்திருந்த துன்பமும், சுவாமி கூடாமற் பிரிந்த துன்பமும் தீரும்படி, தனங்களாலே நெருக்கி முகமலர்த்தி மூன்னாள் போல் அணைந்தவுடனே, அன்னங்கள் சூழ்ந்த கம்பை நதியானது அருணாசலத்தை ஒரு வேளை நினைத்தவர்களுடைய நல்வினை, தீவினை போல் இரண்டாகப் பிரித்து இலிங்கத்தைச் சுற்றிப் போனது பார்வதியார் சுவாமியைத் தழுவிய கைகளை விட்டனர்.

அருகில் பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய அநேகப் பெண்கள் சூழப் புட்பமாலையும், சந்தனமும் தரித்து

வந்தனஞ் செய்தனர். மாவடு போன்ற கண்களையுடைய அந்த அம்மையார் தன்னுடைய சுவாமி மார்பில் மற்றப் பெண்கள் வெட்கத்தையடைந்து தோடாமலிருக்கும்படி தடுக்க வைத்த குறிகள் போலத் தழும்புகள் விட்டன. அக்காலத்தில் பரமசிவன் அரிமர்த்தன பாண்டியராஜன் பிரம்பால் அடித்து தழும்பியிருந்த திருத்தோள்களும், மூன்று காலத்திலும் வணங்குகின்ற தேவர்களுடைய சிரீடங்களில் தழும்பியிருந்த திருவடிகளும் மேகம் போல விளங்கும் கூந்தலையுடைய பார்வதியார் முலைத்தழும்பும், வளைத்த தழும்பும் இருக்கின்ற மார்பும். தேகத்திற்பொலிந்த திருநீறுமாய் இடப வாகனத்தில் எழுந்தருளினர். ஆகாயத்தில் தேவர்கள் யாவரும் புட்பவருஷம் பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடு வேதங்கள் முழங்கின, தேவேந்திரனும் விஷ்ணுவும், தேவர்களும் பார்வதியாரைத் தொழுதனர்கள், அழகிய கனிபோலும் வாயையுடைய அம்மையாரும் பரமசிவனை வணங்கி முன்பாகச் சென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூஜைசெய்து புகழ்ந்து வணங்கினர், சுவாமி பார்வதியைப் பார்த்து, உனக்கு வேண்டிய வரம்யாது? சொல் என்றனர், அதற்கு அம்மையாரும் யாதும் வேண்டிலேன், உமது இடது பாகத்தை அருளுமென்று கேட்டனர். அதற்குப் பரமசிவன் அருளுவர் "என் கண்களை மூடியதினாலே அடைந்த பாவம் இத்தலத்தில் இனிமையான பூஜை செய்ததனால் நீங்கியது.

இந்த மெய்மையான தலத்திற்குத் தென்பக்கத்தில் ஒரு நகரம் பிரகாசிக்கும். அதை நினைத்தால் முத்தி யுண்டாகும். பிரமனும் விஷ்ணுவும், தேடப் பாதமும், சிரசும் அவர்கட்குத் தெரியாமல் ஒளித்து பூரணமாகிய ஞான வொளியாய் மேல் கீழுலகமெல்லாம் ஒன்றாய் நிற்போம். பூமிகளிலிருப்போர்க்கு மலையுருவாயிருப்போம். அவ்விடத்தில் வந்தால் "சணிந்த தனத்தையுடைய பெண்ணே! இடப்பாகத்தைத்

தருவோம் என்றார் சிவபெருமான், இவ்வாறு திருவுளம்பற்றி அருளிய அளவில் பார்வதியார் சொல்லுவார், "இனிய கைலாயம், காசி இவ்விரண்டுத் தலங்களிலும் இக்காஞ்சிபுரம் அதிகமென்று அருள்செய்தீர். இதைப் பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்கிறீர். அத்தலத்திற்குச் சமானமான பெருமை பொருந்திய தலம் வேறொன்றுண்டோ?" என்றார் பார்வதியானவர் சொன்ன வார்த்தையைச் சுவாமி மறுத்து நமக்குச் சமானமாகிய தெய்வமும், பஞ்சாக்கரத்திற்கொப்பான மந்திரமும் சைவத்திற்குச் சரியான சமயமும், பொல்லாத பாவங்களைத் தீர்க்கும் அருணாசலத்திற்குச் சரியான தலமும் உலகத்தில் இல்லையென்று திருவாய்மலர்ந்து கைலாயத்திற்கு எழுந்தருளினர். புஷ்பக்கொம்பை யொத்த பார்வதியார் "சுவாமி நான் தெரியாமற் சொன்ன வார்த்தையைப் பொறுத்தருளவேண்டும்" என்று இரண்டு கைகளையுங் குவித்து வணங்கிக் கம்பையாற்றை விட்டு காஞ்சிபுரத்தையுங் கடந்து கணபதி, சுப்பிரமணியர், சத்த கன்னிகள், வைரவர், சிவகணங்கள் சூழவும் இலக்குமி சுவரிவீசவும் பல்லக்கில் எழுந்தருளினர்.

பார்வதியார் அருணாசலத்திற்குப் பிரயாணப்பட்டவுடனே வழியில் பட்டுப்போன மரங்களுந் தளிருண்டாகித் தழைத்துத் தேனொடும், புஷ்பங்களைச் சொரியப் பாறைக் கற்களும், பெரிய மலைகளுங் கரைந்துருக வெள்ளைத் தாமரைப்பூவில் வாசஞ்செய்யுஞ் சரஸ்வதி தோத்திரஞ் செய்ய இரண்டுகாத தூரம் போய்ச் சந்திரனை யொத்த முகத்தையுடைய பார்வதி வெளியிடத்தில் இறங்கினார் அவ்விடத்தில் சூரியன் அஸ்தமானவுடன் சுப்பிரமண்யகடவுள் அவ்விடத்தில் ஒருவிசித்திரமான வாழைபந்தல் நியமித்தனர். அன்றியும் சந்தியாவந்தனம் தனது தாயார் செய்து கொள்வதற்குத் தமது வேலை யேவப், போதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டுரங்கன், சோமன், வாமன் என்று

சொல்லப்பட்ட ஏழுபேரையும் அவர்கள் இருந்த ஏழுமலை களையும் ஊடுருவி நல்ல தண்ணீர்க் கடலுக்குப் போய் ஜலங் கொண்டு வந்தது: இந்நதிக்குச் சேயாறு என்று பெயர். அம்மையார் அந்நதியில் தமது நித்தியக்கடனை முடித்துக் கொண்டு வாழைப் பந்தலில் இருந்துகொண்டிருந்தனர் அப்போது முருகக்கடவுள் தமது தாயாரைப் பணிந்து, "அம்மணி இந்நதியானது சிவப்பு நிறமாகயிருப்பதென்ன? எனக் கேட்கப் பார்வதியார் சொல்வாராயினர். "குழந்தாய் அனந்தமாபுரமென்கிற பட்டினத்திலே ஏழு பிராமணர்கள் அறியாத காலத்தில் அனந்தந் தீவினைகளைச் செய்து. அதன் பின்பு நல்ல விவேகந்தோன்றி, அன்னத்தைத் தனக்கு வாகனமாகக்கொண்ட பிரமனைக் குறித்து இலைகளை உணவாக வுண்டு பலநாள் தவஞ்செய்ய, அக்காலத்தில் பிரமன் அவர்கள் முன்னிலையில் வந்து! 'பாவிகளே' நீங்கள் ஏழுபேரும் ஏழுமலைகளில் விதமுறையாகத் தவம் செய்வீர்களானால் அப்போது பார்வதியாருக்கு ஜலம்வேண்டிய நிமித்தியத்தால் சுப்பிரமணியர் வேல் விடுவார்; அதனால் உங்கள் சிரங்களும். பாவங்களும் பொடியாகப்போம்' 'என்று. சொல்லி விட்டுப் போயினர். அந்தப் பிரகாரம் இன்று உனது வேல் எய்ததினால் அவர்கள் இரத்தங்கலந்து இந்நதி சிவந்து போய் விட்டது. உனக்கு ஒரு குற்றமில்லை என்றனர். உடனே சூரியன் கிழக்கில் உதயமாயினன். பார்வதியார் சேயாற்றில் மாலைக்கடனை முடித்துக்கொண்டு, பொன்மயமான பல்லக்கிலேறி வேதகோஷ்டங்கள் முழங்க நடந்து. மும்மலங்களை ஒழிக்கும் அடியார்களுடைய பாவமாகிய பஞ்சுமலைக்கு நெருப்பு மலையாய் விளங்கிய திருவண்ணாமலையைப் பார்த்தவுடன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து எல்லையைக் கடந்து வடக்கு வீசியிலெழுந்தருளி அருணாசலேசுரருடைய பாதாரவிந்தத்தைப் போய் வணங்க, ஆகாயத்தை யளாவிய கொடிகளையுடைய தேர்கள் இருக்கும் கிழக்கு

வீதியிற் போய்க் கோயிலுக்குள் பிரவேசித்து, ஞான சொரு பராகிய பரமேச்சுரனைத் தரிசனம் செய்துகொண்டு பல சக்தி களுடனே மலைச்சாரலை அடைந்தனர்.

அவ்விடத்தில் ஊசியினை நட்டு அதன்மேல் ஒருகால் விரலை யூன்றிக்கொண்டு ஒரு காலை மடித்து மூக்கு நுனியில் கண்களைச் சேர்த்து பஞ்சாக்கினியை வளர்த்துப் பிரகாச மான அமிர்த தாரணைச்செய்து பிரம மந்திரங்களின் வழியாய் வருகிற அமிர்தத்தைச் சாப்பிட்டு விசுவாமித்திரர் போல் அநேகர் தவஞ்செய்து கொண்டிருந்தனர். மற்றொரு பக்கத் தில் மும்மலங்களை நீக்கி நல்வினை, தீவினை ஒப்புவந்து மன மென்பது இறந்து தற்போதங்கெட்டு உலகம் சித் சொருப மாய் மோட்சம் பெறும்படியாக ஆசைகொண்டு மற்றொ ராசையுமின்றிச் சிவஞானம் பெற்ற ஞானிகள் அநேகர் தவம் செய்து கொண்டிருந்தனர். மற்றொரு திசையில் அடி யார்களுடனே ஆகமங்கள் சொன்ன விதி முறைப்படி சூரி யன் முதல் சண்டேசுரர் அந்தமாகப் பூஜைசெய்து தேவர்க ளுக்கெல்லாம் முதல்வனான சிவபிரானுடைய பஞ்சாக்ஷர மந்திரத்தை ஓதித் தினமகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர் கள் இருந்தனர். வேறுபக்கத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று சொல்லப்பட்ட அஷ்டாங்க யோகங்களின் வகை களை அறிந்து அவைகளைத் தேக சிரமப்பட்டு முயல்கின்ற யோகியர் அனேகர் இருந்தனர். இவைகளையெல்லாம் பார் வதியார் பார்த்துக்கொண்டே அவர்கள் அரியசெயல்களையுங் கண்டு மாந்தோப்பு சூழ்ந்த சுனையும், சுனை சூழ்ந்துள்ள சீதள மான அருவிகளையும் பார்த்துச் சந்தோஷமடைந்து அவ்வி டத்திலிருக்கிற கௌதமருடைய ஆச்சிரமத்தில் வந்தனர்.

அம்மையாரை அம்முனிவர் மனைவி அகலிகையும், அவர் புத்திரர் சதானந்தரும் வந்து பணிந்தார்கள். அம்மை அவர்

களை ஆசீர்வதித்து வேதங்களை உணர்ந்த முதன்மையான கௌதம முனிவர் எங்கேயிருக்கிறார்? என்று கேட்க அவர் புட்பம், தருப்பைகொண்டு வருகிறதற்குப் போனாரென்று சொல்லித் தாயே! அக்குடிசை வீட்டில் இமைப்போது, எழுந்தருளி யிருந்தால் எனது தகப்பனாரை அழைத்துக் கொண்டு வருகிறேனென்று பாதங்களை தொழுது, சதானந்தர் கௌதமரிடம் செல்லுகையில் கௌதமர் எதிரே வரும் வழியில் எல்லா விருட்சங்களும் புஷ்பித்து கற்பகவிருட்சம் போல இருக்கக்கண்டு இது நமது வனமல்லவே, எனச் சந்தேகப்பட்டுத் தன்னுடனே வரும் பிருகு, பராசரர், அத்திரி முதலியவரைக் கேட்க, அவர்களும் மயங்கச் சமீபத்தில் வந்த தமது புத்திரர் சதானந்தரைக் கண்டு என்ன விசேஷம் என்றனர். அப்புதல்வர் ஐயா! பிரமன்முதலாகிய ஐவரையும் தன்னிடத்தி லுண்டாக்கிய தேசோமயமாகிய பராசக்தி இவ் விடத்தில் வந்திருக்கிறார் என்று வணங்கிச் சொல்ல, கௌதமர் "நமது குடிசையில் வேதங்கள் தேடுதற்கரிய அம்மையார் வர என்ன தவம்! என்ன தவம்! என்று தனது மைந்தனைக் கட்டித் தழுவிக்கொண்டு திருக்கூத்தாடி சந்தோஷமென்கிற சமுத்திரத்தில் மூழ்கிப்பாடித் தருப்பையைப் பூமியிலே எறிந்து விட்டு என்னுடைய பாவம் இன்று வேருடனே போயிற்றென்று ஓடி வந்து மற்ற முனிவருடன் இரண்டு கைகளையும் தலைமேல் வைத்துக் கூத்தாடி பத்தி வலையில் அகப்படும் பார்வதியாரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துத் 'தாயே! நீயோ நித்திய கன்னிகை; சுவாமியோ நித்திய பிரமசாரி என்று, சிருஷ்டி தொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

அப்படி யிருக்க உன்னிடத்தில் எல்லா உயிர்களும் தோன்றித் தாயென்று சொல்லும் உன்பெருமையை யார் அறியப் போகிறார்கள்? பரமசிவமானவர் மகேசுரர். உருத்தி

ரர், பிரமா, விஷ்ணு, ஆனல் நீ மகேசுவரி, உருத்திரி, சரஸ்வதி, இலக்குமியர்களெனவிளங்குகின்றனே, அன்றியும் அச்சிவ பெருமான் எத்தகைய உருவங் கொள்கின்றனரோ அதற்கேற்ற வடிவங்களை நீயுங் கொள்வாய். உன் பெருமையை யார் அறிய வல்லார்? பிரமன், அஷ்டதிக்குப் பாலகர் முதலியோரும் தங்கள் சிரங்களில் வைத்தற்கரிய நினது பாதம் இரண்டும் அடியேனுடைய புன்மை பொருந்திய சிறுவீட்டில் மிதிக்க என்ன புண்ணியஞ் செய்தேன்? இவையனைத்தையுங்கேட்ட அம்பாள் கௌதமரை நோக்கி "குழந்தாய்! எனது பிள்ளையாகிய விநாயகன், சுப்பிரமணியன் இருவரையும் நேசிப்பதுபோல, உன்னையும் நேசிக்கின்றேன். நானொரு முக்கியமான விஷயத்தினை நிறைவேற்ற இத்தலம் அடைந்தனன். அது எனது நாயகன் கட்டளை. இங்கு ஒரு அரிய தவம் முடிக்க வேண்டும்'' என்றனர். தேவேந்திரனுக்கு ஆயிரங் கண்ணைக்கொடுத்த கௌதமர்கேட்டு, "அம்மணி! இத்தலம் முதன்மையான தலம்; இதனுடைய பெயர் தலேச்சுரம்; அது மிகவும் உத்தமமானது இதில் புண்ணியம் செய்தால் அது பலவாகும்; இதிலிருந்து கொண்டு நீ மெய்மையான தவத்தினைச் செய்தால் பரமேஸ்வரன் தனது இடது பாகத்தினைக் கொடுப்பர். விஷ்ணு, பிரமன். அஷ்டவசுக்கள், தேவேந்திரன் அநேக முனிவர்கள் இத்தலத்தில் இடஞ்செய்துகொண்டு ஒப்பற்ற தவஞ்செய்து நினைத்த காரியங்களை முடித்துக் கொண்டார்கள், இப்போது நீ வந்த காலம் நன்மையாகும்! இவ்விடத்தில் தவஞ்செய்தால் கைப்பலமாகி முடியும் என்றனர்.

அப்போது அம்பாள் புட்பங்களைத் தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்து தோள், கழுத்து, காதுகளில் உருத்திராட்ச மாலைகளைத்தரித்து ஆடுகின்ற பாம்பு போலிருக்கிற பட்டாடையுடுப்பது விட்டு மரவுரி தரித்து ஜயத்

தைக் கொடுக்கிற விபூதியைச் சருவாங்கமும் பூசி, நெருப்பில் காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியின்மேல் ஒருகாற் பெருவிரலையூன்றி இராப்பகலாக மனத்திலே சிவபெருமானைத் தியானம் செய்து அரிதாகிய பெரிய தவத்தைச் செய்தனர். மிகவும் சிறிதாகிய கொடிபோன்ற இடைவளைந்து அக்கினி மத்தியில் இனிமையான தவத்தைச் செய்வதைப் பார்த்துச் சரஸ்வதியானவள் இளைத்து வாட்டமடைந்து களைத்து மனந்துடித்து இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு அழுது விழுந்தாள். இலக்குமி மனம் வருந்திச் சஞ்சலப்பட்டுக் கண்ணீரால் மூழ்கினுள், மற்ற ஜீவராசிகளெல்லாம் மனங்கரைந்து உருகின; முன் பனிக்காலத்தில் கருகிப் போகாத தாமரைப்பூப்போல முகமாத்திரந் தெரியக் குளிர்ச்சி பொருந்திய தடாகங்களி லிருந்தும், பின் பனிக்காலத்தில் அதிக சீதளம் பொருந்திய இடத்திலிருந்தும் மழைபெய்கிற போது ஒரு மீனைப்போலச் சஞ்சலப் படாதிருந்தும் தவஞ் செய்தனர். அவ்விடத்தில் பிரமனும் விஷ்ணு முதலிய தேவர்களும் தவச்சாலை வந்து சேர்ந்தனர். பார்வதியானவர் அவர்கட்கெல்லாம் உபசாரம் சொல்லி "ஏன் இவ்விடம் மனம் வாடி வந்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள் "தாயே! அதிக துஷ்டனுகிய மகிடாசுரன் என்னும் அசுரன் எங்களை மிக்க வருத்துகின்ருன்; எங்கட்கு வேறுகதியில்லை உன் திருவடியே அடைக்கலமென வடைந்தோம்" என்றனர், அதைக்கேட்டு அம்பாள் மனமிரங்கித் தனது சமீபத்திலிருந்த துர்க்கையை கூப்பிட்டு "நீசென்று மகிடாசுரனை எதிர்த்து, அவன் வல்லமை கெட நின்று வாளினுல் அவனைக்கொன்று விட்டுவா" என்றனர், அங்ஙனமே செய்வேனெனத் துர்க்கை எழுந்து புறப்பட்டனள். தேவர்களும் விடைபெற்றுத் தங்கள் இடஞ் சென்றுர்கள்.

திருக்கண் புதைத்த சருக்கம் முற்றிற்று.

ஓம்
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இடப்பாகம் பெற்ற சருக்கம்

மார்க்கண்டேய முனிவரே! கேட்பாயாக, மகிடாசுரன் நீலகிரியில் வாசஞ்செய்து கொண்டிருக்கிற அசுரன். எல்லாரிலும் அதிக பராக்கிரமத்தையுடையவன் விஷத்திற்குச் சமானமானவன் எமனுக்கும் எமனானவன் மகிடாசுரனானவன் நெருப்பினும் மிகுந்த தீமையுடையவன், அளகாபுரி குபேரன் தரித்திரமடைய அவன் ஊரைக் கொள்ளையடித்தவன் விஷ்ணு நித்திரை செய்கின்ற ஆதிசேடனுடைய வாலை ஒரு கையினாற் சேர்த்துப் பிடித்துக் கவணாக்கி, விஷ்ணுவைக் கல்லாக்கித் தூரத்திலெறிந்து விளையாடுவான். அக்கினியைத் தள்ளிவிட்டு அவனேறுகிற ஆட்டினை தன் பிள்ளைக்கு ஏறக் கொடுப்பான். சந்திரனை அவனுடம்பிலிருக்கிற தேவாமிர்தத்தைப் பானம் பண்ணுவன் தேவேந்திரனுடைய வெள்ளை யானையின்மேல் பவனி வருவான். சூரியன் தேரிலேறிக் கொண்டு பச்சை குதிரைகளேழும் நடக்கத் திருவோலக்கம் வருவான்; நிருதியின் வாகனமாகிய ஆளியின்மேல் ஏறிக் கொள்ளுவான்; சருவ ஜீவன்களையும் வாளால் வெட்டிவருவான்; எருமைமாட்டின் முகத்தையுடைய அவன் பயத்தால் எமன் தனது எருமையிலேறுது திரிந்தான்; மீன் பிடிக்கும்படி சமுத்திரத்தையும் தூர்த்தான்; மயனென்கிற தேவதச்சனால் இரத்தினகசிதமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் இருந்து கொண்டு பிரமதேவன் நித்தியம் அறுகும் அட்சதையும் கொண்டு வந்து கொடுத்து வாழ்ந்து வருகையில் அந்த அசுரன் தின்னுகிற மாமிசத்திற்காக ஆயுதபாணிகளாய் ஆயிரம் பேர்கள், யானை முதலான மிருகங்களைத் தேடிக் கொண்டு வேட்டை மார்க்கமாகக் காட்டிற்குப் போனார்கள், அவர்கள் பார்வதியார் தவஞ்செய்து கொண்டிருக்கிற வனத்தைச் சுற்றிக்கொள்ள அங்குகாவலாக இருந்த அஷ்டவைரவர்கள் அந்த ஆயிரம் பேரையுங் கொன்று விட்டனர். இது சங்கதி மகிடாசுரன் தெரிந்து புகையுண்டாகும்படி கோபச்சிரிப்பு செய்து இரண்டு கண்களிலும் நெருப்புகள் வீச; அண்டகோளமும் கிறுகிறென்று சுழல தேவர் கூட்டங்கள் நடுங்க எமன் ஒளித்துகொள்ள ஆடம்பரம் செய்தனன்.



பார்வதி துர்க்கையைக் கொண்டு மகிடாசுரனை சம்மரிக்கச் செய்வித்தபின், பரமசிவன் பார்வதி தவத்துக்கிரங்கி, இடப்பாகந் தந்து அர்த்தநா ரீசுர ரென்னும் இயற்பெயருஞ் சூட்டப்பெற்றனர்.

அப்போது நிகும்பாசுரன் என்கிற படைத்தலைவன் எழுந்து, "அரசனே! உம்முடைய கோபத்தை அற்பமானவர்களா பொறுப்பார்கள், இப்போதே நான் போய் பார்வதியார் தவஞ் செய்துக் கொண்டிருக்கிற வனத்திலுள்ளவர்களைக் கொன்று வருகிறேன் என்று புறப்பட்டான்," மேற்குச் சமுத்திரத்தில் கோபித்துக் கிழக்குகடல் சண்டை செய்யப் புறப்பட்டதுபோலப் பெரிய தேவர்களும், யானைகளும், குதிரைகளும், காலாள்களும் புறப்பட்டனர். நிகும்பாசுரன் மகாமேருவுக்கும் அகஸ்தியர் இருக்கின்ற பொதியமலைக்கும் மத்தியில் நிறைந்த ஒருகரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாக போனான்; நிகும்பாசுரன் பச்சைக் குதிரை ஆயிரம் கட்டிய தேரில் ஏறிக்கொண்டு அப்போது எழும்பிய சிறு அணுக்கள் முன் போகின்ற யானைகளின் மதஜலம் சமுத்திரமாகத் தேங்கியிருப்பதை வற்றச் செய்யப் பார்வதியார் தவஞ்செய்யும் வனத்திற்குப் போனான். கொழுந்து விட்டெரியும் நெருப்பையொத்த அசுரப்படைகள் அனேகமலைகளை விட்டெறிய இவர்கள் வருவதுகண்டு அவ்வனத்திலிருக்கிற தாக்கணந்த நோக்கணங்கு என்னும் இருவரும் ஆயுதபாணிகளாகப் போய் எதிரே தடுத்தார்கள். சண்டன், உருத்திரன், சோமன், கபாலி, சங்கரன், கோதண்டன், வீதன், சித்திராங்கதன் இவ்வெட்டு வயிரவர்களும் அண்டகோளமுடைபட யானைகளைக் கொல்லுகிற சிங்கங்கள் போலக் கர்ஜித்து நிகும்பாசுரனும் அவன் சாரதியும் தேரும் தவிர மற்றச் சேனைகளையெல்லாம் நொடிப்பொழுதில் கொன்றார்கள். எட்டு வயிரவர்களுடைய ஆயுதங்களினாலும் இரண்டு பெண்களாலும் தன்னுடைய படை முழுதும் இறந்து போவதைப் பார்த்து நிகும்பாசுரன் வட்டமாகிய கொடியதேரை விட்டுக்கொண்டு தாக்கணங்குஎன்பவளுடைய முகத்தில் கணக்கில்லாத பாணங்களை விட்டான்,

அப்பாணங்களை விலக்கித் தேர் நடத்துகிற சாரதியைக் கொன்று அம்புதொடுத்த கைகளை யறுத்து அவனுடைய தலையையும் அறுத்துத் தள்ளினான். வயிரவர்களாலும் இரண்டு பெண்களாலும் தேகம் அறுபட்டுச் சீக்கிரத்தில் போகும் அசுரர் உயிர்போல இரத்தநதி ஓடியது. நித்தியம் மாமிசத்தைத் தின்று கூத்தாடுகிற பேய் போலக் கவந்தங்கள் கூத்தாடின. வயிரவர் தாக்கணங்கும் நோக்கணங்கும் தம்பை வாகைமாலை சூடிக்கொண்டார்கள். அசுரர்கள் இறந்து போனார்களென்று மகிடாசுரனுக்குத் தூதர்கள் சீக்கிரத்தில் போய்ச் சொன்னார்கள். மகிடாசுரன் இவ்வார்த்தையைக் கேட்டு தன்னருகிலிருக்கும் கயிடவன் முகத்தை பார்த்து "வீரனே! நாட்டிற் சஞ்சரிக்கின்ற சிறிய பேய்களும் கணங்களும் நம்முடைய பெரிய சேனைகளைக் கொன்றன வென்றால் சிவன், பிரமன், விஷ்ணு, முதலானவர்கள் நாம் சொன்னபடி கேட்பார்களே" என்று அதிகமாகிய நகை கொண்டு எழுந்திருந்து ஆயிரம் யானைகள் கட்டிய தேரில் ஏறிக்கொண்டனன்.

அவனுடன் பதினொருகோடி யானைப்பலத்தை யுடையவராகிய காந்தன், நீலன், முதுகரன், குருதி, அண்டன், நீசன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன் மாலியென்றுந் துதிக்கப்பட்ட பன்னிருவரும் தங்கள் இரதங்களை நடத்திக் கொண்டு போனார்கள். யானை முகத்தையுடையவர்கள், நிவாதகவசர்கள், காலகேயர்கள். குதிரை முகத்தையுடையவர்கள், புலி முகத்தையுடையவர்கள். ஆகிய அசுரர் கூடிய ஆயிரம் வெள்ளம் நடந்தன. வல்லமை பொருந்திய மகிடாசுரன் வருவதைப் பார்த்துப் பயப்பட்டு ஓடிவந்து பார்வதிக்கு அபயமென்று முனிவர்கள் முறையிட்டுச் சொல்ல, அம்மை அவர்களுடைய பயங்களைத் தீர்த்துத் தன் சமீபத்தில் நின்ற பெருமை பொருந்திய துர்க்கையைப் பார்த்து உன்னுடைய கத்தியினாலே அவ்வசுரனைக் கொன்று விடென்று சொல்ல, அவள்,

உத்தரவு பெற்றுப் புறப்பட்டு ஆளிவாகனத்திலேறிக் கொண்டு போக அருணாயகி யென்பவள் முன்னே போகவும், காளிந்துமி என்கிற இருவரும் பின்னே வரவும், பார்வதியின் கணகங்களும் சுவான வாகனத்தில் வயிரவர்போகவும், பிரமி முதலாகிய மாதரெழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு தூசிப்படையாக துகளெழும்பப் போனவுடனே உலக்கையினாலும் மலைகளாலும் வில் முதலாகிய ஆயுதங்களாலும் கோபத்துடனே போர் செய்கின்ற மகிடாசுரனுடைய பாதிசேனையை ஒருநொடிப் பொழுதிலே கொன்றுவிட்டார்கள். மகிடாசுரனும் அவனுடைய சேனைத் தலைவர்களும் மலைபோல் எதிர்த்துத் துர்க்கையின் சேனைகளையெல்லாந் துரத்திச் சென்றார்கள். அசுரனது படைகள் எதிர்த்து யுத்தஞ் செய்தனவ் துர்துமி, காளிமதங்கி, சண்முகி; திமிரிக்கையால் இந்திரை மறைய ளென்கிற ஏழு மாதரும் யுத்தம் செய்யமாட்டாமல் காட்டில் ஒளித்தார்கள். சுவான வாகனத்தையுடைய வயிரவர்களும் பின் வாங்கினர். துர்க்கை மனந்தளர்ந்து உமாதேவியே என்று தியானித்து நின்றாள். அப்போது அறுபத்துநான்கு கோடி யோகினிகள் ஆகாயத்தில் ஆர்ப்பரித்தெழுந்து நெருப்பு மழையையும்; இடிமழையையும் சொரிந்தபடியினால் மகிடாசுரனுடைய சேனைகள் எரிந்து போயின. உடனே சேனைத்தலைவர்கள் கோபித்துச் சண்டை செய்தார்கள்.

அபிராமி யென்பவள் அருசிகனென்பவனைக் கொன்றாள், வாரணியென்பவள் காந்தனென்பவனைக் கொன்றாள். சண்முகி யென்பவள் கரனைக் கொன்றாள், சூலத்தையுடைய காளி யென்பவள் மீண்டனென்பவனையும், வராகி சண்டனென்பவனையும், நீலகண்டி மதுஎன்பவனையும், இந்திரை நீலன் என்பவனையும், துந்துமிக் கெதடியையுடையவள் சோணிதவூனன் என்பவனையும், அருணாசலை என்பவள் அக்கினிக் கண்ணனையும், சுந்தரி யென்பவள் கயிடவனையும்



ரிஷிகளால் சாபம் நேரிட்ட ரெருனி மகிடாசுரனுய்ப் பிறந்து துஷ்கிருத்தியஞ் செய்கையில் அருணையப்பதியின் கீழ்ப் பாரிசத்தில் பர்னசாலையில் பார்வதி தபசு செய்யுங்கால் துர்க்கையால் மகிடாசுரன் வதையுண்டது.

புகைக்கண்ணனையும் கொன்ருள்; வேலாயுத மேந்திய துர்க்கை மகிடாசுரனைக் கண்டு யுத்தம் ஆரம்பித்தபோது சப்த மாதர்கள் தங்கள் ஆயுதங்களினுல் அவன் விட்ட ஆயுதங்களையெல்லாம் விலக்கிக் கொண்டார்கள். அவ்வேளையில் சிங்க வாகனத்தையுடைய துர்க்கை அவனெதிரில் மகா மேரு அசையும்படி சங்கத்தை வாயில் வைத்து ஊதினுள். அப்போது அசுரர்கள் ஒவ்வொருவரும் மயக்கத்தை அடைந்தார்கள். சூரனுந் துர்க்கையும் ஒருவர் மேலொருவர் பாணங்களை மழைபோல் சொரிந்தார்கள். துர்க்கை விட்ட பாணங்களை யெல்லாம் மகிடாசுரன் அறுத்துத் தள்ளினுன். துர்க்கை இரண்டு அர்த்த சந்திர பாணங்களை விட்டு அவன் சிரத்திலழுத்தினள். அவனுக்கு இரத்தவெள்ளம் உருக்கின செப்புபோலச் சிதறிவிழ விட்ட பாணங்கள் அப்பாக விருந்தாலும் அசுரன் தலையில் முளைத்திருந்த கொம்பு போல அழுந்தி வளைந்து தோன்றின. ஜெயங்கொண்ட துர்க்கையின் கையிலிருந்த வில்லை இரண்டாக அவன் முறித்துத் தள்ளினுன்.

அவள் வில்லினுல் அவன் நெற்றியில் அடித்தாள். அது அவன் நெற்றியில் சுவாமியின் நெற்றிக்கண் நெருப்புப்போலச் சுறுக்கென்று தாக்கியது, அவள் தனது வில்லொடிந்ததும் அவள் கோபங்கொண்டு கொதித்தெழும்பும் எமனைப் போல பிரகாசிக்கின்ற சக்ராயுதம் விட்டு அவன் தலையறும் படி செய்தாள். மகிடாசூரன் தேகம் சின்ன பின்னமாயும் சாகாதவனுகித் தனது தபோபலத்தினுல் யானை யுருவங் கொண்டு எதிர் வந்தான். தர்க்கையின் சிங்கவாகனம் போய் அந்த யானையின் உச்சியிலிருக்கிற மூளையைத் தோண்டி யெடுத்துத் தின்றுவிட்டது, திருப்பியும் அவன் தண்டாயுதங் கொண்டு எறிந்தான் அவள் வேலாயுதத்தை விட்டாள் வேலாயுதம் அவன்மேல் பாய்ந்தவுடனே அவன் சகிக்க மாட்டாமல் இறந்து விட்டான், அவன் இறந்த

வுடனே குதிரை முகங்கொண்டு எதிர்வந்து தண்டாயுதத்தால் அடித்தான். அதைக் கத்தியின் மேல் துர்க்கை யறுத்தாள். அசுரர் நெருப்புருவங் கொண்டும், சலப்பிரளய ரூபங் கொண்டும், அந்தகாரமாயும், பிரமனாயும். விஷ்ணுவாகியும் எதிர்வந்தான். இந்த மாயாஜாலத்தைக் கண்டு இவனை எங்ஙனங் கொல்லுவதென வெண்ணிப் பார்வதிதேவியாருடைய இரண்டு திருவடிகளையும் மனதிலே தியானித்தாள். அப்போது "துர்க்கையே! அந்த அசுரன் தனது சுபாவமான எருமை முகம் கொண்டு எதிரில் வரும்போது அவன் தலையை யறுத்துத்தள்ளி தனது காலினால் மிதித்தால். அவன் மாயை யொழிந்துபோம்" என்று ஆகாயத்தில் அசரீரி பிறந்தது.

துர்க்கை கேட்டு அவன் மாயா ரூபங்களை யெல்லாம் சூலத்தினால் ஒழித்து வருகையில், அவன் தலையை வாளால் வெட்டித் தனது காலால் மிதித்துக் கொன்று விட்டனள். தேவர்கள் புஷ்பவருஷம் பொழிந்தார்கள் அவனும் துர்க்கையின் கையால் இறந்ததால் மெய்மையான மோட்சமடைந்தனன். அப்போது அவனது கண்டத்தில் ஒரு படிகலிங்க மிருந்தது. நவகண்ட மட்டும் ஆண்ட மகிடாசுரனுடைய கழுத்தை துர்க்கை அறுக்க, அவன் கண்டத்திலிருந்த படிக லிங்கத்தைக் கண்டபோதே கையினாலெடுத்தாள். அந்த லிங்கத்தை எடுத்துக் கொண்டுபோய் பார்வதியாரைத் தொழுது, அவர் கையில் கொடுத்து நடந்த காரியங்களைச் சொல்ல, அம்மையாரும் அதை வாங்கியவுடன் அது கெட்டியாகக் கையைப் பிடித்துக் கொண்டது. அம்மையார் ஆச்சரியமுற்று, இது எனது கையைப் பிடித்துக் கொண்டது என்னவென்று கேட்க, கௌதமர் தனது வாயைப் பொத்திக்கொண்டு சொல்லத் தொடங்கினர்.

எனது தாயே! முற்காலத்தில் அகத்தியர் முதலான ஐம்பது முனிவர்கள் ஒருங்குகூடி, வரமுனி என்பவருடைய

ஆசிரமத்திற்குப் போனார்கள். அந்த வரமுனிவர் தம்முடைய தபோபலத்தினாலே மரியாதையாக உபசாரம் செய்யாமலிருந்தனர். அப்போது அவரைப் பார்த்து பொன்போலும் அரிய தவத்தையுடைய எல்லா முனிவர்களும் கோபித்து எங்களை அவமரியாதை செய்தபடியினால் யாராலும் குறைவு சொல்லப்பட்ட கரிய எருமைக்கடாவாகப் பிறப்பாயென்று அவர்கள் மனம் வருந்திச் சபித்தார்கள். அவர் கேட்டுப் பயந்து எழுந்து வந்தனஞ் செய்து; முனிவர்களே! தெரியாமல் நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். அதற்கு முனிவர்கள் "நீர் எருமை முகம் பொருந்திய அசுரனாகி அரசாளுங் காலத்தில், சுவாமி இடது பாகத்தைப் பெறும்படி தவஞ்செய்து கொண்டிருக்கிற அம்மை உம்முடைய சாபத்தை நொடிப்பொழுதில் தீர்ப்பாள்'' என்று சொன்னார்கள்.

அவர்கள் சொன்ன பிரகாரம் வரமுனி அசுரர் குலத்தில் பிறந்து மகிடாசுரனென்னும் பெயர் படைத்துக் கொடுங்கோல் அரசு செய்துகொண்டு வருகையில், ஒருநாள் வேட்டையாடும்படி வனத்தில் வந்து மிகுந்த பசியினால் இரையொன்றும் அகப்படாமல் ஓடித் திரிந்துகொண்டிருந்தான். அவ்விடத்தில் நீங்குதற்கரிய தவஞ்செய்கின்ற மனனத முனிவர் எதிர்பட்டனர். அவரைக் கையிலிருக்கும் இலிங்கத்தோடே மகிடாசுரன் எடுத்து விழுங்கி விட்டனன். பின்பு அவன் கண்டத்திற் சிக்கிக்கொண்டு படிசுலிங்க மிருந்ததினால் மிகுந்த பெருமை யடைந்தான். அந்த இலிங்க மிகுந்த கண்டத்தை யுடையவனும் சிவசொருபமன்றோ! அவனைக் கொன்ற படியினால் பாவம் சம்பவித்தது. நீ நவதீர்த்தங்களாடினால், அப்பாவம் போம் என்றார். கௌதமர் சொல்லைக் கேட்டவுடன் ஒன்பது தீர்த்தமும் இவ்விடத்தில் வரும்படி செய்யென்று ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்குப் பிறந்தது. அது கேட்டுப் பார்வதியும், துர்க்கையின் முகத்தை

நோக்கி, உன்னுடைய கையிலிருக்கிற வாளினால் பூமியைப் பிளந்து சங்கை வரும்படிசெய்.என்று சொல்ல ஜயசங்கை கையிற்றறிந்து துர்க்கையும் வணங்கி அங்ஙனமே செய்த போது, ஒன்பது தீர்த்தங்களும் மற்றுமுள்ள நதிகளும், அனேக தடாகங்களுமுண்டாயின. அந்நதிகளில் ஒருமாதம் வரைக்கும் அம்பாள ஸ்நானஞ் செய்து கொண்டிருந்தனர், கையைப் பற்றிக்கொண்டு விடாமலிருந்த இலிங்கமும் நீங்கிற்று, அப்போதுதேவர்கள் போற்றும்படி மனம் சந்தோஷித்துக் கரையில்வந்து சேர்ந்தனர்.

அவ்விடத்தில் அவாங்கமனே கோசரனுகிய அவ்வுருவத் திருமேனியான சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்து என்பாவம் தீர்த்தானென்று பெயர் தரித்து, சமீபத்திலுள்ள அச்சுனைக்கு கட்கதீர்த்தமெனப் பெயரிட்டாள். அதில் மூழ்கி விபூதி தரித்து அஞ்சலி கூப்பிக் கௌதமமுனிவருடன் உள் நுழைந்து சர்வலோக சரண்யராகிய சிவபெருமானைத் தரிசித்துச் சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து எழுந்து பரவசமாகிப் பாடி யாடி மனமுருகிக் களித்து ஆனந்தக் கண்ணீர் பெருகிப் பெருமூச்செறிந்து வலமாக வந்து தன்னுடைய குறையைச் சொல்லி வணங்கி வந்தனர். கார்த்திகை மாதத்தில் சிவாகமத்தின்படி திருவிழா கொண்டாடி வணங்குகையில், மலையின்மீது ஒரு பெரும் சோதியுண்டாகி அதில் செல்லுதற்கரிய பலகோடி பாலசூரியர்கள் பிரகாசம் போல சுவாமி எழுந்தருளி, "பெண்ணே இத்திருமலையினை வலமாக வரக்கடவாய்" எனத்திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்.

இதனைக்கேட்ட அம்பாள் அங்ஙனமே கௌதம முனிவருடனே வேதகோஷ்ட முழங்கவும், பேரிகை, காகளம் சல்லரி, மல்லரி. டமருகம், துந்துமி. குடமுழா, முதலான வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்க இரண்டு கரங்களையும் சிரசின்

மீது குவித்துக்கொண்டு வலம்வர, அப்போது தெய்வலோகத்துப் பெண்கள் அம்பாள் திருவடி பூமியில் உருத்தாவண்ணம் புட்பங்களைக் குடும்பையாக வழி முழுதும் கொட்டநீராமங்கையர் சாமரமெடுத்து வீச, நாகலோகப் பெண்கள் இரத்தின தீபமேந்த, இலட்சுமியும் சரஸ்வதியும். இந்திராணியும் வழியிலிருக்கிற முன்ளுகளையும், கல்லுகளையும் எடுத்தெறிந்துவர பூமிதேவி கைகட்டித் தாங்கிவர வழியிலுள்ள சேறு உலரும்படி தேவமாதர்கள் புஷ்பங்களிலிருக்கிற தாதுக்களை எடுத்துத் தூற்றவும், கங்கையானவள் பார்வதி தாயே உனது இரண்டு பாதங்களும் நடந்து கன்றி போகிறதேயெனக் கைகூப்பி வணங்கவும் அக்கினிதிசையில் அக்கினி மலையின் முன்வந்து தொழுது, தெற்குத்திசையும், நிருதிமூலையுந் தாண்டி மேற்குத் திசையே சென்றபோது, சிவபெருமான் இடபவாகன ரூடராய்க் காக்ஷிகொடுத்தனர். பின்பு அம்பாள் மேற்குத்திசையும், வாயு திசையுந்தாண்டி ஈசானதிசையுங் கடந்து, கிழக்குத்திசை வந்தனர், அப்பொழுது பானுகம்பன் தன்னுடைய ஆயிரங் கைகளிலும் சங்கத்தை வைத்து ஊதுகிற ஒலியும், விஷ்ணு தமது சங்கத்தை வாயில் வைத்து ஊதுகிற சத்தமும், நாரதர் வீணையை வாசிக்கிற இசையும், ஆகாச துந்துமியினுடைய முழக்கமும் திசைகளெல்லாஞ் செவிடுபடச் செய்தன. தேவர்கள் புஷ்ப வருஷம் பொழிந்தனர். அச்சமயத்தில் கற்றையாகிய நீண்ட சடையில் தரிக்கப்பட்ட இளமையாகிய பிறையின் செழுமையான சந்திரிகை பிரகாசிக்கவும், ஆபரணமாகிய புற்றிலிருக்கிற சர்ப்பத்தின் தலையிலுள்ள மாணிக்கம் காந்தியை விரிக்கவும் உலகமாதாவாகிய பார்வதிக்குப் பாதிசரீரத்தைக் கொடுப்பதற்கு மத்திய அளவாகப் பிடித்த நூல் போலப் பூணுநூல் பிரகாசிக்கவும் அனேக வேதங்களினாலேயும் தேடுதற்கரிய பரமேஸ்வரன் இடப வாகனத்தில் காட்சி கொடுத்தனர்.

அம்மையாரும் தரிசித்து வணங்கி நின்றனர். சுவாமியானவர் அம்மையை நோக்கிப் "பெண்ணே நீயும், நானும் பெண்ணுமாணுமாகிய உலகத்தில் அனேக ஜீவராசிகளை வேறு வேறுண்டாக்கினோம், நீயென்றும், நானென்றும் பேதமில்லை. மரமும், அதனுள்ளிருக்கும் வைரமும் போல் ஒன்றாய்ச் சேர்ந்திருப்போம்; நம் பொருட்டு உனது தேகத்தை நீக்கி வேறு தேகமெடுத்து இமயமலையிற் பிறந்தாய். இப்போது உனது தவத்தின்படி நம்முடைய இடது பாகத்தில் நீ சேர்ந்திருக்கக்கடவாய்" என்று அம்பாளை சேர்த்து அணைத்துக் கொண்டனர். இரண்டு பேரும் ஒரு தேகமாக விளங்கினர். ஒரு பக்கத்தில் சிவந்த சடையும், ஒரு பக்கம் கொன்றை மாலையும்; ஒருபக்கம் புஷ்பமாலையும், ஒரு பக்கம் சூலமும், ஒருபக்கம் நீலோற்பல மலரும், ஒரு பக்கம் சிலம்பும் ஒருபுறம் பச்சைநிறமும். ஒரு புறம் பவளநிறமும் ஒருபுறம் கச்சணிந்த தனமும், ஒருபுறம் அழகான மார்பும், ஒருபுறம் அபயமும், ஒரு புறம் வாதமுமாகப் பொருந்திய திவ்விய வடிவினைத் தரிசித்துத் தேவனை அனைவரும் வணங்கி நின்றனர். பிரமன் விஷ்ணு முதலியோர் தரிசித்துப் பலவாறு தோத்தரித்து ஆடிப்பாடி அந்த அர்த்தநாரீச்சுரரிடத்தில் பற்பல வரங்களைப் பெற்று ஆனந்தங்கொண்டு விடைபெற்று ஏகினர்,

இடப்பாகம் பெற்ற சருக்கம் முற்றிற்று.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்

வச்சிராங்கத பாண்டியன் சருக்கம்

காலனைச் சயித்துக் கண்ணுத லருள்பெற்ற மார்க்கண்டேய முனிவரே! இன்னமும் கேட்பாயாகவென நந்திதேவர் சொல்லத் தொடங்கினர். பூவிதழ் மணக்கும் சந்தனவனத்தின் மத்தியில் சஞ்சரித்து என்றுமுள்ள தமிழின் மதுரம் அலைந்து நெடுநாள் ஆடுகின்ற மயில்போன்ற பெண்கள் நடைபோல வாடைக்காற்றோடு சம்பந்தமாகத் தென்றற் காற்று வருகின்ற வைகையாறு பொருந்திய பாண்டிநாடு ஒன்றுண்டு அறிவும் வெப்பத்தைச்செய்யும் கண்கள் இரண்டையுமுடைய பெண்கள் இடையைப் பார்த்து மின்னலென்று மயங்கி அழகு பொருந்திய வாழைகள் புட்பிக்கும் நாடு அன்றியும் மான்போன்ற மாதர்கள் கூந்தலைப்பார்த்து இருளென்று நினைத்து முல்லைசெடிகள் புட்பிக்கும் வைகையாற்றின் வளப்பம் பொருந்தியது அப்பாண்டி நாடு. அத்தகைய பாண்டிநாட்டில் ஒரு அரசனிருந்தான். அவன் தேகமுதலானவைகளால் மன்மதன்போல் அழகுள்ளவன். ஆகமமுழுவதும் தெளிந்த விவேகத்தையுடையவன்; பாகத்தில் பார்வதியையுடைய சிவபெருமான்மேல் பக்தியுடையவன் பாகுபோல் மதுரமுடைய சொற்களையுடைய மாதர்கள் விரும்பாநின்ற தோளையுடையவன் தெய்வலோகத்திலும் பூமியிலும் இமயமலையிலும் தன் கீர்த்தியை நாட்டினவன். சுவாமி தரிக்கின்ற சடைக்காட்டினிடத்தில் பிரகாசிக்கும் ஆத்திமாலையினது வர்சனையைத் தன் மனதில் நினைத்துக் கொண்டு பூமியைக் கார்க்கின்றவன். தன் குலத்திற்குத் தலைவனுகிய சந்திரனை முடியில் தரித்தநாதரது பாதங்களைத் தலை

யினால் வணங்குகிறவன் மிகுந்த நன்றியை யறிந்து அதைப் பாதுகாக்கின்றவர்களில் இவனுக்கு ஒப்பானவர் ஒருவரு மில்லை. நீண்ட பத்துத்திக்கிலும் பரவும்படி கீர்த்தியாகிய விரையை வாரி இறைக்கின்ற தன்மைபோலச் சங்கங்கள் தவழ்கின்ற கடலிற் குளித்து வாரிவந்தவர்கள் கொடுத்த முத்துக்களை வாரி இறைத்துக்கிடக்கின்ற முற்றத்தையுடை யவன். வெற்றியமைந்த அரசன் கீர்த்தியாகிய கடலில் ஓடு கின்ற கப்பலானது சூரியன் ஏறிச்செல்கின்ற தேர் கூடிய செக்கர்வானமே அக்கடலிற் படர்ந்த பவளக்கொடிகள் எட்டுதிக்கிலுமுள்ள மனிதர்களே அக்கடலிற் சஞ்சரிக்கும் நீர் மனிதரேயாம்| அசையும்பொருள், அசையாப் பொருள் களாகிய எவையும் சந்தோஷத்தையுடைய ஆதிசேஷன் தாங்கும் உலகத்தை ஆளும் தன்மையுடையவன். கச்சு அரா விய வீரகண்டாமணியைத் தரித்த காலையுடையவன், வச்சி ராங்கதன் என்னும் பெயரையுடையவன் ஒருவனிருந்தான்.

இப்பாண்டியன் ஒருநாள் வேட்டையாடும்படி மனத் திலெண்ணி யானை, குதிரை, சேனைகள் சூழக்குதிரையை நடத்திக்கொண்டு வடதிசை சென்றான். அப்போது சந்திர னைக் கண்ட இருட்கூட்டம் போலத் துதிக்கையையுடைய யானைக் கூட்டங்கள் அஞ்சியோடின. அனேக புலிக்கூட் டங்களையும் கடம்பை மிருகங்களையும், மானினங்களையும், கலைமான்களையும் வளைத்துக்கொண்டு அவைகளையெல்லாம் கொன்று வந்தனர். பின்பு தனது சேனை முழுவதும் தனக் குப் பின்விட்டுப்போக வேகமாய்க் குதிரை மேற்கொண்டு ஒரு புனுகு பூனையைத் தொடர்ந்து சென்றான். அரசனாலே துரத்தப்பட்ட அப்புனுகு பூனை வேகமாகவோடி அருணாச லத்தினை வலமாகச்சுற்றி வந்து அவ்வரசன் கண்ணெதிரே வீழ்ந்து இறைந்தது, உடனே அப்பூனை வித்தியாதரர் முதலி யோர் துதிக்கும்படி திவ்விய தேகமெடுத்து விமானத்தின் மேல் பிரகாசித்தது. வேகமாகத் தொடர்ந்து வந்து அரசன்

சன் கிழே விழவே குதிரையும் இடறி பூமியில் விழுந்து தன் தேகம் விட்டுத் திவ்விய ரூபம்பெற்று ஒரு புட்ப விமானத்திற் பிரகாசித்தது. அரசன் தவித்து நின்றனன். புனுகு பூனையும் குதிரையும் தேவவடிவு எடுத்து இருவரும் மிக்க நண்பினராய் அருவிபோலக் கண்ணிவிருந்து நீர் பெருக ஒருவருக்கொருவர் கட்டியணைத்து உச்சிமோர்ந்து சந்தோஷத்தில் முழுகினார்கள். இவர்களைக்கண்டு அரசன் இதுவென்னவென்று ஏங்கி மிக வருத்தமுற்றுக் கலங்கி நின்றனன். அப்போது அவர்களிருவரும் பாண்டியனிடம் வந்து "ஐயா! பயப்படவேண்டாம்" என்று கையமர்த்தினர். அது கண்டு அரசன் "நீங்களிருவரும் யார்? நீங்கள் மிருகங்களாகப் பிறந்திருந்ததற்குக் காரணமென்ன? அது இப்போது நீங்கியது என்னவிதம்? சொல்லுங்கள்" என்றனன்.

அப்போது ஒருவன் அரசனை நோக்கிப் "பாண்டியனே நாங்களிருவரும் வித்தியாதரர்கள். இவன்பேர் காந்திசாலி என்பெயர் கலாதரன் நாங்களிருவரும் மிகுந்த நேசராய் விளையாடிக் கொண்டிருந்தோம். மன்மதனும் அவன் சிநேகனாகிய வசந்தனும் போல ஒருவர்க்கொருவர் பிரியாமல் வாசஞ் செய்யும் காலையில் முன் செய்த ஊழ்வினை வந்தடைய மகாமேருவின் சாரலிற் போய்ச் சேர்ந்தோம் அங்குள்ள தூருவாசமுனிவரது நந்தனவனத்திற் புகுந்து அங்குள்ள சிறு புதல்களை இக்காந்திசாலி மிதித்தான். நான் அங்குள்ள புஷ்பங்களைப் பறித்தேன். அதுகண்ட தூருவாசர் கோபித்து எங்களைப் பார்த்து, ஏ பாவிகளே! சிவபெருமானுக்கென்று வைத்திருக்கும் நந்தவனத்திற் புகுந்து அநியாயஞ் செய்தீர்; நீங்களிருவரும் குதிரையாகவும் புனுகு பூனையாகவும் போகக்கடவீர் என்று சபித்தனர். நாங்கள் உடனே அவரைச் சாஷ்டாங்கமாக வணங்கி. "கிருபாமூர்த்

இயே எங்கள் சாபம் எப்போது நீங்கும்? என்று பயந்து கேட்டோம். அப்போது அவர் எங்கள் மீது கருணைவைத்துச் சொல்வாராயினர், வித்யாதாரர்களே! நீங்கள் இருவரும் திருவண்ணாமலையினை வலமாக வந்தால் சாபம் நீங்கும் அது ஒரு பாண்டியன் மூலமாக உங்களுக்குக் கிடைக்கும். பரமேஸ்வரன் மலையினை வலம்வருதல் இலேசானதல்ல. ஒரு காலத்தில் சிவபெருமான் வருணனால் கிடைத்த மாம்பழத்தை வைத்துக் கொண்டிருக்கையில் அதனை விநாயகரும் சுப்பிரமணியரும் கேட்க, இவ்வுலக முழுவதும் சுற்றி வருபவர்கட்கு இப்பழத்தைக் கொடுப்பேனென்றார். உடனே முருகக்கடவுள் மயில்வாகன மேறிக்கொண்டு சப்த சமுத்திரஞ் சூழ்ந்த பூமி முழுவதும் சுற்றி வந்தனர். விநாயகர்மலை வடிவாயுள்ள சுவாமியைச் சுற்றிவருதலே உலகமுழுவதையும் சுற்றிவருதலுக்கு ஒக்குமெனக் கிரியைப் பிரதட்சிணஞ் செய்து பழத்தை வாங்கிக்கொண்டார். சண்முகக்கடவுள் வந்து கேட்க! சுவாமி, விக்கினேச்சுரன் நம்மைக் காலாற் சுற்றிவந்தான், நீ மயிலின்மீது ஏழுலகத்தினைச் சுற்றிவரினும் அதற்குச் சமமாமோ? மலையுருவமாகிய நம்மைத் தினம் வலம் வந்தவர்கள் விஷ்ணுக்களிலும் அதிகமாவார். தேவர்கள் மலையினைப் பூசியார், அவர்கள் சுற்றி வருவதாலே மிகுந்த பூசையாம் எனத் திருவாய் மலர்ந்தருளினர். ஆகையினால் நீங்களும் அங்ஙனம் மலையைச்சுற்றி வருங்காலத்தில் பழைய உருவினை வாய்ந்திடுவீர்" என்றனர். அரசனே!

"இன்றையதினம் உன்னாலே இத்திருவண்ணாமலையினை நாங்கள் இருவரும்வலம்வந்து வித்தியாதரராகி விமானமுற்றோம் நீயும் இத்தெய்வமலையைக் காலினாற் சுற்றாமல் குதிரையின் மீது ஏறிக்கொண்டு வலம் வந்தாயாதலின் பாவத்தினை யடைந்தனர், நீ சீக்கிரம் சுவாமியின் அடியைப் பூசித்துப் பாவத்தைப் போக்கிக்கொள்வாய்? என்று இருவரும் மறைந்தனர்,



தூருவாசரிஷி சாபத்தால் காந்திசாலி கலாதரன் புனுகு பூனையாகவும் குதிரையாகவும்
; ஜனித்துய்யுங்கால் வச்சிராங்கதன் புனுகுபூனையைத் துரத்தி அண்ணுமலையை
வலம்வர ஷடி புனுகுபூனையும் குதிரையும் சாபம் நீங்கின

வச்சிராங்கத பாண்டியன் உடனே மதுரையிலுள்ள தனது குமாரனாகிய இரத்தினாங்கத பாண்டியனை அழைப்பித்து, அவனுக்கு மகுடஞ் சூட்டி மதுரைமாநகர் தன்னைப்போல் அரசாட்சி செய்யும்படி கட்டளையிட்டு, மந்திரி முதலானவர்களை அவனுடன் அனுப்பிவிட்டுத்தான் அருணாசலேச்சுரருக்குப் பலதிருப்பணி முடிப்பித்துத் திருவிழா முதலியன சிறப்பாக நடத்தித்தான் தவஞ்செய்வதற்கு கௌதமருடைய ஆசிரமத்திற்குச் சமீபத்தில் பர்ணசாலை கட்டிக்கொண்டு. பிரதிதினம் கிரிப் பிரதட்சணஞ் செய்து கொண்டிருந்தான்; ஒருநாள் அருணாசலேச்சுரர் எதிரிலே உண்ணாமுலையம்மையுடன் இடபவாகனத்திலே தோன்றி மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திரராய்க் காட்சி கொடுக்கப் பாண்டியன் உடனே "அருட்பெருங் கடலே! ஆனந்த மூர்த்தியே! அடைக்கலம், அடியேன் அறியாமற் செய்த பிழையை மன்னித்தருளவேண்டும்" என்றனன். பரமேஸ்வரன் அவனை நோக்கிப் "பாண்டியனே! "நீ பூர்வஜென்மத்தில் தேவேந்திரனாயிருந்தாய். அந்நாளில் நம்மை அலட்சியஞ் செய்து வச்சிராயுதத்தை நம்மேல் பிரயோகஞ் செய்தாய். அதனால் பூமியில் மனிதனாகப் பிறந்து துன்பமடைந்தாய், இப்போது நீ வலம்வந்து பூசித்தமையினால் தேவர்கட்கு அதிபதியாய்த் தேவலோகம் போகக்கடவாய்" என்று வரம் கொடுத்து சுவாமி மறைந்தருளினர்.

வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் முற்றிற்று.

ஓம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வல்லாள மகாராஜன் சருக்கம்

மார்க்கண்டேய முனிவரே! அப்பாற் கேட்பீராக மாணிக்கம், மரகதம், வைரம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், இந்திரநீலம் முத்து பவளமென்னும் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளும் ஆகாயத்தை அளாவி உயர்ந்து தீஞ்சுவைக் கனிகளை உதிர்க்குஞ் சொற்களும் எங்கு நிறைந்து பரிமளிக்கவும், அருந்ததிக் கொப்பான வடிவமும், கற்பும் வாய்ந்த கணிகையர்கள் வசிக்கும் திருவண்ணாமலையில் வல்லாள மகாரரஜனென்பவன் ஒருவனிருந்தான், அவன் சத்திய வாக்கியமுடையவன், சகல உயிர்களையும் தன்னுயிர்போலப் பாதுகாப்பவன். அக்கினி வமிசத்தில் உதித்தவன், சிவபெருமானுடைய உபய சரணாம்புயங்களைத் தினந்தினந் திரிகாலமும் துதிசெய்பவன், சிவாலயத் திருப்பணி செய்ய வுதித்தவன், ஒரு பொருளின் மீது இச்சையென்பதை மறந்தவன். தன் மனைவியாரை யன்றி மற்ற மாதர்களைத் தமக்கைகள் போலவும் தங்கைமார் போலவும் மனதிலெண்ணுபவன், குடிகளிடத்தில் ஆறிலொருபங்கு பகுதி வாங்குபவன், அவாங்கிசமனோ கோசாரனாகிய அருணாசலேஸ்வரரையன்றி வேறு தேவரை எண்ணாதவன், அவன் தேயத்தில் ஆணையால் புலியும் பசுவும் ஒருதுறையில் தண்ணீர் குடித்துங் கூடி விளையாடும், பிராமணர்கள் எப்போதும் வேதபுராணங்களைப் படித்துவருவார்கள்; அந்நகர் மாடவீதிதோறும் வரிசை வரிசையாய் மகா தோரணங்களும் மாவிலைத்தோரணங்களும் இடபக்கொடிகளும்

திருவண்ணாமலையை அரசாண்ட வல்லாள மகாராஜனுக்குச் சிவபெருமான் புத்திரனாகத் தோன்றி மறைந்து. ரிஷபாரூடராய் வந்து அவ்வரசனுக்குக் காக்ஷிதந்தது.

அலங்காரமாக விளங்கும். மங்கையர்கள் வாசனை கமழுஞ் சந்தனந் தெளித்து விசித்திரமான கோலமிடுவார்கள், அத்த லத்தில் மாதமும்மாரிபொழியும், வேளாண்மை என்றாளுங் குன்ருது செழித்தோங்கி விளைந்து வரும் பசியால் வருந்துப வர் அவ்வூரில் எவருமில்லை. வேண்டியவற்றை யெல் லாம் தருவார்கள். இத்தகைய சிறப்பனைத்தும் வாய்ந்த அர சன் செங்கோல் முறைப்படி யாதுங் குறைவுமில்லாமல் செழித்தோங்கி யிருக்கையில் ஒருநாள் வல்லாள மகாராஜன் தனக்குக் கருணை நிதியாகிய கண்ணுதற்பெருமான் திருவரு ளால் எல்லாச் சிறப்பும் பொருந்தியிருக்க "நாம் எடுத்தணை த்து உச்சிமோந்து முத்தமிடவும் இனிய மழலைச் சொற்க ளால் சிரவணானந்த மூறவும் பின்னர் நம் பெயரைச் சொல் லவும் பிள்ளையில்லாமல் போயிற்றே'' என்று மனம் வெதும்பி மிகவுந் துன்பமுற்ருன், தனது மந்திரிகளைப் பார்த்து "ஐயன்மீர்! ஜகதீஸனாகியும், உமாமகேஸனாகியும் அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளியிருக் கும் ஐயனாகிய ஸ்ரீ அருணாசலேசருக்குப் பேதையினாற் செய் யப்பட்ட பூசையில் ஏதேனுங் குறையுளதோ? அல்லது இவ்வுலக நீதி நடத்துவதில் மாறுபாடாகிய குற்றங்களுண் டோ? அதுவல்லாமலும் நமது பெருமானை யர்ச்சித்துப் பணியும் பொருட்டு கொய்தமலர்களிலே யாதேனுங் குறை யுண்டோ என் செய்வேன் அறியேன். இனி யான் செய்யும் விதியாது கூறுவீர்கள்'' என்ருன்.

மந்திரிகள் அரசனை நோக்கி "எங்களிறைவனே! நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளிய சகல புவ னகர்த்தாவாகியும் சர்வாந்திரியாகியும் திரிநேத்திர முடைய வராயும் அடியார்கள் இருதயத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாச லேசுரரது மேன்மை பொருந்திய கருணையில் நம்பதியை நாடிவரும் ஆதுலர் முதலிய அந்தணர்களும் இன்னும் மற் றெவர்களும் எதைக் கேட்டபோதிலும் அவைகளை இல்லை

யென்னுது அவர் மனங் களிப்புறும்படி உள்ளன்போடும் நல்குவோமாயின் சிவபெருமான் திருவருளால் புத்திரனுண் டாகும்'' என்றனர், இராஜன் மந்திரிகளைப் பார்த்து ,'அன் பர்களே! அருமறைக்கு மெட்டா அருணாசலேசுரர் எழுந்த ருளியிருக்கும் இப்பதியில் வந்தவர்கள் எந்தப் பொருளை விரும்பிக் கேட்டாலும் குறைவின்றித் தருவோம்; வாருங் கள் நற்றவர்களே என்று கரங்களை நீட்டி அழைப்பது போலும் இவ்வெல்லையுள் புகுந்த மாதர்களை கலியென்னும் பிணியணுகாமல் தரத்த ஆகாயப்பரியந்தம் அளாவி உயர்ந்த துவஜம் நாட்டி என்பெயர் எங்கணும் சிறக்கும் பொருட்டு ஏழுகடல் ஒலிகளையும் கவளிகரித்து இடி முழக்கம்போல ஒலிகாட்டும் முரசமார்ப்பச் செய்யுங்கள்'' என்றான். மந்திரி கள் ''ஐயனே! நெடிய கடல் சூழ்ந்த உலகம் எங்கும் மிகுந்த கீர்த்தியை விரியச்செய்த எங்களரசே! கேட்பீராக நான்கு வேதங்களும் ஆறுசாஸ்திரங்களும் புகழத்தக்க புண் ணிய சொரூபியாகிய சிவபெருமான் திருவடியைப் பணியும் சிவனடியார்கள் விரும்பியபடி கொடுக்கும் வல்லமை நமக் குண்டாகுமோ? என்றனர், இராஜன் ''மந்திரிமாரே உலகி லில்லாப் பொருளை யார்தான் கொடுப்பார்? என் இஷ்டப் படி துவஜத்தை நாட்டுங்கள்'' என்றனர், அங்ஙனமே மந்தி ரிகள் செய்து முடித்தனர். இந்தப் பிரகாரமாக வல்லாள மகாராஜன் கொடி நாட்டியதைக் கேள்வியுற்ற விருத்தர், பிராமணர், தபோதனர், ஜோகி, ஜங்கமர்கள், பாவாணர், யாசகர், முதலிய யாவரும் கூட்டம் கூட்டமாய் வந்து தங் கள் தங்கள் வறுமை நீங்கிக் குறைவின்றி வாழ்ந்தார்கள்.

விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆவலோ டும் அரசனை நாடிவந்து கேட்டவர்கள் மனம் திருப்தியடை யும்படி ஆயிரமாயிரமாகப் பொன் கொடுத்துப் பின்னர் ஆபரணாதி வீடு முதலிய யாவுங் கொதுவை வைத்து மீட்டுக் கொள்வதற்கு ஏதுவில்லாமல் மூழ்கிப் போகின்றன எங்கள்

கோவே! தேவரீர் அவற்றை மீட்கும் பொருட்டுத் திருவருள் சுரப்பீராயின் மிக்க புண்ணியமாமென்று பணிந்து வினவியவர்களுக்கிரங்கி அந்தக்ஷணமே இரண்டாயிரம் பொன் கொடுத்து அவர்கள் மனம் மகிழச் செய்வித்தும், அதன் பின்பு பிராமணர்கள் வந்து ஆசீர்வதித்து, மகாராஜனே உபநயனம் நடத்த வேண்டியிருக்கிறதென்று அறிவிப்பார்களாயின் அவர்களுக்கு முன்னூறு பொன் கோடுத்தும் சிவாலயங்கள் மண்டபங்கள் மதில்கள் முதலிய திருப்பணிகள் முதலியவைகட்கு இருபதினுயிரம் பொன் கொடுத்தும்; கண்ணில்லாதவர்கட்கும் கரசரணுதிகள் அற்றவர்கட்கும் ஆபத்து நேர்ந்தவர்கட்கும் ஆதுலர்கட்கும் பிணியால் மெலிந்தவர்கட்கும் உதவிசெய்து வந்தனன். இவை அனைத்தையும் நாரதமுனிவர் கேள்வியுற்று வல்லாள மகாராஜனிடம் வந்தனர். அரசன் கண்டு உடனே சிம்மாதனத்தை விட்டு எழுந்து எதிர்வந்து வணங்கி, எனது மாதவமே! புண்ணியப்பொருளே! என்று தோத்தரித்து அழைத்து வந்து பொற் சிம்மாசனத்தில் எழுந்தருள்செய்து "ஐயனே! தேவரீர் இவ்விடத்தில் அடியேனை மதித்து எழுந்தருளியது என்ன காரணம்" என்றனர்.

அப்போது நாரதமுனிவர் அரசனே! நீ செய்யும் தான தருமங்களைக் கேள்வியுற்று வந்தேன், என்ன காரணத்தின் பொருட்டு இங்ஙனம் செய்து வருகிறீர் என்றனர். இராஜன் மகாதபோதனராகிய முனிவரே! எனக்குப் பின்பு எனது இராஜாங்கத்தை அரசாட்சி செய்யவும், என்பெயரை சொல்லவும் ஒரு புத்திரனை பெறவேண்டி இத்தகைய தருமங்களை நடத்தி வருகிறேன்" என்றனன், நாரதர் கேட்டு" இராஜாதிராஜனே! உலகில் முப்பத்திரண்டு தருமங்களையும் தவருது நடத்துபவர் விரும்பிய எல்லாவற்றையும் அடைவர் ஆகையால் நமது ஸ்ரீ அருணசலேசுரர் அருட்பிரசாதத்தால் உனக்

கும் புத்திரப்பேறு உண்டாகும் என ஆசீர்வதித்து விடை பெற்றுச் சென்றனர்;

வல்லாள மகாராஜனுடைய நன்மார்க்கத்தையும்; தரும பரிபாலனத்தையும். திருக்கையிலாயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகண்ட பரமசிவப்பிரபுவினிடத்தில் தெரிவிக்கும்படி சென்று, உபயசம்புவாகிய நந்தி எம்பெருமானை வணங்கி விடை பெற்று, தேவர்களும் முனிவர்களும் சூழும்படி உமாபிராட்டியாருடனே எழுந்தருளியிருக்கும் மகாதேவனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து 'தேவாதி தேவனே! நமஸ்காரம் நமஸ்காரம்; பூலோகத்தில் அருணையம் பதியிலே வல்லாள மகாராஜனென்பவன் தனக்கு ஒரு புதல்வனை விரும்பி எப்பொருளை யாவர் கேட்பினும் அவர்கள் திருப்தியடையும்படி தருகிறேன் என்று கொடிப்பறை சாற்றியிருக்கிறன் அவன் நன்மார்க்கம் வளரும்படி செய்பவன், சத்தியத்தைக் காப்பாற்றுபவன், செங்கோல் விதி பிசகாதவன் பாவமென்னும் இருளைப்போக்கும் சூரியன் போன்றவன், மன்னுயிரைத் தன்னுயிரைப்போல் காப்பாற்றுபவன், நாரதர் திருவடி மொழியினைச் சிவபெருமான் கேட்டு. அவ்வரசன் உண்மையை நாம் கண்டறிவோமென்று தேவர்களையெல்லாம் அவரவர்களிருப்பிடம் அனுப்பிவிட்டு, குபேரனை அழைப்பித்துச் சொல்லுவாராயினர், "அளகாபுரித் தலைவனே! நாம் அருணாசலத்தில் வல்லாள மகாராஜன் மனதினைச் சோதிக்க வேண்டும்; நீ அளவிரந்த திரவியத்துடன் என்னுடன் வருவாய்" என்று அழைத்துக் கொண்டு மற்றைய சிவகணங்கள் முழுவதும் பண்டாரங்களாகத் தன்னைச் சூழ்ந்து வர திருவண்ணாமலையை அடைந்து மாடவீதியிற் சென்று அடியாருடன் கூக்குரலிட ஆரம்பித்தார்.

இத்தலத்திலே கற்பினிற் சிறந்த அருந்ததியை ஒத்துக் கணவனையே தெய்வமெனப் பாவிக்கும் தாய்மார்கள் ஒருவருமில்லையா? அழகிய பெருமை தங்கிய வாய்மைகள் வாய்

ர்த மாந்தரில்லையா? அடியார்கள் பசிவேளை யறிந்து அன்னங் கொடுப்பாரில்லையா? மனுநீதியோடுங் கூடிய அரசர்களில்லையா? எங்களை அழைத்துக் கொண்டுபோய் அன்னம் பாலிப்பாரில்லையா? செம்பொன் அளித்தாலும் விரும்போம் இரத்தினங்களிழைத்த ஆபரண மீந்தாலும் விரும்போம் முத்துமாலைகள் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளோம் அரசர் செங்கோலைக் கொடுத்தாலும் வேண்டாம்; அறுசுவை கூடி அன்னமளித்தால் உண்போம். எனச் சொல்லிக் கொண்டே தாசி வீதியினில் வந்தனர். அவ்வீதியில் மேகத்தை ஒத்த கூந்தலினையும், மூன்றும் பிறை ஒத்தநெற்றியினையும், கரும்பு வில்லினையொத்த புருவத்தினையும், நீலோற்பலமொத்த விழிகளையும், எட்பூவினை யொத்த மூக்கினையும், வள்ளப்பூவையொத்த செவிகளையும் குருசப்பூவையொத்த வாயினையும், முத்துக்களை யொத்த பல் வரிசைகளையும், கோவை பழத்தினை யொத்த உதடுகளையும், கண்ணுடியை ஒத்த தாடையினையும், சங்கையொத்த கழுத்தினையும், மூங்கிலையொத்த புயங்களையும், பொற்கவசத்தை ஒத்த தனங்களையும், ஆலிலை ஒத்த வயிற்றினையும், வாழைத்தண்டை ஒத்த துடைகளையும், ஆமை முதுகை ஒத்த பறடுகளையுமுடைய அதிருபலாவண்யமான தாசிகளைக் கண்டு, பெண்களே! இன்று இரவு விடியுமளவும் இப்பண்டாரங்களுடனிருந்து, மன்மதன் கணையின் வலியைத் தடுத்தோட்டும் பொருட்டுப் பரியமாகக் கேட்கும் பொன் எவ்வளவென்று அப்பண்டாரங்களுள் தலைமை பூண்ட கைலாச பண்டாரம் கேட்க, அதற்கு அம்மாதர்கள். ஐயா பண்டாரங்களே நாங்கள் பொய்வார்த்தைகளை பேசோம். வஞ்சகமாகிய துரோக சிந்தனை கருதோம், ஓரிரவு முழுவதும் உங்களுடனிருக்க ஒவ்வொரு பெண்ணுக்கு ஆயிரம்பொன் பெறுதல் எங்கள் நியமம் என்றனர்.

கைலாசபண்டாரம் அதற்குச் சம்மதித்து அப்பெண்களின் பெயர்களை ஒன்றொன்றாய்க் கேட்டு காமாட்சி யிடத்

தில் ஏகாம்பர பண்டாரத்தையும், மீனாட்சியிடத்தில் சொக்கலிங்க பண்டாரத்தையும், விசாலாட்சியிடத்தில் விசுவநாத பண்டாரத்தையும், சிவகாமியிடத்தில் நடராஜ பண்டாரத்தையும், வடிவாம்பிகை யிடத்தில் தியாகராஜ பண்டாரத்தையும், கற்பகவல்லியிடத்தில் கபாலி பண்டாரத்தையும், கொடியிடை யிடத்தில் மாசிலாமணி பண்டாரத்தையும், விருத்தாம்பிகையிடத்தில் பழமலை பண்டாரத்தையும், தைய நாயகியிடத்தில் வைத்தியநாத பண்டாரத்தையும், திரிபுரசுந்தரியிடத்தில் வேதாசல பண்டாரத்தையும், உண்ணாமலை யிடத்தில் அண்ணாமலை பண்டாரத்தையும், உமாதேவியிடத்தில் மஹேஸ்வர பண்டாரத்தையும், தெய்வயானை யிடத்தில் முருக பண்டாரத்தையும், இங்ஙனமே எல்லா பண்டாரங்களையும் எல்லாக் கன்னிகைமார்களிடத்தும் நியமித்துவிட்டு, பொழுது விடியுமளவும் நீங்காதீர்களென்று கண்சாடையினாற் றெரிவித்து மிகவும் கட்டுப்பாடாக அக்கணிகை மாதர்கள் வாழும் வீதியெல்லாம் ஆண்டிகளாகவே இருக்கும்படி செய்து விலைமாதர்களைத் தனித்து எங்கும் கிடைக்காது அரிதாகச்செய்து சீடனாகிய குபேர பண்டாரத்துடன் கைலாச பண்டாரம் வல்லாள மகாராஜன் அரண்மனையை நெருங்கிய மாத்திரத்தில், அரசன் ஓடோடி எதிர்வந்து பணிந்துபோற்றி அழைத்துக் கொண்டுபோய் ஒரு சிங்காசனத்தில் எழுந்தருளச்செய்து சமீபத்தில் அஞ்சலியஸ்தனாய் நின்று "தமியேன் செய்த தவப்பயனோ? அல்லது ஸ்ரீ அருணாசலநாதர் வாழும் இவ்வருணையம்பதியில் எளியேனாற் செய்யப்பட்ட கிரியைகளின் புண்ணியமோ? பரமசிவத்தை போலெழுந்த சங்கமதேவரின் பிரகாசம் பொருந்திய தங்கமயமாகிய உபசரண கமலங்கள் வருத்தமுறும்படி இங்ஙனம் அருள் சுரந்தது யாதோ? அவற்றைத் திருவாய் மலர்ந்தருளினால் அத்தன்மையாய் அடியேன் நடத்திக் கண்ணியனாவன், அதல்லாமலும், தேவரீர் கருணாகடாட்சத்தாலும், தோய்வே' னென்றான்.

அதுகேட்ட சங்கமர், "இராஜனே! உன் அரசும், செங்கோல் முறைமையும் நீடூழிகாலம் வாழக்கடவது; இப்போது உம்மையாம் வேண்டி வந்த காரணம் யாதெனில், உருவிலியாகிய மன்மதனுலெய்யும் முல்லை, அசோகு, நீலோற்பலம் மாம்பூ, தாமரை மலரென்று சொல்லப்பட்ட ஐந்து கணைகளினுலும் இன்று யாம் படுந்துன்பத்தை நீக்கும் பொருட்டு ஒருமாதை எனக்கு கிட்டும்படி செய்வாயானுல் உன் கீர்த்தி ஏழுகடல் சூழ்ந்த இவ்வையகத்தில் பிரகாசிக்கும் என்ருர்.

அதற்கு இராஜன், "சுவாமி! இவ்வாறு பாமாதரை இச்சித்துத் திரிவதைப் பார்க்கிலும் எக்காலமும் தேவரீரை விட்டகலாமல் இருக்கும்படி சிறப்போங்கிய மணம்செய்து வைக்கிறேன்' என்று மிகுபத்தியம் பரிவுகொண்டு உரைக்க சங்கமர் இராஜனே! நீ இப்போது சொல்லிய வார்த்தை கொடிய துன்பத்திற் கிடமாயும், சுடர்முன் மெழுகுபோல மனம் ஒழுங்குபடாமல் பலவித கோலங்களை உண்டுபண்ணி அலையச்செய்யும். அதுவல்லாமல் பஞ்சேந்திரியங்களுந் தடுமாறிக் காமவெகுளி மயக்கத்தால் நாவறட்சி செய்யும் சுகம் பிணியைப் போக்கும் ஔடதம் விலைமின்னுர்களுக்கு கைவல்யப்பட்டதேயன்றி, இதரமான மாதரறியார்கள். ஆதலால் அவரால் என் பிணியை மாற்றுவிப்பாய்" என்று கூறினன். இல்வாழ்க்கையைக் கடந்து சதா நிஷ்டை செய்யும் தபோதனர்களுக்கும் ஞானுேபதேசம் செய்விக்கும் மகிமை பொருந்திய சங்கமரே! உமது கருத்தின்படியே நடத்துகிறேனென்று அரசன் அங்குள்ள காவற்காரரை அழைத்து நீங்கள் அதிசீக்கிரமாய் கணிகைமாதர்கள் வாழும் வீதியிற் சென்று அதிருபலாவண்யமுள்ள ஒரு மாதை அழைத்து வாருங்களென்று விடைதர அதிவேகமாய்க் காவலர்கள் சென்று விலைமாதர்கள் வாழும் வீதிகளில் மனைதோறும் புகுந்து புகுந்து பார்த்து வருகையில். ஒரு வீடாகிலும் நீங்

தாமல் சுரலய தாளத்தோடு உகந்த பரதநாட்டியங்கள் வீணைகான சங்கீத முழக்கத்தோடும் பொன்னிறம் போன்ற கொன்றைமாலையைச் சூடிய சிவனடியார்கள் வீடுகள் தோறும் தனித்தனியாயிருந்து ஆனந்தித்துக் கொண்டிருக்கும் சம்பிரமங்களைக் கண்டு, இன்று முடியாதென்று கருதி னவராய் அரசனிடம் அறிவிக்க. அரசன் கோபித்துத் தன் மந்திரிமார்களை நோக்கி, பரமசிவத்தின் அடியவராகிய சங்கமருக்கு உரைத்த மொழி பிரண்டுபோவது ஜகதீசனுகிய ஸ்ரீ அருணாசலேசுரர் திருவுளச் செயலோ! அல்லது நாம் ஆண்டவனுக்குச் செய்த பூசையின் குறைவோ! என் செய்வேன்! "சங்கமர் நம்மை நாடிக்கேட்ட மாதர் கிடைப்பது அரிதென்று அவர்முன் நாம் புகலுவது தருமமோ" என்றனன்.

அதனைக்கேட்ட மந்திரிகள் அரசனைப் பார்த்து, ஓ அரசனே! தாங்கள் மனத்தில் கவலை கொள்ளவேண்டாம்; யாங்கள் சென்று அடியவர் எண்ணிய வண்ணம் அதிரூபலாவண்யமுள்ள கணிகை மாதைக் கொண்டு வருவோம் தாங்கள் துன்பமொழிக" என்று சொல்லிக் கணிகை மாதர் வாழும் பேட்டையாகிய வீதிகளிற் சென்று மனைகளிற் புகுந்து பார்க்கையில் எங்கும் சிவனடியார்களாய் விளங்கியிருப்பதைப் பார்த்தும், சுகந்த பரிமளங்களை அணிந்திருக்கும் விலைமாதர்களை நோக்கி, "பெண்களே! இவ்வீதியில் யாராலும் ஒருமாது எங்கள் இறைவனை நாடிவந்த சங்கமர் காமநோயைத் தணிப்பாரேயானால், அவர் இருகரங்களுக்கும் கடகமும், வைரமணிகளாலமைந்த ஆபரணங்களும், முத்துமாலைகளும், பாதச்சிலம்பு முதலியன அணிவதன்றாமல் நெய், பால், தயிர், அறுசுவை, பதார்த்தங்களோடு அமுதுண்டு சதாகாலமும் யாதும் குறைவின்றி வாழும்படி செய்வோம்'; என்றனர்.

கணிகை மாதர்கள் பணிந்து, "ஐயனே நாங்கள் யாவரும் இன்று பகற்போதே நம்மையாட் கொள்ளும் ஸ்ரீ அருணாசலருடைய உண்மையடியார்களாகிய அன்பர்களிடம் இன்றிரவு விடியுமளவும் சுகலீலைகளுக்கிணங்கி நடப்பதாய் பொன்னைப் பெற்றுக் கொண்டோம், ஆதலால், இந்நாள் செல்லுமாகுல் தேவரீர் சொல்லிபடி நடக்கலாம்' என்று

மொழிந்ததனைக்கேட்ட மந்திரிகள், தத்தம் மனஞ்சலித்து அவ்விடம் விட்டு நீங்கி அரசனிடம் வந்துரைக்க, அரசன் " அற்பமாகிய இச்செய்கை நமக்குக் கிடைப்பது துர்ப்பல மாக விருக்கும் காரணம் யாது? ஐயோ! என்று துன்பம டைந்து பின்பு பலவிதமாய் மனதில் ஏக்கங்கொண்டு இது வும் பரமசிவனுடைய திருவிளையாடல்தானோ, சங்கமர் எண்ணிய வண்ணம் தருவேனென்று தானே விலைமாதர் வீதி சென்று நம்பதியை நாடிவந்தார்கள் எந்தப்பொருளை நாடிக் கேட்ட போதிலும் கொடுக்கிறோம், என்று ஆகாய பரியந்தம் உயர்ந்து பறக்கும்படியாகத் துவசமுயர்த்தி நடத்திவரும் நாட்களில் இன்று விரகவேதனையால் மெலிந்து நம்மை நாடிவந்த சங்கமர் நோயை யகற்றுவோமென்று கூறியவண்ணம் மாருது ஆசையோடுங் காப்பாற்றும் கணி கைக்கு என் அரசுக்குரிய இப்பதியையளிப்பேன். யானை; குதிரை முதலியவைகளோடும் வேண்டிய பொன்னுந் தரு வேன்; இதல்லாமல் முத்தினால் செய்த பல்லக்குங் கொடுப் பேன்; இப்பூமண்டல முழுவதும் ஆள நினைத்த போதிலும் என் செங்கோலைக் கொடுத்து ஆளும்படி செய்து அவர் கட்கு யான் பணிவிடையும் செய்வேன் சங்கமரது காம நோயைத் தணித்தால் அவர் என்னைப்பெற்ற அன்னையுமா வார்கள். இவ்வுலகில் வழங்கும் இன்பர்களுக்கெல்லாம் மே லாகிய பெண்களின் கலவித்தொழிலில் வரும் இன்பமே அதிகமென்று வேதநூல் உணர்ந்தவர்கள் கூறி யிருக்கிறார் கள். ஆதலால் நமது பதியை நாடிவந்த மேன்மை பொருந் திய சங்கமரை வருத்தும் விரகவேதனையை இன்று மாற்றின வர்கட்கு என் பிராணனைத் தானமாக கேட்டபோதிலும் அளிப்பேன் கணிகை மாதர்களே வருவீரென்றனர்.

அரசன் சொன்ன மொழிகளைக்கேட்ட விலைமாதர்கள் " இராஜாதி ராஜனே! தேவரீர் ஆக்கினையின்படி நடந்து வரும் நாங்கள் இன்று பரமசிவத்தின் அடியார்களிடத்தில் கலவித்தொழில் புரியும் பொருட்டுப் பொருள் பெற்றுக்

கொண்டோம் ஆதலால் நாங்கள் என் செய்வோம்?'' என்றனர். இராஜன் நாணமுற்றவனாய்த் தன் அரண்மனையடைந்து முகம் வேறுபட்டு இருப்பதை அவன் தேவிமார்கள் மல்லமாதேவியும், சல்லமாதேவியும் நெருங்கிவந்து ''எங்கள் காதலனே! எந்நாளுமில்லாது இன்று மனத்தில் துன்பம் நேர்ந்தவாறு என்ன? அதனைத் தேவரீர் அருளிச்செய்ய வேண்டும்'' என்று பணிந்து கேட்க அரசன் சொல்லலானான். ''என் அருமைப் பத்தினிமார்களே! இன்று ஒரு சிவனடியார் மடைர்தையர்மயக்கத்தின்மேல் மனம்வைத்து நம் பதியைச்சேர்ந்து நம்மை வினவிய வண்ணம் இசைந்து விலைமாதர்கள் வீதி எங்கேனும் தேடியும் கிடைப்பது அரிதாயிருப்பதால் துன்பமுற்றேன். நான் கொண்டிருந்த வைராக்கியத்தையும் துறந்துவிட்டேன். என் செய்வேன்! அடியவர் உரைத்தமொழி தப்பிப்போகின்றதே' என்று சொன்ன வார்த்தையைக் கேட்ட மங்கைமார், ''காதலனே! விரக வேதனையால் மெலிந்து வந்த சங்கமருக்கு அந்நோயைத் தணியச்செய்கிறேன்'' என்று தாங்கள் வாக்குதத்தம் செய்துவிட்டீர். தங்களுடைய கருத்து எத்தன்மையதோ சிறியேங்களறியோம். ஆதலால் எங்கள் இருவர்களில் சிறியவளாகிய என்னை அவ்வடியார்க்கு இசையும்படியாய் கருத்திருக்குமானால் தேவரீர் எண்ணம் குறைவுபடாமல் அவ்விதமாக நடக்கின்றேன் என்று கூறியபோது அரசன் மனமகிழ்ந்து தனது மனைவியைப் பார்த்து, ''பெண்ணரசியே, என் எண்ணத்தை நிறைவேற்றி வைத்த என் கண்மணியே! நம்மை நாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற்சேர்ந்து மன்மதனால் படுந்துன்பத்தைப் போக்குவாய்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு, அரசன் சங்கமரிடம் வந்து ஐயனே! தேவரீர் கருத்தின்படி அமைத்தேன் அங்கீகரித்துக் கொள்ளும் என்றுபக்தியோடும் கூறினான்,

சல்லமாதேவி மஞ்சனமாடி ஆடையாபரண மணிந்து, சுகந்த பரிமளங்களை யணிந்து பஞ்சகச்சாயவர்க்கங்களேந்தி வீணை எடுத்துப் பள்ளியறையுட் பிரவேசித்து, இந்திரநீல மரகதங்களால் அமைந்த அம்ச தூளிகா மஞ்சன சயனத்தின் மீது ஆரோகணித்துக் கொண்டிருக்கும் அடியவர் பக்கத்தில் நின்று இன்னோசையைத் தரும் வீணையை மீட்டிக் கீதம் பாடிக்கொண்டு, சிலநேரம் சென்றபின்பு பெரியவர் சித்திரப் பிரதமை போல் அசைவற்றிருப்பதை நோக்கி, அவர் யோகநித்திரையிலிருப்பதாக வெண்ணி, அவ்வரசி அவர்மீது பனிநீரை எடுத்து தெளித்தும் அவர் கண்விழியாமலும் தன்னை நோக்காமலும் இருப்பதை உணர்ந்து தேவி சிந்தை மெலிந்து, எங்கள் அரசனுக்கு உரைத்த வாய்மை வீணாகிவிடுவது தருமமோ? ஐயோ! அருணாசலநாதா! என்று தொழுது நித்திரையிலிருக்கும் பெரியவர்மேல் மெதுவாய்ச் சாய்ந்து ஆலிங்கனம் செய்கையில், அச்சிவனடியார் கையிலேந்தும் குழந்தை வடிவாகி ஆச்சரியம் கொள்ளும்படி செங்குமுதம்போன்ற வாயைத்திறந்து அழ வாரம்பித்தார்.

இவ்வழுகையைக்கேட்ட அரசன் இது ஸ்ரீ அருணாசலேஸ்வரன் திருவிளையாட்டென்று உணர்ந்து வெகு தீவிரமாய் உள்ளே சென்று அக்குழந்தையை இருகரங்களால் எடுத்தணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து பேரானந்தங்கொண்டு இருக்கையில் அடியார் மாயமாய் மறைந்தருளினர். அரசன் ஆச்சரியமடைந்து, சந்திர சடாதர மூர்த்தியாகிய ஐயனே! தேவரீர் திருவுளச்செயல் மடமையோராகிய நாங்கள் தெரிந்து கொள்ளுவோமோ! நீர்க்கமற்றவனே! நிர்மலகுணனே! உலகநாயகனே! ஜெகதீசா! சிவப்பிரகாசா! அரகரா! அண்ணாமலைநாதா! உண்ணாமலைப்பாகா! ஜடாமகுடத்தில் இளம்பிறையும் கங்கையும் தரித்த சோதி சொரூபா! காளகண்ட திரிநேத்திரா! கருதுமடியவர் தோத்திரா! மான்மழு

சூலகபால! மறைபுகழ்சீலா! காமதகனா! முயலக மர்த்தனா! மறையுருவானவனே! பரிசுத்தனே! காலாந்தகனே! புலித் தோலுடையானே! திரிபுரமெரித்தோனே! நாகபரணனே! சிரமாலை தரித்தோனே! மார்க்கசகாயா! மாதர்க்கனுகூலா! கங்காதரா! கிருபாகரா! மகானுபாவா! ஆபத்பாந்தவா! அனு தரட்சகா! மெய்ஞ்ஞானச்சுடரே! உமது பரியந்தம் பொருந் திய உபயசரணாரவிந்தங்கட்குத் தொண்டனாகிய எளியேங் களைச் சோதனை செய்யும் பொருட்டோ புதல்வனாகத் தோன்றி மறைந்தீர். எங்களுக்கு இனியென்னவிதி என்று தமது மனைவிமாரும் தாமும் துன்பத்திலழுந்த, பரமசிவம் மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திருநேத்திர சொருபமாய் பார்வதி சமேதனாய் இடபவாகனரூடராய் பிரமவிஷ்ணுக்கள் சூழ, அரசனுக்கும் அவன் மனைவிமார்கட்கும் தரிசனம்தர அரசன் பூமியிற் பணிந்து எழுந்து சிரத்தில் இருகரங்களையும் குவித்து; அருணாசலநாதனே! சரணம்! ஆதிநாயகனே! சர ணம்! அடியார்களை சோதித்தாட்கொள்ளும் பூரணனே' சரணம்; அருட்பெரும்சுடரே! சரணம்; அமலனே! சரணம் ஐயனே சரணம்; ஆண்டவா! சரணம்; அடியோம் செங் கோலை ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு புதல்வனைத் தந்தருள வேண்டும் எனத் தொழுது நின்றான்." அரசே யாமே உனக் குப்பிள்ளையாய் தோன்றினமையால் உன் அந்திய காலத்தில் வேதவிதியிற்கூறும் சடங்குகளைச் செய்துவருவோம் என்று திருவாய் மலர்ந்தருளிச் சந்திரசடாதர மூர்த்தியாகிய ஸ்ரீ அரு ணாசலேசுரர் மறைந்தருளினர்.

வல்லாள மகாராஜன் சருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

தீர்த்தச் சருக்கம்

ஒரு காலத்தில் கௌதமரிஷி ஸ்ரீ அருணாசலேஸ்வரர் சந்நிதிமுன் வேள்வியொன்று செய்வதற்கு எத்தனித்து அக்கினி வளர்க்க, அந்த யாகத்தில் சிவபெருமான் கிருபையால் ஒரு சிவவேதியன் அக்கினி சொரூபம்போல் உதித்தனன். அவனை முனிவர் பார்த்து, ஸ்ரீ அருணாசலநாதரைப் பூஜைசெய் என்று அனுப்பினர், அதன்பின் கௌதமர் ஏழு தருப்பையை எடுத்துக் குண்டத்தின் அக்கினியிலே போட, ஏழுபெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள். அவர்களைச் சுவாமி சந்நிதியில் நாட்டியஞ்செய்து வாழும்படி முனிவர் கட்டளையிட்டனர். அவர்கள் தடாகங்கள் பலவுண்டாக்கி ஊரைச் சிறப்புசெய்தனர்.

திருவண்ணாமலையாகிய அக்கினிமலைக்குக் கிழக்கு திக்கில் இந்திர தீர்த்தம் ஒன்றுண்டு. அது இந்திரனால் உண்டாக்கப்பட்டது. தேவலோகத்தில் உள்ளவர்கள் அதில் நித்தியமும் முழுகுதலால் அதில் சந்தனக்குழம்பின் வாசனையும் கற்பகபுட்பத்தின்மணமும் மணக்கும், இத்தீர்த்தத்தில் தைப்பூசம் ஸ்நானம் செய்து ஒரு கை ஜலம் ஆசமனம் செய்தால் கோடி பிரம்ஹத்திதோஷம் போகும், இந்திரன் அதில்மூழ்கிச் சூரியனுள்ளம் வசித்து தெய்வலோகத்தை பெற்றான்.

திருவண்ணாமலைக்குத் தென்கிழக்கில் அக்கினி தீர்த்தம் ஒன்றுண்டு, அதில் பங்குனிமீ பௌர்ணமியில் மூழ்கினால்

மாதர்களால் நேர்ந்த பாவந்தீரும் தருமமும் தலமும் சேரும்; அக்கினிதேவன் ஒருநாள் ஏழு முனிவர்களுடைய பத்தினி மார்களைவிரும்ப, அதைதன் பெண்சாதியாகிய சுவர்காதேவி யறிந்து அந்தமாதர்கள் வடிவங்களைத் தான் எடுக்க அக்கினி பகவான் அவர்களைப் புணர்ந்து அங்ஙனம் தான் நினைத்த பாவமதைத் தீர்க்க இத்தடாகத்தை உண்டாக்கித் தன் பாவத்தைப் போக்கடித்துக் கொண்டான்,

திருவண்ணாமலைக்கு தென் பக்கத்தில் யமதீர்த்தம் ஒன்றுண்டு, அதில் மூழ்கினால் உடல் பொன்வடிவமாகும்; தேகத்திலுள்ளவ்யாதிபோம். பிர்மாவினது ஆயுதம் ஒருகாலத்தில் தொடர்ந்து தேகங்குன்றினதை யமனானவன் இதில் மூழ்கித் தீர்த்துக்கொண்டான்.

திருவண்ணாமலைக்கு நிருதி மூலையில் நிருதி தீர்த்தம் ஒன்றுண்டு அதில் மூழ்கினவர்கட்கு அரிய பகைகளெல்லாந் தீரும், நிருதி என்பவன் இதில் முழுகி ஒரு பேயைத் தன் வசமாக்கிக் கொண்டான்,

திருவண்ணாமலைக்கு மேற்குத் திக்கில் வருண தீர்த்தம் ஒன்றுண்டு இதில் முழுகினால் ஒன்பது கிரகங்களும் நன்மையைக் கொடுக்கும் இந்த நவக்கிரகங்களும் தங்களிஷ்டத்தை யடைய மூழ்கினார்கள்.

திருவண்ணாமலைக்கு வாயு திக்கில் வாயு தீர்த்தம் ஒன்றுண்டு, இதில் மூழ்கினால் எல்லாத் துன்பங்களும் தீரும்.

திருவண்ணாமலைக்கு வடக்குத் திக்கில் குபேர தீர்த்தம் ஒன்றுண்டு. இதில் மூழ்கினால் தரித்திரம் நீங்கிப்போகும்.

இந்தத் தீர்த்தத்திற்கு ஈஸாநியதிசையில் அசுவனி தீர்த்தம் ஒன்றுண்டு. அதில் முழுகினால் நீசரைப் பார்க்கிலும் அழிந்தவராக விருந்தாலும் நான்கு வருணத்திலும்மேம் பட்டவராவர்.

யமதீர்த்தத்துக்குத் தெற்காக அகஸ்திய முனிவரால் ஏற்படுத்திய அகத்திய தீர்த்தம் என்று ஒன்றுண்டு. அதில் புரட்டாசி மாதத்தில் முழுகி ஒருகை ஜலம் உட்கொண்ட பேர்களுடைய சந்திரனை யொத்த முகத்தைப் பார்த்தவர்கள் தமிழில் சிறந்தவராவார்கள் இலட்சுமியும் சரஸ்வதியும் அவரிடத்தில் சேர்ந்திருப்பார்கள்.



திருவண்ணாமலை எட்டுத்திக்குகளிலும் பார்வதி முதல் பலதேவர்களாலும்
உண்டாக்கப்பட்ட அநேக தீர்த்தங்களின் மகாத்மியம் இப்போது
சில தீர்த்தங்கள் மாத்திரம் காணப்படுகின்றன.

குபேர தீர்த்தத்திற்கு அருகே வசிட்ட தீர்த்தம் ஒன்றுண்டு. இதில் வசிட்டர் ஐப்பசிமாதத்தில் முழுகி, முனிவர்களுக்கெல்லாம் முதன்மையா யிருக்கப் பெற்றார். இதில் முழுகினால் சாத்திரங்களெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும் பாலவாகிய கடலையுங் கடப்பார்கள். சுப்பிரமணியர், விநாயகர், சூரியன், பார்வதி, வயிரவர், சத்தகன்னிகள், சந்திரன், அஷ்டவசுக்கள் மற்றுமுள்ள தேவர்கள் முழுகிய தீர்த்தங்கள் அனேகமுண்டு.

திருநதி என்ற ஒருநதி திருவண்ணாமலை வடக்கு பக்கத்தில் உண்டு. இலட்சுமி முழுகி விட்டுணுவினுடைய மார்பில் சேர்ந்தாள்.

திருவண்ணாமலைக்குத் தென்பாரிசம் சோணை என ஒரு நதி உண்டு. இதில் கங்கை யமுனை காவேரி முதலிய நதிகள் முழுகித் தங்கள் துன்பங்களைப் போக்கிக் கொண்டன.

திருவண்ணாமலைக்கு மேற்பக்கத்தில் புண்ணியநதி என்று ஒன்றுண்டு, இதனருகில் புண்ணியபாற்றூர் என ஒரு நகரமுண்டு. இதையாண்ட ஈழனென்கிற அரக்கன் தனக்கு நீங்காது பந்தமடைந்த பெண்ணுருவை அந்நதியில் முழுகி தீர்ந்து நல்ல உருவமும், வேண்டிய பேறும் பெற்றான்,

இந்நதிக்கு வடப்பாகத்தில் சேயாறு என ஒரு தீர்த்தமுண்டு. இது சுப்பிரமணியப் பெருமானால் உண்டாக்கப் பட்டது.

ஸ்ரீ அருணாசலேஸ்வர ராலயத்தில் சிவகங்கை என்றொரு தீர்த்தமுண்டு. இதனைத் தினந்தோறும் மனத்தில் நினைத்தால் கங்கையில் முழுகிய பலனுண்டாகும். அனேக உருத்திரர்கள் மாசி மாதத்தில் ஸ்நானஞ் செய்து இடபவாகனருடராய் எல்லாத்தேவர்களிலும் மேன்மை பெற்றார்கள்

சிவகங்கைக்கு கிழக்கில் சக்ரதீர்த்தம் என ஒன்றுண்டு. விட்டுணுமூர்த்தி தன் துவராக அவதாரத்தில் முழுகிப் பேறு பெற்றதாகும்! இந்தத் தீர்த்தத்தை வலமாக வந்தவர்களும் அதில் முழுகினவர்களும். இந்நீரை உட்கொண்டவர்களும் துக்க சமுத்திரத்தினின்றும் நீங்கி இறைவன் இரண்டு பாதங்களையும் இடப்பாகமும் பெறுவார்கள்.

திருக்கோயிலுக்குப் பக்கத்தில் அக்கினி திசையில் பிரம தீர்த்தம் ஒன்றுண்டு. ஆயிரம் பிறப்புகள் தோறும் சேர்ந்த தீவினையும் தீர்ப்பார்கள் இதில் முழுகி ஒரு அணுவளவு பொன் ஒரு அடியாருக்கு ஈவரேயானால், இப்பூமி முழுவதும் நிறைந்த சொர்னத்தினாலும் நவரத்தினங்களினாலும் நிறைந்த இவைகளையெல்லாம் சுவாமியினுடைய அடியாரிடத்தில் கொடுக்கும் பலனிலும் அதிகமாகும்.

இதில் முழுகிச் சிவப்புப் பசுவைத் தானஞ் செய்தவர்கள் வெள்ளையானைகள் சூழ்ந்து தாங்கப்பெற்ற சொர்னவிமானத்தின் மேல் ஏறிக்கொண்டுபோய் அரம்பையாதி மாதர்கள் சுவரிவீசப் பசுவின் மயிரொன்றுக்கு ஒருகற்ப காலம் சிவபதத்தில் இருப்பார்கள் காலையில் முழுகிக் கறுப்புப் பசுவைத் தானஞ் செய்தவர்கள் நீலமலைபோல் நீலரத்தினமிழைத்த விமானத்தில் ஏறிச் சூலாயுதம் பிடித்துக் கொண்டு பூதகணங்கள் தொடர்ந்து வரச் சிவபெருமானது பரமபதத்திலிருப்பார்கள்.

வெள்ளைப் பசுவைத் தானங் கொடுத்தவர்கள் ஆயிரம் வெள்ளை இடபங்கள் சூழ்ந்த விமானத்திலேறிக் கொண்டு தேவர்கள் வணங்க இறைவனடியை யடைவர் மழைக்குக் குடையும். வெயிலுக்குப் பாதரட்சை கொடுத்தோரும், குதிரை கொடுத்தோரும் இந்திர பதவியடைவர், கன்னிகா தானம் செய்தோர் சுவர்க்க லோகத்திலும், குபேரலோகத்திலும் பிரமலோகத்திலும் சென்று விரும்பியவற்றை யனுபவித்துத் தேவர்கள் வணங்கச் சிவபதவி யடைவார்கள்.

உத்தம தலங்களில் தவசிகளுக்குப் படைத்த அன்னத்தின் பலன், காசியில் பெரியோர்களுக்குப் படைத்த அன்னத்தில் ஒரு அன்ன பலனுக்கு ஒவ்வாது அத்தகைய காசியில் அனேக கோடி தவசிகளுக்கும் படைத்த அன்னத்தின்

சூரியன்

பலன் அருணாசலத்தில் படைத்த அன்னத்தில் ஒரு அன்ன பலனுக்கு ஒப்பாகாது.

பசுவினுடைய குளம்பு அடி அளவுள்ள பூமியை பிராமணர்கட்குத் தானஞ்செய்யின் பரமசிவத்தின் திருவடி நிழலிலே தனது சுற்றத்தாருடன் வாழ்வார்கள்; சுவாமிக்கு இடபதானம் செய்தவர்கள் இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு சிவலோகத்தில் பவனியாகப்போய் சுகிப்பார்கள்.

திருவண்ணுமலையில் சாலை வைத்தவர்களும், நந்தவனம் வைத்தவர்களும், கிணறுகள் குளங்கள் வெட்டினவர்களும் இந்திரபதவியடைவார்கள். ஆலயத்திலுள்ள பள்ளங்களை நிரவி மெழுகி விளக்கேற்றி வைத்தவர்களும், அலங்காரம் செய்தவர்களும், விட்டுணுவாய்த் 'திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்வார்கள். கோடைகாலத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்தவர்கள் தேவபதவியை யடைவார்கள், அடியார்கட்கு வஸ்திரங் கொடுத்தோர் ஒரு இழைக்கு அளவிறந்த காலம் சிவபதத்தில் வாழ்வார்கள்.

இத்தலத்தில் மடம் கட்டினவர்கள் அம்மடத்திலிருக்கிற எருதுகளுக்கு ஒரு கற்பககாலம் மோட்சத்தில் நிலை பெறுவார்கள். இத்தலத்தில் பலவிதமாய் இறந்தவர்கட்கும் விஷம்குடித்து இறந்தவர்கட்கும் பிதுர்யாகம் செய்தவர்கள் அவர் குலத்தினர் எல்லாம் நற்கதியினையடைவார். ஒரு காக்கையானது அத்தலத்துக் கோயிலில் பலிபீடத்தில் வைத்திருக்கிற பலியன்னத்தை வாயினுல் கிரகிக்கும்போது தன்னுடைய சிறகால் கீழேயடித்தது.

அதைச் சுவாமி பார்த்து கோயிலை விளக்கினதென்று அதற்குத் தெய்வலோக வாழ்க்கையளித்தனர். ஒரு பெருஞ்

சாளி கோயிலில் வளையுண்டாக்கும்போது மாணிக்கமணி ஒன்று அங்கே சிதறிச் சந்நிதியில் விளக்குபோலக் காண் பிக்கத் தீபங்கொடுத்ததென்று அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சாலோக பதவியை யளித்தனர்.

அம்மலையில் ஒருநாள் ஒரு சிலந்தி வாயினூலால் பின் னலிட, இது வஸ்திரஞ்செய்து கொடுத்ததென்று அச்சிலந் தியை அரசனாகப் பிறப்பித்து நல்ல ஞானத்தைக் கொடுத் துத் தேகவியோகமான பிறகு விஷ்ணு லோகத்தைக் கொடு த்தார்.

இத்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவ மென்று நினைத்து வைத்ததனால், அவன் மேலாகிய கதியைச் சேர்ந்து சிவனென்றும் இவனென்றும் பேதமில்லாமலிருக் கின்ற சாருப பதவியைப் பெற்றான். ஆகையால் திருவண் ணாமலையின் மகிமையை ஒருவராலும் இத்தகையதெனச் சொல்ல முடியாது. அதனருமை அப்பெருமானே அறிவார்.

தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமலை வலம்புரி சருக்கம்

அருணாசலத்தை வலஞ் செய்வது பிறப்பு என்னும் பெரிய கடலைத் தாண்டுவதற்கு ஒரு தோணியாகும் ஏழு நரகக்குழியிலும் புகுதாமல் அருமையாகிய முத்தியில் ஏறுவதற்கு ஏணியாகும். காணுதற்கரிய தவத்திற்கும், தருமத்திற்கும்,சம்பத்திற்கும் ஒருகாணியுமாயிருக்கும் ஒளியுள்ளநெற்றியையுடைய பார்வதியை இடது பக்கத்தில் வைத்திருக்கின்ற சுவாமியை மனமுருகிச் சந்தோஷமாகும் காசி முதலாக சொல்லப்பட்ட சிறப்பையுடைய தலங்களிலிருந்து சுவாமியைக் கற்பகாலம் பூஜைசெய்த பலமும், அனேககாலம் தவஞ்செய்தாலும் குரு சொல்லிய முறைப்படி சமாதியிலிருந்து அடைகின்ற சித்திகளும். அருணாசலத்தை வலம்வர வேண்டுமென்று சொல்லிய பலனுக்கு நிகராகாது அருணாசலத்தை வலம் செய்யென்று சொல்லுமளவில் பிரமஹத்தி பாவம் போய்விடும், நர்மதையாற்று நீரளவு மதுவைப் பானம் பண்ணிய பாவமும் வருத்தமுற்று நடுநடுங்கி ஓடிப் போகும்! குருவினுக்குச் செய்த பாவமும் பயந்து கருப்பங் குலைந்து ஓடிப்போகும். இறுதியைக் கொடுக்கும் பாவமும் அருணாசலத்தை வலஞ் செய்ய வேண்டுமென்று நினைத்த அளவில், சூறைக்காற்றின் எதிரிலிருக்கும் தீபம்போல் அவிந்துபோம், தந்தையைக் கொன்ற பாவமும் கருடனைக் கண்ட பாம்புபோல் நடுக்கமடைந்து ஓடிப்போகும் குழந்தைகளையும் மாதரையும் கொன்ற பாவமாகிய கடலும் வற்றிப்போம்

நம்முடைய சுவாமியின் திரவியம் திருடின பாவமும் தானிருக்குமிடம் எங்கேயென்று ஓடிப்போம். அருணாசலத்தை வலம்செய்ய வேண்டுமென்று நினைந்து ஓரடி எடுத்தவர்க்கு யாகம் செய்த பலன் சித்தியாகும். இரண்டடிக்கு ராஜசூய யாகபலன் உண்டாகும். நாலடிக்கு எல்லா யாகத்தின் பலனும் சித்தியாகும். அருணாசலத்தைப் பிரதட்சணம் செய்கையில் தூக்கிவைத்த ஓரடியின் பலன் பூமிப்பிரதட்சணம் செய்த பலன் தரும். இரண்டடியின் பலன் சருவதீர்த்தமாடிய பலன்தரும். மூன்றடியின் பலன் சோடசதானப் பலன் தரும். நாலடியின் பலன் அஷ்டாங்கயோக பலன் தரும். அவையல்லாமலும் வலமாகவைத்த ஓரடிக்குப் பூரா பலன்களெல்லாம் பலிக்கும். இரண்டடிக்கு இலிங்கப்ரதிஷ்டை பலன்தரும். மூன்றடிக்குக் கோடிவிமானம் தூபிகையுடைய கோயில்கட்டியபேறு தரும்.

அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓரடி வைத்தவர்கள் உருத்திரபத மடைவார்கள். இரண்டடி வைத்தவர்கள் மகேசுரபத படைவார்கள். மூன்றடி வைத்தவர்கள் கோடி தலைமுறையிலுள்ள மனிதரையும் பதவியிற் கொண்டு போய்ச் சேர்க்கும், அருணாசலத்தை வலமாகச் சிறிது தூரம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தை வீசுகின்ற வெள்ளிமலையாகிய கைலாயத்திற்குப் போகும் வழி விரைவில் தொலையும், அல்லாமலும் அம்மலையை வலமாகப் போகும்போது பருக்கைக் கல்லாலும் அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவரைக் கண்டால் எமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போம். அருணாசலத்தை வலம் வந்தவர்கள் பாதத்தில் ஒட்டிய தூசு ஒன்று காற்றினால் நரகத்தை ஒத்தவிடங்களில் சேர்ந்தால் அதுவும் கைலாயம் போலப் பரிசுத்தமாம். அத்தூசு மனிதர் தேகத்திற் பட்டால் இறப்பும் அவர்களைப் பின்பற்றிய பிறப்பும் நீங்கும். அப்படி

யானால் பிரதட்சணம் செய்தவர்கள் பெருமைகளை என்ன வென்று சொல்ல முடியும்!

அருணாசலத்தை வலஞ்செய்தவர்கள் பரமசிவம் எழுந்தருளியிருக்கிற கைலாய மலையை யடைந்தவுடன், சந்திரன் வெள்ளைக்குடையைப் பிடிப்பான், சூரியன் விளக்கெடுப்பான், தரும தேவதை கைதாங்கி வரும், இந்திரன் வருகிற வழியில் புட்பங்களைப் பரப்புவான், குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில் வருவான், அஷ்டவசுக்கள், புட்பவருஷம் பொழிவார்கள். மேனகையும், அரம்பையும், ஊர்வசியும் திலோத்தமையும், வீணை வாத்தியத்துடனே சங்கீதம் பாடி நடனம் செய்து கொண்டு வருவார்கள். கங்கையும், யமுனையும் சாமரம் வீசிக்கொண்டு வருவார்கள். சாப்பிடத்தகுந்த அமிர்தத்தையும், மலையளவு ஆடைகளையும் மேகம் எடுத்துக்கொண்டு எதிரே வரும். இலக்குமி பூவும், கஸ்தூரியும் கொண்டு வருவாள், முன்னே நான்கு வேதங்களும் புகழ்ந்து கொண்டுவரும்; அருணாசலத்தை வலம் செய்வோர்களுடைய வழியிற் கிடக்கின்ற பாறக்கல்லுகளை மிதித்துச் சிவந்த பாதம் பின்பு தேவர்களுடைய மகுட கோடிகளில் பதிந்துப் பிரகாசிக்கும் இரத்தின கோடிகள் தாக்கி மறுபடியும் சிவக்கும் அருணாசலத்தை வலம் செய்யாதவர்கள் கால் நடையுண்டாய் நடந்து திரியப்பெற்றென்ன பிரயோசனம்? கறுத்த கண்கள் நன்றாகத் தெரியப் பெற்றிறென்ன? மானிடராகப் பிறந்தென்ன மாமிசந் திரண்ட புழுக்களையுடைய தேகத்திற் சேர்ந்து நரகத்தில் வீழ்ந்து அலைந்து துன்பப்படுவதல்லாமல் பிழைக்கமாட்டார்கள். நல்ல கற்புடைய மாதர்கள் போகம் வேண்டினும், புத்திசாலியுள்ள பிள்ளை பெறவேண்டினும் மும்மலம் ஒழிய வேண்டினும், கல்வியும், அழகு வேண்டினும், செல்வம் வேண்டினும், கீர்த்தி வேண்டினும் அருணாசலத்தை வலம் செய்யவேண்டும்.

ஆதிவாரத்தில் அருணாசலத்தை வலம் செய்தவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதம் சேர்வார்கள். சோமவாரத்தில் வலம் செய்தவர்கள் இந்திரன் போல ஏழு உலகத்தையும் ஆண்டு சிவசொரூபமடைவார்கள். மங்கள வாரத்தில் வலம் செய்வோர் கடனையும்; தரித்திரத்தினையும் நீங்குவார்கள், புதவாரத்தில் வலம்செய்வோர் நான்கு வேதங்களும், ஆறுசாஸ்திரங்களும்; அறுபத்து நான்கு கலைகளும். தெரிந்து முக்தியடைவார்கள். குருவாரத்தில் வலம் செய்வோர் திரிமூர்த்திகளும் புகழும்படி முனிவர்களுக்கு எசமானுவர். சுக்கிரவாரத்தில் வலஞ்செய்வோர். விட்டுணு பதமடைவர். சனிவாரத்தில் வலஞ்செய்வோர் நவக்கிரகங்கள் பதினொருமிடத்திலிருந்த பலன் கொடுப்பார், சிவராத்திரியிலும், வருஷப்பிறப்பிலும், ஐப்பசிமீ முதலிய மூன்று மாதங்களிலும் வலம்செய்வோர் மேற்சொன்ன பலன்களனைத்தையும் பெறுவர். உத்தராயணம் தட்சணாயனம், மாசிமகம், அர்த்தோதயம், சூரியகிரகணம் விதிபாதம் முதலிய நாட்களில் வலம் செய்வோர் கோடிபங்கு அதிகமாகப் பலன் கிடைக்கும் தினந்தோறும் வலம் செய்வோர் பலனை யார் சொல்ல வல்லவர்.

அருணாசலத்தை வலம்செய்ய உத்தேசிக்கின் பிரதட்சணம் செய்யும் அன்றைக்குப் பெண்களைச் சொப்பனத்திலும் நினையாமல், நீரில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திர முடுத்தி விபூதி உத்திராக்கந் தரித்து இயன்ற தானங் கொடுத்து அங்கங்கிருக்கிற தேவர்களைப்பணிந்து' சட்டை, போர்வை, குடை, செருப்பு இல்லாமல், பயம், கோபம், சோகமின்றி குதிரை, யானை, வண்டி ஏறுமல் தாம்பூலந்தரிக்காமல், கைகளை வீசாமல், சந்தோஷத்துடன் கர்ப்பஸ்திரீ நடக்கிறது போலப் பஞ்சாட்சரத்தியானம் செய்துகொண்டு, வந்து அடியாருடனிருந்து சுத்தபோஜனம் செய்யவேண்டியது. இவ்விதமாக அத்தலத்திலிருக்கிறவர்கள்செய்யவேண்டி

யது. அதிக தூரத்திலிருந்தவர்கள் தங்களுடைய வருந்தத்தி ஞல். எவ்விதமாக வலம்செய்தாலும் நன்மையாம்

திருமலை வலம்புரிச் சருக்கம் முற்றிற்று.

ஓம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதித்தச்சருக்கம்

ஸ்ரீ அருணாசலமென்னும் மலையோடு மற்ற மலைகளை யும் சமமென்று நிந்தை சொன்ன மனிதர்வாயில் பற்றுன் டாகிப் புதைந்து புழுக்கள் நெளிந்து புலால் நாற்றம் நாறு கின்ற நீர்தேகமுழுவதுங் கசிந்து மிகவும் இரத்தமாரி சொரி யும். அருணாசலத்தை நிந்தித்த மனிதர்களை எமதூதர்கள் செக்கில் அனேகதரம் போட்டு அரைத்து எடுப்பார்கள். அவர்கள் வாய்களை நெருப்பிற் போட்டுக் காய்ச்சிய கத்தியி ஞலறுப்பார்கள். அடித்து நெய்யிலே வேகச்செய்வார்கள். மேலும் அவர்களைப் பஞ்சாகத்துவைத்து அரக்கை உருக்கி வாயிலேவிட்டு விஷத்தைக் குடிப்பித்துத் தீமையாகிய நர கிலே தள்ளுவார்கள். சூரியன் அருணாசலத்தை மற்ற மலை கள்போல நினைத்து தனதுதேரை அவ்வருணாசலத்தின் உச்சி யில் வழியாக நடத்தினன். அச்சமயத்தில் மலை வெடித்து அதன் உள்ளிருந்து அக்கினி எழும்பி சூரியன் ரதம்பொரிந்து போய்விட்டது. அப்போது சூரியனைப்பார்த்துப் பிரமாவான வர், " ஓ சூரியனே! இம்மலையை மற்றையமலைகளைப்போல் நினைத்து அகங்காரத்தினுல் இதன் உச்சியின் மேல் உன் தேரினை இழந்தாய் நீ இப்போது இம்மலையை வலம்செய்து வந்தால் உன்பாபம்மன்னிக்கப்படும்" என்றனர் அங்ஙனம் சூரியன் பிரதட்சணம் செய்து சுவாமியின் அனுக்கிரகம்

பெற்றனன், அதுமுதல் சூரியன் சித்திரைமுதல் பங்குனி ஈறுகச் சொல்லபட்ட 12 மாதங்களிலும், முன்பயத்தினால் மலையை வலஞ்செய்து கொண்டு இடப்புறமாகவும் உச்சியின் மேலும் போவான். அம்மலைக்குச் சமீபத்தில் வரும்போது தோத்திரஞ் செய்து புட்பமாரி பொழிந்து செல்வான்.

ஆதித்தச் சருக்கம் முற்றிற்று.

பிரதத்தராஜன் சருக்கம்

முற்காலத்தில் ஒருநாள் வடதேசத்திற்கு அரசனாயிருக்கின்றவன்; கங்காநதித் துறையை உடையவன்; தருமமே செய்பவன்; பிரதத்தமகாராஜன் என்னும் பெயரையுடையவன், இவன்யாத்திரையாகப் பிரயாணப்பட்டு எல்லாதேசங்களும் சென்று பல திவ்விய தலயாத்திரைசெய்து ஸ்ரீ அருணாசலமடைந்து சிவாலயம் புகுந்தான். அப்போது அவ்வாலயத்தில் ஒரு தாசிப்பெண் கரும்பின் இரசம்போன்று சுவை நிறைந்த பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கக் கேட்டு தன் தேசத்திற்கு அப்பெண்ணை அழைத்துக்கொண்டு போக மனதில் நினைத்தான். உடனே அவ்வரசனுக்குக் குரங்குமுகம் வந்துவிட்டது, எல்லோரும் கண்டு நகைக்க ஆரம்பித்தார்கள். அரசன் தெரிந்து தனது எண்ணம் தப்பெனத்தெரிந்து உடனே தன் து யானைகளையும், குதிரைகளையும், சிவிகைகளையும். இரத்தினாபரணங்களையும். அனேக பெண்களையும் சுவாமிக்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டான். உடனே குரங்குமுகம் நீங்கி சுபாவ முகமடைந்து தனது தேசம்போய்ச் சேர்ந்தான். ஸ்ரீ அருணாசலேஸ்வரபதார்த்தத்தைக் கிரகிக்க எண்ணினவர்க்கே இக்கதியானால் அவ்வாலயத் திரவியங்களைக் கிரகித்தவர்கள் அடையும் கதி என்னவாக முடியும்,

பிரதத்தராஜன் சருக்கம் முற்றிற்று.

பாவந்தீர்த்த சருக்கம்

ஒருகாலத்தில் பிரமன் சபையில் அஷ்டவசுக்கள் வந்திருந்து தங்கள் தங்களைப்பற்றியும், அவற்றால் தங்களுக்கு வந்திருக்கிற கீர்த்திகளைப் பற்றியும் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள். பிரமன் அவர்களை நோக்கி, "அஷ்டவசுக்களே! நீங்கள் அகஸ்தியர் முதலிய பெரியவர்கள் முன்னிலையில் உங்கள் தவங்களைப்பற்றி மிகப்புகழ்ந்து பேசிக்கொண்டபடியால், உங்களுடைய தவம் அப்பிரயோசனமாகப் போகக்கடவது" என்றனர். அவர்கள் பயந்து உடனே காசிக்குச் சென்று தங்கள் பாவம்போக அனேக காலம் தவஞ் செய்து வந்தனர். ஒருநாள் அவர்கள்முன்னிலையில் காசிவிஸ்வநாதர் பிரத்தியட்சமாகி "தேவர்களே? நீங்கள் ஸ்ரீ அருணாசலத்தையடைந்து சூழ்ந்து கிழக்குத் திக்குகளிலும் இருந்து தவம் செய்யுங்கள்" என்றனர். அங்ஙனமே அவர்கள் செய்து வருகையில், அம்மலை அவர்கட்கு எட்டுமுகமாய் விளங்கின அவர்கள் எட்டுதிக்குகளிலுமிருந்து சுவாமியைப் பூஜித்தபடியால் பழையபடியே தங்கள் பதவிகளைப்பெற்று சுகமாக வாழ்ந்து வந்தனர்.

இந்திரனானவன் ஒருகாலத்தில் பிரமதேவனைச் சந்தித்து "ஐயனே! உலகில் அனேகர் என் பதவியை யடையும்பொருட்டுத் தவஞ்செய்து வருகிறார்கள். அவர்கள் தவங்களை அழித்து விடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனன். அதற்கு பிரமன் சம்மதித்துத் தான் முந்தி படைத்துள்ள அபார அழகு வாய்ந்துள்ள இந்திரலோகத்துப் பெண்கள் தேவலோகத்துப் பெண்கள், நாகலோகத்துப் பெண்கள்.

பூலோகத்துப் பெண்கள் ஆகிய இவாகள் அழகில் சிறிது சிறிது எடுத்துத் திலோத்தமை என்னும் பெண்ணை உண்டாக்கிய பிரமனைத் தந்தையென நினைத்து அவள் ஓடி ஒளித்துக் கொண்டாள்.

அவளைத் தேடிப்போய் பிரமன் சமீபிக்கையில் அவள் பெண்மானாகி ஓடினாள். பிரமன் ஆண்மானாகித் தொடர்ந் தான். அவள் பெண்கிளியாகப் பறந்தாள். பிரமன் ஆண் கிளியாகத் தொடர்ந்தான், பின்பு அவள் தனக்கு வேறு கதி ஒன்றுங் காணாது, அருணாசலத்தையடைந்து சுவாமி சந்நிதி யில் முறையிட்டாள். உடனே சுவாமி வேடவடிவமாகவும் வேதங்கள் நாய்களாகவும் புறப்பட்டு வெளிவந்தவுடன் கிளியாகிய பிரமன் கண்டு பயந்து தன் வடிவெடுத்துச் சுவாமி பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தனன். சுவாமி அதைக் கண்டு, "பிரமனே! நீயே திலோத்தமையைப் படைத்து அவளை நீயே விரும்பினை; ஆதலால் உன் பாவம் கற்பகோடி காலத்திலும் தீரமாட்டாது; ஆயினும் இம்மலையை தரிசித் தமையாதலால் உன் பாவம் நீங்கிப் புண்ணியனாயினை; உன் பதவியைச் சேர்வாய்" என்றுகூறி சுவாமி மறைந்தருளினர்.

முற்காலத்தில் பரமசிவனுடைய திருவிளையாட்டினாலே கற்பகாலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம்நீங்கி வெளிச் சமுண்டாகிற காலத்தில், அவ்வந்தகாரத்தில் சிறிது நின்ற அக்காலத்தில் விட்டுணு திருப்பாற்கடலில் நித்திரை செய்து கொண்டிருக்க, சிவமயமாகிய யோகியர்கள் பரமசிவனை நினைத்தார்கள். அப்போது சிவபெருமான் ஒரு சோதி ரூபத் தை யடைந்தார். உடனே உலகமெல்லாம் உண்டாயின. ஊழிகால முடிந்து அந்தகாரம் நீங்கியும் நித்திரை செய்யும் விஷ்ணுவிடத்தில் வந்து வாழியென்று சொல்லி யோகியர் கள் எழுப்புதலும், அவ்விஷ்ணு அதிக பயத்துடன் எழுந்து, "அந்தோ! நான் உலகம் உண்டாக்கும் பொருட்டுப் பிரமனை சிருஷ்டிக்காமல் நித்திரை செய்து விட்டதனால் தீவினையைச் சம்பாதித்துக் கொண்டேனே" என மன வருத்தமுற்று சுவாமியை நினைத்தார்.

உடனே தேவாதி தேவனாகிய பரமசிவம் படிகமலை மேல் ஜோதி தோன்றுதல் போல, இடபவாகனத்திலெழுந்

தருளிக் காட்சி கொடுக்க விஷ்ணுவானவர், ''ஐயனே நித்திரையினுலுண்டாகிய தீவினையை நீக்கி அருள்செய்ய வேண்டும்'' என்றனர். விஷ்ணுவே! நீ ஜோதிமயமாகிய அருணசலத்திற்குப் போய்ப் பூஜை செய்தால் உன் வினை போகும்: அருணசலத்திற்கும், எனக்கும் வடிவம் ஒன்றே; பேதமில்லை நான்கு வேதங்களும் இவ்வுண்மை யறிய மாட்டா; பூர்வத்தில் பலயோகியர்களும்; விஷ்ணுக்களாகிய நீங்கள் பலரும், தொண்ணூற்ருறு பிரமர்களும் அத்தலத்தில் பூஜை செய்திருக்கிறீர்கள். சந்திரன் தனது மனைவியாகிய இருபத்தாறு நாயகிகளுடைய போகத்தினை மறந்துவிட, இவ்வுண்மையறிந்த அப்பெண்களின் தந்தை தக்கன் கேள்வியுற்றுச் சந்திரன் உடல்குன்றிப்போகச் சபித்தான் அச்சாபத்தைச் சந்திரன் அருணசலத்தில் வந்து நீக்கிக் கொண்டான்'' எனத் திருவாய்மலர்ந்தருளினர். அங்ஙனமே விஷ்ணு அருணசலத்தை யடைந்து தரிசித்துப் பணிந்து பூசித்துத் தன்னுடைய வினையை நீக்கிக்கொண்டனர்.

பாவந்தீர்த்த சருக்கம் முற்றிற்று.

புளகாதிபன் சருக்கம்

புளகன் என்னும் ஓர் அசுரன் ஒருநாள் புனுகுபூனை உருவமெடுத்து அருணசலத்தின் மேல் உலவித் தனது புனுகைச் சிதறியபடியால். சுவாமியினுல் அதிக பலம் பெற்றுப் பூமியிலுள்ளவர்கள் பயப்படவும்; தேவர்கள் முனிவர்!கள் துன்பப்படவும், துர்க்கிருத்திபம் செய்து வந்தான். இதைக்கண்ட தேவர்கள் திருக்கைலாயத்தை அடைந்து அவ்வரசனது தீமையைச் சொல்லி முறையுமிட்டனர். இதனைக்கேட்ட சுவாமியானவர் தன் மலையின்மீது அவ்வசுரன் புனுகு சிந்தியதால் அவனைக்கொல்ல மனமிசையாது

அவனை அழைத்து, புனுகுவடிவங்கொண்ட உன்பிராணனை விடு என்று சொல்லிய அளவில், அவ்வசுரன் சொல்லுவான் "பரமசிவனே! அடியேன் கேட்டுக்கொள்ளும் வரங்களை தந்தருளவேண்டும்; நான் எடுத்த உருவமாகிய புனுகுபூனை யின் மரபில் வருகின்ற புனுகு உம்முடைய திருமேனியில் ஏற்றுகொள்ளவேண்டும், அதனால் புழுகணி யிறைவனென உமக்குத் திருநாம முண்டாக வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டு அசுரன் உயிர்விட்டான், அவ்வசுரன் நற்கதி சேரும்படி சுவாமி அனுக்கிரகம் செய்தனர். தேவர்கள் முனி வர்கள் யாவரும் பயந்தீர்ந்து சுவாமிக்குப் புனுகு சாத்திக் களித்தனர். அதுமுதல் புனுகும் பனிநீரும் கூட்டுவர்க்கச் சந்தனமுமாகிய இவைகளில் அனுவளவேனும் சுவாமிக்குச் சாத்தித் தரிசித்தவர்கள் மோட்சம் அடைவார்கள்.

"அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம்வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேல்
கஞ்சமற்ற நீரும்வாழி சைவம்வாழி வாழியே"

புளகாதிபன் சருக்கம் முற்றிற்று.

சீனிவாசா பிரஸ் குரூ, சென்னை-7.

நவீன ஹிப்நாடிசம் மெஸ்மரிசம் மேஜிக் வாயுவேக மனோவசிய சாஸ்திரம்

இந்த நூலில் மனோவசியத்தைப்பற்றியும் அதை அப்யாசிக்க வேண்டிய வழிகளைப்பற்றியும் எழுதப்பட்டிருப்பதுடன் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உளாவும் வழியைப்பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுவது என்பதைப்பற்றியும் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழிகளைப் பற்றியும் மனுவசிய சக்தியினால் நாம் உலகிற்கு செய்ய வேண்டிய நன்மை, செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களும் இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும். (சித்திரப் படங்களுடன் அடங்கியது.)

இதன் விலை ரூ. 3-50

தேவேந்திரநாத் மாயாஜால விநோதம்

வாரிசூழுலகின் கண்வசிக்கும் ஆரிய! நண்பர்காள்! இங்கிலீஸ் கைபுரட்டு வித்தைகள் மலையாளவித்தைகள் பீதாம்பர வித்தைகள் பிரஞ்சி வித்தைகள் மூலிகைசல்லிய வித்தைகள் கண்கட்டு வித்தைகள் அஷ்டமாசித்திகள் செய்யலாம் வசியவகைகள் செய்யலாம் மணலைக்கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திரஜாலம் செய்யலாம், இந்திரஜாலம்கோகர்ண வித்தை, பாதாள அஞ்சனம் செய்தல், பச்சைப்பாம்பு செய்தல் பேயாட்டுதல், மாஞ்செடிமுளைத்தல், மோடிவைக்கும்வித்தை இதைபோன்ற அற்புதஜாலங்கள் 2000 சேர்ந்தவை செழுமணாவைசித்திரக்கவி தேவேந்திரநாத்பண்டிதர் அவர்கள் தான் சொந்தமாய்செய்து காண்பித்த ஜாலங்களை இதில் தெளிவுற காணலாம்.

இதன் விலை ரூ. 4.

ஷண்முகானந்த புத்தகசாலை பார்க்டவுன், சென்னை-3.